# நித்ய அமைதியினை நோக்கி

(மகப்பேறு மரணங்களை பற்றிய சிறுகதை தொகுப்பு)

# QUIETUS– MATERNITY TO ETERNITY

## – Few Mother's Journey to Eternal Rest

(Short stories on Maternal Death)

பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை, சென்னை – 06.
tndphpm.com @tndphpm @tndphpm @tndphpm @tndphpm @tndphpm tndphicon2024.com

மரு.தி.சி. செல்வவிநாயகம், M.D.,DPH.,D.N.B.,
இயக்குனர், பொது சுகாதாரம் (ம)
நோய்த் தடுப்பு மருந்துத்துறை,



# அணிந்துரை

"மங்கையராய் பிறப்பதற்கே மாதவம் செய்திட வேண்டுமம்மா" என்ற கவிமணியின் கூற்றிற்கிணங்க பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அறிவை, தெரிவை, பேரிளம் பெண்என்ற ஏழு பருவங்களில் மங்கை பருவத்தில் அடையும் பெண்மையில் தாய்மை என்ற புனித நிலை போற்றக்கூடியது. தமிழ் நாட்டில் உள்ள கர்ப்பிணி பெண்களை கண்களை இமை பாதுகாப்பது போன்று அவர்களின் நலத்திற்காக பல்வேறு சிறப்பு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. அரசின் சிறப்பு திட்டங்களினாலும், தொடர்ச்சியான சீரிய முயற்சிகளாலும், தமிழ் நாட்டில் தாய்மார்கள் இறப்பு விகிதம் கணிசமாக குறைக்கப்பட்டுள்ளது. அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் இலவசமாக கர்ப்பகால பராமரிப்பு சேவைகள் மற்றும் மகப்பேறு உதவித் திட்டங்கள் சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மகப்பேறுக்கு முந்தைய தாய்மார்களின் ஆரோக்கியம் மற்றும் நலவாழ்வுக்காக பல பன்முக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

சில நிகழ்வுகளில் வருந்தத்தக்க வகையில் தடுக்கப்படக்கூடிய மகப்பேறு மரணங்கள் ஏற்படுகிறது. இதைக்கருத்தில் கொண்டு இந்த கையேடானது சுகாதாரப்பணியாளர்கள் மற்றும் கர்ப்பிணி பெண்களுக்கும் அவர்களை சார்ந்த குடும்ப உறுப்பினர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக நன்முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அவர்கள் கர்ப்ப காலத்திலும், பிரசவத்திற்கு பின் கவனிப்பு காலத்திலும் ஆரோக்கியமாக வாழ வழிவகை செய்வதற்கும் இந்த கையேட்டினை நன்முறையில் பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன். இந்த புதுமையான நடவடிக்கையை எடுப்பதில், நாட்டிலேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே கர்ப்பிணி பெண்கள் மற்றும் அவர்களது குடும்பதினர், மருத்துவர்கள், சுகாதாரப் பணியாளர்கள் ஆகியோரின் ஆலோசனையை புறக்கணிக்காமல் சிகிச்சை மேற்கொண்டு மகப்பேறு தாய்மார்களாகிய தாங்கள் தங்களின் பாதுகாப்பான கர்ப்ப காலம் மற்றும் பிரசவ பின் காலம் மற்றும் குழந்தையின் பிரகாசமான எதிர்காலத்தை உருவாக்க அனைவரும் ஒன்றிணைந்து பாடுபடுவோம் என்பதை இதன் மூலம் கேட்டுக் கொள்கிறேன்.

இயக்குனர்

மரு.J.நிர்மல்சன்., M,B,B,S.,D,P.H
இணை இயக்குநர் (தாய்சேய் நலம்)
பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு
மருந்துத்துறை



# அணிந்துரை

***"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"***

தாய்மையை பாதுகாக்கும் பணியை செவ்வனே செய்வதில் நமது பொதுசுகாதாரத் துறையின் பங்கு முக்கியமானது. கருத்தரித்ததில் இருந்து, பிரசவத்திற்கு முந்தைய தாயின் ஆரம்ப பதிவு தொடங்கி, பிரசவம் மற்றும் பிரசவத்திற்கு பிந்தைய காலம் வரை அவர்களின் உடல் நலம் கண்காணிப்பது உறுதி செய்யப்படுகிறது. ஒரு வீடோ, நாடோ முன்னேற்றப் பாதையில் செல்கிறது என்றால் அதற்கு முக்கிய பங்கு வகிப்பவள் பெண். ஒரு பெண் தாய்மை அடைந்த நாள் முதல் அவளுக்குள் உண்டாகும் மாற்றங்களையும், வலியையும் பொருட்படுத்தாமல் உயிருக்கு உயிர் கொடுப்பவள். அந்த தாய்மையை முழுமையாக அனுபவிக்க இயலாமல் ஒரு சிலர் பிறந்த பச்சிளங் குழந்தையையும், தனது குடும்பத்தையும், சிறிய அளவிளான அலட்சியங்கள் மூலம் மீளாத் துயரில் ஆழ்த்திவிட்டு செல்கின்றனர். கர்ப்ப காலத்தில் சின்ன சின்ன அலட்சியங்கள் எவ்வளவு பெரிய சிக்கலை ஏற்படுத்தும் என்பதை இந்த புத்தகத்தில் கூறப்பட்ட ஒவ்வொரு உண்மை சம்பவமும், இனிவருங்காலங்களில் கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் அவர்கள் குடும்பத்திற்கு ஒரு திறவு கோலாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

இணை இயக்குநர்

# பங்களிப்பாளர்களின் பட்டியல்

| | |
|---|---|
| மரு.தி.சி.செல்வவிநாயகம்.,M.D.,D.P.H.,D.N.B., | இயக்குநர் |
| மரு.J.நிர்மல்சன்.,MBBS.,DPH | இணை இயக்குநர் (தாய்சேய் நலம்) |
| திருமதி.சசிதேவி | மாநில இணை தாய்சேய் நல அலுவலர் |
| மரு. செந்தில்வேல்.,MBBS.,DPH., | மாவட்ட சுகாதார அலுவலர் |
| மரு. பிரபாகரன்.,MBBS.,DPH., | நகர நல அலுவலர் |
| மரு. பூங்கொடி | மருத்துவ அலுவலர் |
| மரு. J.கவிதா | மருத்துவ அலுவலர் |
| மரு. வசந்த் | மருத்துவ அலுவலர் |
| திருமதி. ஜெயந்தி | முதன்மை செவிலிய அலுவலர் |
| திருமதி. மகேஸ்வரி | முதன்மை செவிலிய அலுவலர் |
| திருமதி. கயல்விழி | உதவி இயக்குநர்(புள்ளியியல்) |
| திருமதி. பரமேஸ்வரி | முதன்மை செவிலிய அலுவலர் |
| திருமதி. ஜெசி மேரி | முதன்மை செவிலிய அலுவலர் |
| திருமதி. கவிதா | தாய்சேய் நல அலுவலர் |
| திருமதி. அகிலா | தாய்சேய் நல அலுவலர் |
| திருமதி. பார்கவி | தாய்சேய் நல அலுவலர் |
| திருமதி. சுகன்யா | தாய்சேய் நல அலுவலர் |
| திருமதி. நித்யா | தாய்சேய் நல அலுவலர் |
| திருமதி. செல்வ காமாட்சி | தாய்சேய் நல அலுவலர் |
| திருமதி. அம்பிகா | தாய்சேய் நல அலுவலர் |
| திருமதி. பாக்கியலெட்சுமி | தாய்சேய் நல அலுவலர் |
| திருமதி. கார்த்திகா | தாய்சேய் நல அலுவலர் |
| திருமதி. தேவி ஸ்ரீ | தாய்சேய் நல அலுவலர் |
| திருமதி. விஜயலெட்சுமி | தாய்சேய் நல அலுவலர் |
| திருமதி. கலைவாணி | தாய்சேய் நல அலுவலர் |
| திரு. சுரேஸ் | தாய்சேய் நல அலுவலர் |
| திருமதி. சீதாசெல்வி | தாய்சேய் நல அலுவலர் |
| திருமதி. விஜய சித்ரா | தாய்சேய் நல அலுவலர் |
| திருமதி. கீதா | தாய்சேய் நல அலுவலர் |
| திருமதி. கௌசல்யா தேவி | தாய்சேய் நல அலுவலர் |
| திருமதி.செல்வமாரி | நேர்முக உதவியாளர் |
| திருமதி.மோகன லஷ்மி | தரவு உள்ளீட்டாளர் |
| செல்வி.அனிதா | தரவு உள்ளீட்டாளர் |

# பொருளடக்கம்


| வ. எண் | மகப்பேற்றின் கண்ணீர் கதைகள் | பக்கம் |
|---|---|---|
| 1 | கேட்க முடியவில்லை– என் குழந்தையின் அழுகுரலை | 7 |
| 2 | மாத்திரையை மறந்தேன் – உயிரை இழந்தேன் | 9 |
| 3 | இதயம் பேசுகிறது | 11 |
| 4 | சிதைந்த கனவு | 12 |
| 5 | கால தாமதம்– காலன் பாதம் | 14 |
| 6 | வரமா? சாபமா? | 16 |
| 7 | அலட்சியம் பேராபத்து!! | 18 |
| 8 | எங்கே என் ஜீவன்!! | 19 |
| 9 | மகளை இழந்த தாயின் மனக்குமறல் | 22 |
| 10 | கலைந்த கனவுகள் | 24 |
| 11 | எதிர்பார்ப்பு ஏமாற்றமானது | 27 |
| 12 | என் குழந்தை அனாதை இன்று ... | 30 |
| 13 | இரவிற்குப்பின் விடியல் ஆரம்பம் | 33 |
| 14 | என் சுவாசக் காற்றே!! | 37 |
| 15 | இன்னுயிரை இழந்த தாயின் தவிப்பு | 38 |
| 16 | காற்றினிலே, கலந்த ஜீவன் | 40 |
| 17 | பாதை மாறிய பயணம் | 44 |
| 18 | உதிரமே – உயிரே!! | 47 |
| 19 | அறிந்தும் அறியாததும்! | 49 |
| 20 | சிறு அலட்சியம் பேரிழப்பு | 52 |
| 21 | என் இன்ப வாழ்வின் எமன் | 55 |
| 22 | சிப்பிக்குள் முத்து | 57 |
| 23 | சொர்க்கத்திலிருந்து தாய்! | 60 |
| 24 | காற்றில் கரைந்த கீதம்! | 63 |
| 25 | சின்னஞ்சிறு கூட்டுக்குள்ளே சொர்க்கம் இருக்கு!! | 65 |
| 26 | அலட்சியம் – குடும்பம் – தவிப்பு | 67 |
| 27 | அமைதியின் பயணம் | 69 |
| 28 | கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் | 71 |
| 29 | கூடு விட்டு ஆவி பிரிந்தது ஏன்? | 73 |
| 30 | கவனக்குறைவு | 75 |
| 31 | மீளாத்துயரம் | 77 |
| 32 | படித்த முட்டாள் நான் | 80 |

| வ. எண் | மகப்பேற்றின் கண்ணீர் கதைகள் | பக்கம் |
|---|---|---|
| 33 | அறிவுரை கேளுங்கள் | 81 |
| 34 | காலனின் காலடியில் | 82 |
| 35 | யோசிக்க வைத்தவை | 85 |
| 36 | கனவே!! நனவே!! | 88 |
| 37 | பிரசவம்– மறுபிறவி!! | 90 |
| 38 | நெருங்க மறுத்த காற்று | 92 |
| 39 | பாரம் சுமக்கும் மனசு | 93 |
| 40 | இரத்தத்துடன் ஒரு யுத்தம் | 94 |
| 41 | காசநோய் எனும் காலன் | 95 |
| 42 | பேராசை –பெரும் நஷ்டம் | 96 |
| 43 | ஒரு தாயின் துக்கம் | 97 |
| 44 | எல்லாம் முடிந்த பின் | 99 |
| 45 | மண்ணிலிருந்து விண்ணிற்கு | 99 |
| 46 | விதியின் விளையாட்டு | 100 |
| 47 | மகளே…… என் மகளே | 103 |
| 48 | வெறுமையும் தனிமையும் | 105 |
| 49 | காமாலை காலன் | 107 |
| 50 | மௌனக் கேள்வி | 108 |
| | **மகப்பேற்றின் கண்ணீர் கவிதைகள்** | |
| | | |
| 1 | நெருங்க வீடாதீர் | 110 |
| 2 | கருவறை கல்லறையா? | 112 |
| 3 | ஆசை – நிராசையே | 114 |
| 4 | திரும்ப முடியாத பயணம் | 116 |
| 5 | தடம் மாறிய தாலாட்டு | 119 |


**குறிப்பு:** இந்த உண்மைக் கதைகளில் வரும் பெயர்கள் மற்றும் இடங்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

## 1. கேட்க முடியவில்லை –என் குழந்தையின் அழுகுரலை!

26 வயதில் மகப்பேறு காலத்தில், பிறந்து எட்டு நாட்களே ஆன பச்சிளம் குழந்தையை தவிக்க விட்டுப் போன மதுரையைச் சேர்ந்த சிவரஞ்சனி பேசுகிறேன். நான் இரண்டு வருடங்களுக்கு முன்பு, சுதந்திர தினேஷ் என்பவரை திருமணம் செய்தேன். நான் திருமணம் ஆன முதல் மூன்று மாதத்திலேயே முதல் கர்ப்பம் தரித்திருந்தேன். எனக்கு முதல் ஆண் குழந்தை சுகப்பிரசவத்தில் ஆரோக்கியமாக பிறந்தது. முதல் குழந்தைக்கு மூன்று வயதாகிறது. குழந்தை நல்ல ஆரோக்கியத்துடன் இருந்தது. சில நாட்களில் நான் இரண்டாவது கர்ப்பம் தரித்தது போல் அறிகுறிகள் தென்பட்டன. எங்கள் ஊரில் உள்ள கிராம செவிலியரிடம் போய் பரிசோதனை செய்து,கர்ப்பம் தரித்தது உறுதியானது. மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. எனது குடும்ப உறுப்பினர்களும் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். முதல் ஆண் குழந்தை என்பதால், இரண்டாவது பெண் குழந்தை பிறக்க வேண்டும் என மிகவும் ஆசை இருந்தது. ஒரு நாள் அங்குள்ள மருத்துவமனைக்கு செக்கப் செய்யப் போனேன் நானே ஒரு தேதியை தெரிவித்தேன் அந்த தேதியை வைத்து என் குழந்தை பிறக்கப் போகும் தேதியை செவிலியர் கூறினார். அங்குள்ள மருத்துவர் கர்ப்பகால அறிவுரைகளை கூறினார் .மருத்துவர் தவறாமல், பரிசோதனைக்கு வர வேண்டும் என்று கூறினார். பின்பு எனக்கு ஸ்கேன் பார்க்கும் பொழுது, என்னுடைய பிரசவ தேதி 22.6.2024 என்று கூறினார்கள். மற்றும் என்னுடைய கர்ப்ப காலத்தில் அல்லது பிரசவ காலத்தில் ஏதாவது சிக்கல்கள் வருமா என்று பரிசோதனை செய்தார்கள். பரிசோதித்து பின் எந்த ஒரு பிரச்சனையும் இல்லை,என அங்குள்ள மருத்துவர் கூறினார். எனது பத்தாம் வார பேறு காலத்தில் கர்ப்ப காலத்திற்கான, தடுப்பூசியைப் போட்டுக் கொண்டேன். எனது பேறுக்காலத்தின் போது என் கணவரும் மற்றும் என் குடும்பத்தினரும் என்னை நன்றாக கவனித்துக் கொண்டனர். என்னுடைய 38 வது வார கர்ப்பத்தின் போது,எனது ரத்தத்தின் அளவு குறைந்திருந்தது. இதனால் அங்குள்ள மருத்துவர், என்னை ஆரம்ப சுகாதார நிலையத்தில் இருந்து, அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தார். அங்கு சென்ற பிறகு எனக்கு மீண்டும் ரத்த பரிசோதனை செய்தார்கள். அப்பொழுது, பார்க்கும்போது இரத்த அளவு கொஞ்சம் கூடுதலாக இருந்தது. இதன் பிறகு, அங்குள்ள டாக்டர்கள் என்னை எதற்கும் பயப்பட வேண்டாம். சரியாக இருக்கிறது இப்போது நீங்கள் வீட்டிற்கு செல்லலாம் என கூறினார்கள். நான் வீட்டிற்கு வந்து விட்டேன். மருத்துவர்கள் கூறிய பிரசவ தேதி நெருங்கி விட்டது. பிரசவத்திற்காக மருத்துவமனையில் சேர்ந்தேன். எனக்கு அங்கு ஜெல் வைத்து 23.6.2024,அன்று பிற்பகல் 2:30 மணி அளவில், 3 கிலோவில் ஒரு ஆண் குழந்தை சுகப்பிரசவமாக பிறந்தது.நான் மற்றும் என் குடும்பத்தினர் அனைவரும் மிகவும் மகிழ்ச்சி அடைந்தோம். குழந்தை ஆரோக்கியமாக இருந்தது. இதன் பின்பு மதியம் 3:20 மணியளவில், எனக்கு அதிக இரத்தப்போக்கு மற்றும் படபடப்பாக இருந்தது. உடனே அங்குள்ள மருத்துவர்கள் என்னை 108 ஆம்புலன்ஸின் மூலமாக, அரசு மருத்துவமனைக்கு மேற்பரிந்துறை செய்தார்கள்.அங்கு சென்ற பிறகு அங்குள்ள மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் மேற் சிகிச்சை பரிந்துரை செய்தார்கள்.எனக்கு அப்போதும் இரத்த போக்கு குறையவில்லை. அதிகமாக இருந்தது. இருப்பினும், 24.6.24அன்று அதிகாலை 3 மணி அளவில் என் உயிர் பிரிந்தது.எவ்வளவோ சிகிச்சை அளித்தும் பலனின்றி என் உயிர் உடலை விட்டு பிரிந்தது. என் குழந்தை தாய்ப்பால் இல்லாமலும் மற்றும் தாயின் அரவணைப்பு இல்லாமலும் என் குழந்தைகள் தவிக்கிறார்கள். என் இரண்டு குழந்தைகளை மற்றும்

என் கணவரை என் குடும்பங்களை இப்படி தவிக்க விட்டு இறந்து போயிட்டேன் .என் இரண்டு குழந்தைகள் மற்றும் என் குடும்பங்களை நினைத்து மிகவும் வேதனையாக இருக்கிறது. இப்போது என் இரண்டு குழந்தைகள் அம்மா இல்லாமல் என் கணவர் மனைவி இல்லாமலும் தவிக்கிறார்கள்,என நினைக்கும் போது மிகவும் கவலையாக இருக்கிறது. மருத்துவர்கள் பரிந்துரைக்கும் அனைத்து ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகளை, பின்பற்றுங்கள். திடீரென்று உடம்பில் சிறிதளவு மாற்றம் ஏற்பட்டாலும், அருகில் உள்ள மருத்துவமனைக்கு சென்று பரிசோதனை செய்து கொள்ளுங்கள். எனக்கு என் குழந்தைகள் மற்றும் என் குடும்பங்களுடன், வாழ கொடுத்து வைக்கவில்லை. என் நிலைமை போல், எந்த ஒரு பெண்ணிற்கும் வரக்கூடாது. இன்று நான் இல்லாமல்,என் குடும்பம் தவிக்கும் தவிப்பை வேறு எந்த குடும்பத்திற்கும் வரக்கூடாது. இந்த நிலைமைக்கு வராமல் இருக்க நீங்கள் முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும். மருத்துவர்கள் கூறும் ஆலோசனையின் படி, நடந்து கொள்ள வேண்டும். வாழ்க்கை என்பது ஒரு முறை அதை தவற விடாதீர்கள்....

## 2. மாத்திரையை மறந்தேன்– உயிரை இழந்தேன்

நான் திவ்யா பேசுகிறேன்ஆரோக்கியமான குழந்தையை ஈன்று மகிழ்ச்சியாகவும், உற்சாகமாகவும் அக்குழந்தையை வளர்த்தெடுக்க வேண்டும் என்ற ஆசை அனைத்து பெற்றோர்களுக்கும் உண்டு. அதே போன்று எங்களது ஆசையும்.

திருமணமாகி சில ஆண்டுகள் குழந்தைக்கான பாக்கியம் இல்லாமல், பல மருத்துவர்களைச் சந்தித்து ஆலோசனை பெற்று ஒரு வழியாக கரு உருவாகி இருப்பதாக உறுதியானது அத்தருணத்தில் நானும் எனது கணவரும் அடைந்த மகிழ்ச்சிக்கு வானமே எல்லை.

எனது கருப்பையில் கரு உருவாகிவிட்டால் எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டாம் என்ற தவறான சிந்தனையால் எனக்கு ஏற்பட்ட பாதிப்புகளை விளக்கவே உங்களோடு பேசிக்கொண்டிருக்கிறேன்.குழந்தை பிறந்த சில நாட்களில் எனது மகிழ்ச்சி உயிரோடு சேர்ந்து தொலைந்து போனது என்ன காரணம் தெரியுமா?...

கர்ப்ப காலத்திலேயே இரத்த அழுத்தம் அதிகமாக இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டு மருந்துகளை எடுத்து வந்தேன் சில நேரங்களில் மருந்துகளைத் தவிர்க்கும் தவறையும் செய்தேன் குழந்தை பிறந்த போது இரத்த அழுத்தம் சரியாகவே இருப்பதாகவும்,இரத்த அழுத்த மாத்திரைகளை நிறுத்த வேண்டாம் எனவும் மருத்துவர்கள் தெரிவித்தனர். இரத்த அழுத்தம் சரியாக இருக்கிறதே பிறகு எதற்கு மருந்து என்ற தவறான எண்ணத்தால் மாத்திரை எடுப்பதை அப்படியே நிறுத்திவிட்டேன். சில நாட்கள் கழித்து கடுமையான தலைவலி ஏற்பட, அருகிலிருக்கும் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டேன் இரத்த அழுத்தம் மிகவும் அதிகமாக இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டு, முதல் உதவி மருத்துவம் மேற்கொள்ளத் தொடங்கினர். ஆனால் நிலைமை சீராவதற்குள் வலிப்பு ஏற்படத் தொடங்கிவிட்டது. அதன் பிறகு என்ன நடந்தது என எனக்கு நினைவில் இல்லை. இப்போது எனது கணவரோடும் .பச்சிளம் குழந்தையோடு நான் இல்லை. இதை நினைக்கும் போது மிகுந்த வேதனை ஏற்படுகிறது. குழந்தை பிறந்த பிறகும் சில மாதங்களுக்காவது தொடர்ந்து மருத்துவரின் ஆலோசனையை உதாசீனப்படுத்த வேண்டாம்உங்கள் இரத்த அழுத்தம் சீராக .இருக்கிறதா... இரத்தச் சர்க்கரை அளவு முறையாக இருக்கிறதா... மேலும் உடலில் புதியதாக ஏதேனும் மாற்றம் ஏற்படுகிறதா என்பதை மருத்துவர் மேற்பார்வையில் கண்காணிப்பது மிக மிக முக்கியம்

மருத்துவர் சொன்னபடி, இரத்த அழுத்தத்திற்கான மாத்திரைகளை எடுத்திருந்தால், தாய்ப்பாலுக்காக ஏங்கிக்கொண்டிருக்கும் எனது குழந்தைக்கு அமுதூட்டிக் கொண்டிருப்பேன் நான்.ஆனால் எனது குழந்தை தாய் ப்பால் வங்கியின் மூலம் யாரோ ஒரு தாயின் கருணையால் தாய்ப்பால் பருகிக் கொண்டிருக்கிறதுகுழந்தைக்கு எப்படியோ தாய்ப்பால் கிடைத்ததில் மகிழ்ச்சிதான்.ஆனால் எனது அரவணைப்பால் கிடைக்கும் இதத்திற்கு ஈடாகுமா

சகோதரிகளே... உங்களோடு இந்த விஷயத்தைப் பகிர்ந்துகொள்ள வேண்டும் என ஆசைப்பட்டேன்ஆத்மார்த்தமாகப் பகிர்ந்துவிட்டேன் முறையாக மருத்துவம் பார்த்து, ஆரோக்கியமான குழந்தைகளை பெற்றெடுத்து, மகிழ்ச்சியாக வாழுங்கள். .நான் விடைபெறுகிறேன் ஆனால் எங்கிருந்தோ எனது குழந்தையின் மென் .சிரிப்பை ரசித்துக்கொண்டே தான் இருப்பேன்.

## 3. இதயம் பேசுகிறது

22 வயதில் மகப்பேறு காலத்தில் ஏழு நாட்களே ஆன பச்சிளங்குழந்தையை தவிக்க விட்டு இறந்து போன வினிதா பேசுகிறேன்,

எனக்கு திருமணம் ஆன மூன்றே மாதத்தில் நான் கர்ப்பமானேன். என் கணவரும் என் குடும்பமும் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர். நான் PHC–ல் இரத்தம் மற்றும் சிறுநீர் பரிசோதனை செய்து கொண்டேன் அதில் எல்லாமே நார்மல் ஆக இருந்தது. தடுப்பூசியும் தவறாமல் போட்டுக் கொண்டேன். சத்தான பழங்களும் காய்கறிகளும் சாப்பிட்டு வந்தேன்.6–7வது மாதத்தில் ஸ்கேன் செய்தபோது குழந்தையின் புட்டம் கீழ் இருப்பதாக மருத்துவர்கள் சொன்னார்கள் அதனால் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரைத்தார்கள். நான் அதை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. 9–வது மாதத்தில் செக்கப்பிற்காக ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்றேன் அப்பொழுது எனக்கு பிரசவ வலி வந்தது. அங்கிருந்த மருத்துவரும் நர்ஸ்ம் பரிசோதனை செய்து, குழந்தையின் இதயத்துடிப்பு நன்றாக இருக்கிறது கர்ப்பப்பை வாய் முழுவதும் விரிவடைந்து இருக்கிறது அதனால் மருத்துவ கல்லூரிக்கு அனுப்புவதற்காக 108 ஆம்புலன்ஸை வரவழைத்தார்கள். ஆம்புலன்ஸ் வருவதற்குள் எனக்கு பனிக்குடம் உடைந்து விட்டு வலி அதிகமாகி விட்டது. வலி அதிகமானதால் நான் அலறிக் கொண்டே இருந்தேன். குழந்தை வெளி வருவது போல ஒரு உணர்வு இருந்தது. எனக்கு ஒரு அழகான ஆண் குழந்தை பிறந்தது. அந்த குழந்தை அழவே இல்லை என்பதனால் குழந்தையை உடனே அவசர சிகிச்சை பிரிவுக்கு எடுத்துச் சென்றார்கள். எனக்கு நச்சு கொடியை வெளியே எடுக்கும் போது அதிகமான உதிரப்போக்கு இருந்தது. கர்ப்பப்பையின் கீழ் பகுதியில் கிழிவு ஏற்பட்டிருந்ததால் அதிகமான ரத்தப்போக்கு ஏற்பட்டது. அதனால் என்னை அறுவை சிகிச்சை பகுதிக்கு எடுத்துச் சென்றனர். பாதி மயங்கிய நிலையில் இருந்த எனக்கு ஒரு கையில் குளுக்கோஸும் ஒரு கையில் ரத்தமும் ஏற்றப்பட்டது. இந்நிலைமையில் கர்ப்பப்பை சுருங்கி விரிவடைந்து கொண்டே இருந்தது. மருத்துவர்கள் அனைவரும் வந்து பார்த்து மருந்து இரத்தமும் கொடுத்தார்கள். மறுநாள் மூச்சு விடுவதில் சிரமமும், வயிற்றில் வலியும் அதிக அளவில் இருந்ததால் ஸ்கேன் செய்து பார்த்தபோது வயிற்றில் ரத்தக் கட்டி இருப்பதை பார்த்தார்கள். பின்பு அறுவை சிகிச்சை அறைக்கு கூட்டி சென்று கர்ப்பப்பையை எடுத்து விட்டார்கள்,பின்பு சிறுநீரகம் முழுவதும் செயல் இழந்து விட்டது, பிரசிவித்த ஏழு நாட்களில் நான் சிகிச்சை பலனின்றி மரணம் அடைந்தேன். என் குழந்தை தாயை இழந்து கஷ்டப்படாமல் இருந்திருக்கும், நானும் என் குடும்பத்துடன் இன்று சந்தோஷமாக இருந்திருப்பேன், இன்று என் குழந்தையுடனும், கணவருடனும் வாழ முடியாமல் போய்விட்டது, ஆகையால் கர்ப்பிணி தாய்மார்கள் ஆகிய நீங்கள் முன்கூட்டியே மேல் சிகிச்சைக்கு சென்று விடுங்கள்.

## 4. சிதைந்த கனவு

20 வயதே ஆன இரட்டை பச்சிளம் குழந்தைகளை தவிக்க விட்டுச் சென்ற சோழவந்தான் ஊரைச் சேர்ந்த ஸ்ரீ பூரணி பேசுகிறேன். எனக்கு திருமணம் ஆகி இரண்டு வருடம் ஆகிறது. இரண்டு வருடங்கள் ஆகியும், இன்னும் எந்த ஒரு நற்செய்தியும் இல்லாத காரணத்தால், என் குடும்பத்தில் உள்ள அனைவரும் என்னை மிகவும் துன்பப்படுத்தினர். நான் வேண்டாத கடவுள் இல்லை. சில மாதங்களுக்கு பின்னர், நான் கர்ப்பம் தரித்தது போல அறிகுறிகள் தெரிய வந்தது. உடனே, என் கணவரிடம் கூறி, என் கணவரும் நானும் அங்குள்ள, மருத்துவமனைக்கு சென்று செவிலியரிடம் கூறினோம். அங்குள்ள, கிராமப்புற செவிலியர் என்னை பரிசோதனை செய்தார்கள். அப்பொழுது, நான் கர்ப்பம் தரித்தது உறுதியானது. மிகவும், மகிழ்ச்சி அடைந்தேன். என் கணவரிடமும் மற்றும் என் குடும்பத்தினரிடம் கூறிய பிறகு அவர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். அளவில்லாத மகிழ்ச்சியில் என் குடும்பம் இருந்தது. பிறக்கப் போகும் குழந்தைகளை பற்றி நிறைய கனவுகள் கண்டோம். மாதா மாதம் அங்குள்ள மருத்துவமனைக்கு சென்று, கர்ப்பகால பரிசோதனைகளை செய்து கொள்வேன். மற்றும் கர்ப்ப காலத்தில், போடப்பட வேண்டிய, இரண்டு தடுப்பூசிகளையும் செலுத்தி கொண்டேன். ஒவ்வொரு நாளும், என் வீட்டில் உள்ள அனைவரும் என்னை நன்றாக கவனித்துக்கொண்டனர். குழந்தையை பற்றி நிறைய கனவுகளை கண்டனர். சில நாட்களுக்குப் பின்பு, கர்ப்பகால ஸ்கேன் செய்து கொண்டேன் அப்பொழுது என் வயிற்றில் இரட்டை குழந்தை வளர்கிறது, என மருத்துவர் கூறினார். அப்போது என் மனம் மிகவும் மகிழ்ச்சி அடைந்தது. நான் இரண்டு குழந்தைகளை, சுமப்பதை நினைத்து, மிகவும் பெருமைப்பட்டோம்.என் குடும்பத்தில் அனைவரிடமும் கூறியபோது, மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். தினமும் காலை, மதியம், மாலை என மூன்று வேளையும் என்னை சிறப்பாக கவனித்துக் கொண்டார்கள். என்னை, எந்த ஒரு வேலையும் செய்ய விடுவதில்லை. நான் ஆசைப்படும், அனைத்து பொருட்களையும் வாங்கி தந்து என்னை சந்தோஷப்படுத்தினார்கள். நானும் மிகவும் சந்தோஷமாக இருந்து வந்தேன். எனது 36 ஆவது, பேறு காலத்தில் திடீரென தலைவலி மற்றும் கால் வீக்கம், இவை இரண்டும் ஏற்பட்டது. உடனே என் கணவர்,அங்குள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். அப்போது அங்குள்ள செவிலியர், எனக்கு ரத்த அழுத்த பரிசோதனை செய்தார். பரிசோதித்த பிறகு எனக்கு உயர் ரத்த அழுத்தம் 140/100mmHg இருப்பது தெரிய வந்தது. எனக்கு இரத்த அழுத்தத்திற்கான மாத்திரைகளை கொடுத்து, ஆரம்ப சுகாதார நிலையத்தில் இருந்து அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். அங்குள்ள மருத்துவர்கள் என்னை மேற் சிகிச்சைக்காக அட்மிட் ஆக சொன்னார்கள். உயர் ரத்த அழுத்தம் அதிகமாக இருப்பதால், அட்மிட் ஆகி சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும் என கூறினார்கள். அப்பொழுது என்னுடன் துணைக்கு யாரும் இல்லாத காரணத்தால்,என்னால் அட்மிட் ஆக முடியவில்லை. நான் வீட்டிற்கு சென்று விட்டேன். மீண்டும் 26.4.24 அன்று காலையில் மிகவும் தலைவலி தாங்க முடியாத காரணத்தினால் என் கணவரை அழைத்து மருத்துவமனைக்கு சென்று விட்டேன். அங்குள்ள மருத்துவர்கள், என்னை முன்பு பரிசோதனைக்கு வரும்போதே அட்மிட்டாக கூறினோமே ஏன் இவ்வளவு

தாமதமாக வந்தீர்கள் எனக் கேட்டார்கள். பிறகு என்னை உடனே அட்மிட்செய்தார்கள். மூன்று நாட்கள் தொடர்ந்து சிகிச்சை எடுத்துக் கொண்டேன். 1/5/2024 அன்று அதிகாலை 2 மணி அளவில், அறுவை சிகிச்சை மூலமாக எனக்கு இரட்டை ஆண் குழந்தைகள் பிறந்தது. மிகவும் மகிழ்ச்சி அடைந்தோம். என் குடும்பத்தில் உள்ள அனைவரும் மகிழ்ச்சி அடைந்தார்கள். எனக்கு இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்ததை நினைத்து, என் கணவரும் மற்றும் என் குடும்பத்தினர் அனைவரும் குழந்தைகளைப் பார்த்தவுடன், மிகவும் சந்தோஷமடைந்தனர். சில மணிநேரம் கடந்த பின்பு எனக்கு மிகவும் அதிகமான இரத்தப்போக்கு ஏற்பட்டதால், என்னை அங்குள்ள அவசர சிகிச்சை பிரிவிற்கு மாற்றினார்கள். பின்பு சில நேரம் கடந்த பின்பு வலிப்பு ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து, எனக்கு செயற்கை சுவாசம் அளித்தார்கள். தொடர்ந்து சிகிச்சை அளித்துக் கொண்டே இருந்தார்கள். எந்த ஒரு விதமான பலனையும் பெறவில்லை. என் வீட்டில் உள்ள என் கணவர் மற்றும் என் குடும்பத்தை நேரிடமும் மருத்துவர்கள் கூறினார்கள். இதுதான் நிலைமை என்று. என் குடும்பத்தில் உள்ள அனைவரும் கலங்கி நின்று கொண்டிருந்தார்கள். சுமார் மதியம் 2 மணி அளவில், எனது உயிர் என் உடலை விட்டு பிரிந்தது.!சிகிச்சை பலனின்றி உயிர் பிரிந்தது... மிகவும் தாங்க முடியாத அளவு வேதனையாக இருந்தது.திருமணம் ஆகி இரண்டு வருடங்கள் ஆகியும் கர்ப்பம் தரிக்காமல், பிறகு கர்ப்பம் தரித்து ஒரு சந்தோஷம் இல்லாமல் இரு சந்தோஷமாக இரட்டை குழந்தைகளாக வந்து எனக்கு பிறந்த நிலையில், இந்த மாதிரி ஒரு நிலைமை எனக்கு ஏற்பட்டதை நினைத்து, மிகவும் வேதனையாக இருக்கிறது. கடவுள் கொடுத்த இரட்டை மகிழ்ச்சியை என்னால் அனுபவிக்க முடியவில்லை. என் இறப்பிற்கு காரணம் என்னை மருத்துவர் உயரத்த அழுத்தம் அதிகமாக இருப்பதால் அரசு மருத்துவமனையில் அட்மிட் ஆக சொல்லியும் நான் துணைக்கு யாரும் இல்லாத காரணத்தினால் அட்மிட் ஆகவில்லை மற்றும் பிரசவத்திற்காகவும் சிகிச்சைக்காகவும் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட எனக்கு பிரசவ பின் கால கவனிப்பும் மற்றும் பிரசவத்திற்கு பின் வலிப்பு ஏற்பட்டதால் என் உயிர் எனது உடலை விட்டு பிரிந்தது. மிகவும் வேதனையாக இருக்கிறது என் இரண்டு குழந்தைகளை நினைத்து பார்க்கும் பொழுது, என் மனம் மிகவும் கலங்குகிறது. இரண்டு வருடங்களாக நான் எப்பொழுது தாயாகவேன், நான் எப்பொழுது என் குழந்தைகளை கொஞ்சப்போகிறேன். என கனவு கண்டு கொண்டே இருந்தேன். என் கனவு பலிக்கவில்லை என் குடும்பங்கள் மற்றும் என் இரண்டு குழந்தைகள் தவிக்கும் தவிப்பு, உங்கள் குடும்பத்திற்கு வராமல் இருக்க நீங்கள் மருத்துவர்கள் கூறும் ஆலோசனையை பின்பற்ற வேண்டும். உரிய நேரத்தில் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும். மருத்துவர்கள் கூறும் அனைத்து பரிசோதனைகளையும் செய்ய வேண்டும். வாழ்க்கை என்பது, ஒரு முறை தான் அதனால் வாழ்க்கையை அலட்சியமாக எடுத்துக் கொள்ளாதீர்கள். எனக்கு நேர்ந்த இந்த துயரத்தை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. என் கணவர் மற்றும் என் இரட்டை குழந்தைகளை நினைத்து மிகவும் கவலையாக இருக்கிறது. என் போன்ற நிலைமை உங்கள் யாருக்கும் வரக்கூடாது. கர்பிணி தாய்மார்களே நீங்கள் மருத்துவர்களின் ஆலோசனையுடனும் பரிந்துரையின் படியும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

## 5. கால தாமதம் – காலன் பாதம்

21 வயதில் மகப்பேறு காலத்தில் பிறந்து 12 நாட்களே ஆன பச்சிளம் குழந்தையை தவிக்க விட்டு இறந்து போன ஆத்தூரை சேர்ந்த ரம்யா பேசுகிறேன்,

எனக்கு 19 வயதில் இரத்த சொந்தம் இல்லாத என் கணவருக்கும் எனக்கும் திருமணம் நடைபெற்றது. முதல் கர்ப்பம் தானாகவே கலைந்து விட்ட நிலையில், நான் இரண்டாவதாக கர்ப்பம் தரித்தேன். எங்கள் கிராமத்தில் உள்ள நர்ஸ் அக்காவிடம் கர்ப்பத்தை உறுதி செய்து கொண்டேன். முதல் கர்ப்பத்தின் போது இரத்தப் பரிசோதனையில் சிக்கிள் செல் அனிமியா இருப்பதாக கூறினார்கள். நான் அதை நர்ஸ் அக்காவிடம் கூறினேன். அவர்கள் எனக்கு இரண்டு தவணை தடுப்பூசிகள் போட்டார்கள் மீண்டும் இரத்தப் பரிசோதனை செய்தபோது பரிசோதனையில் எனக்கு சிக்கிள் செல் அனிமியா இருந்ததால், இரண்டு யூனிட் இரத்தம் ஏற்றப்பட்டது. நான் தவறாமல் இரண்டு வாரத்திற்கு ஒருமுறை செக்கப்பிற்கு சென்று ஒவ்வொரு முறையும் எடை, இரத்த அளவு மற்றும் இரத்த அழுத்தம் ஆகியவற்றை பரிசோதித்து வந்தேன். நான்காவது மாதத்தில் இரத்தத்தின் அளவு குறைவாக இருந்ததால் மீண்டும் இரண்டு யூனிட் ரத்தம் ஏற்றினார்கள். ஐந்தாவது மாதத்தில் செக்கப்பிற்கு செல்லும் பொழுது இரத்தத்தின் அளவு குறைவாக இருந்ததால் இரத்த ஊசியான அயன்சுக்ரோஸ் ஊசியை நரம்பு வழியாக நான்கு ஊசிகள் போட்டார்கள். மறுபடியும் ஆறாவது மாசம் பரிசோதனைக்கு சென்ற போது இரத்த அளவு குறைவாக இருந்ததால் இரண்டு யூனிட் இரத்தம் ஏற்றிக்கொண்டேன்.

ஏழாவது மாதத்தில் எனக்கு இரத்த கொதிப்பு அதிகமாக இருந்ததால் Tab:Labetalol மாத்திரை கொடுத்தார்கள். மேலும் அவர்கள் மேல் சிகிச்சைக்காக மருத்துவமனை செல்ல சொன்னார்கள், எனது சொந்த பந்தங்கள் இப்போதே போக தேவையில்லை நல்ல நாள் பார்த்த பிறகு போகலாம் என்று சொன்னதைக் கேட்டு நான் உடனடியாக மருத்துவமனைக்குச் செல்லவில்லை. செல்லாத மறுநாளே எனக்கு வயிறு வலி வந்து விட்டது. நான் மருத்துவமனை செல்லும் வழியில் என் குழந்தையை நன்றாக பெற்று எடுக்க வேண்டும் என்ற எண்ணம் மட்டுமே என்னுள் இருந்தது. மருத்துவமனைக்கு சென்று அங்கே எனக்கு இரத்தம் ஏற்றினார்கள், எனக்கு இரத்த கொதிப்பு அதிகமாக இருந்ததால் தலைவலி வந்தது, இதனால் அறுவை சிகிச்சை செய்து எனது குழந்தையை எடுத்தார்கள்.எனக்கு 2.1kg எடையுடன் ஒரு ஆண் குழந்தை பிறந்தது, அறுவை சிகிச்சை முடிந்தவுடன் ஒரு முறை எனக்கு வலிப்பு வந்தது அதனால் MRI scan எடுத்தார்கள் மூளையில் பிரச்சனை என்பதால் அதற்கும் அறுவை சிகிச்சை செய்தார்கள். பிறகு எனக்கு மூச்சு விடுவதில் ரொம்ப சிரமமாக இருந்ததால் மிஷினில் மூச்சு விட செய்தார்கள். 12 நாட்கள் மருத்துவமனையிள் உயர் சிகிச்சை மருத்துவர்கள் அனைவரும் எனக்கு அனைத்து உயர்ந்த சிகிச்சைகளையும் அளித்தார்கள். எவ்வளவோ சிகிச்சை அளித்தும் பலன் அளிக்காமல் நான் இன்று இந்த உலகத்தை விட்டே சென்று விட்டேன். அந்த ஒரு நாள் என் சொந்தங்களின் பேச்சைக் கேட்காமல் உடனடியாக மருத்துவமனைக்கு சென்று இருந்தால் இன்று நான் என் குழந்தையை விட்டு இறந்து இருக்க மாட்டேன். இப்பொழுது என் குழந்தையும் என் கணவரும் நான் இல்லாமல் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள். என் குழந்தை நான் இல்லாமல் ஏங்கி தவிக்கிறது, அதனால் அனைத்து கர்ப்பிணி தாய்மார்களே!

பேறு காலத்தில் மருத்துவர்கள் ஆலோசனையின்படி கேட்டு நடந்து கொள்ளுங்கள் அதேபோல் அவர் கூறும் போது மேல் சிகிச்சைக்கு சென்று சிகிச்சை பெற்றுக் கொள்ளுங்கள் இல்லையெனில் என்னை போல் இச் சிறுவயதில் இறந்து, என் குழந்தை தாயை இழந்து தவிப்பது போல் ஆகிவிடக் கூடும். எந்த ஒரு குழந்தைக்கும் இந்த நிலைமை ஏற்படக்கூடாது. என் கணவரும் எனது குடும்பமும் நான் இல்லாமல் எவ்வளவோ கஷ்டப்படுகிறது. இந்த நிலைமை உங்கள் குடும்பத்துக்கும் ஏற்படாமல் இருக்க வேண்டும் என்றால் மருத்துவர்கள் மற்றும் நர்சுகள் கூறும் அறிவுரைகளை கேட்டு அதை பின்பற்றி பேறு காலத்தில் சுகமான பிரசவத்தை பிரசிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

## 6. வரமா? சாபமா?

நான் திருமதி சர்மிளா என்னுடைய வயது 26 நான் தங்கராஜ் என்பவரை திருமணம் செய்து, செம்மண் குடியிருப்பு பகுதியில் ஒரு சிறிய குடும்பமாக வசித்து வந்தேன். என் திருமண வாழ்க்கையின் அடையாளமாக நான் கருவுற்றேன். சாந்தி மருத்துவமனையில் ஸ்கேன் பரிசோதனையில் என் கர்ப்ப உறுதி செய்யப்பட்டது. என் தாய்மை என்னை உற்சாகப்படுத்தியது.

நான் சாலைப்புதூர் ஆரம்ப சுகாதார நிலையத்திலும் பரிசோதனை மேற்கொண்டு என் கர்ப்பத்தினை பதிவு செய்தேன். பதினாறு வருடமாக நீரிழிவு நோயாளியான எனக்கு இந்த கர்ப்பம் ஒரு வரமாகவே இருந்தது.

ஆனால் இந்த மகிழ்ச்சியை என்னால் முழுமையாக அனுபவிக்க முடியவில்லை. ஏனென்றால் மூன்றாவது மாதத்திலேயே எனக்கு கர்ப்பகால உயர் இரத்த அழுத்தம் தொடங்கிவிட்டது. இதனால் என் மன கவலையும் என்னை ஆட்கொண்டு விட்டது கர்ப்ப கால உயர் ரத்த அழுத்தத்திற்கான சிகிச்சையும் ஆரம்பிக்கப்பட்டது. மேலும் சிறப்பு மருத்துவர்களிடம் பரிந்துரை செய்தார்கள். நான்காவது மாதம் சாந்தி மருத்துவமனைக்கு வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு பிரச்சனைக்காக சென்றேன். இவை இரண்டு நாள் சிகிச்சையில் சரி செய்யப்பட்டு விட்டது. ஆனால் என்னுள் பயம் அதிகரித்தது. ஆனால் என் பயம் மீண்டும் சாந்தி மருத்துவமனைக்கு அக்டோபர் மாதம் 27ஆம் தேதி வழக்கமான கர்ப்பகால பரிசோதனைக்காக சென்றேன் அதில் சிறுநீரில் புரதச்சத்து இருப்பது கண்டறியப்பட்டது.

ஐந்தாவது மாத ஸ்கேன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில் என் குழந்தையின் வளர்ச்சி மற்றும் இதயத்துடிப்பு நன்றாக உள்ளதை அறிந்து என் மனம் நிம்மதி அடைந்தது. ஆறாவது மாதத்தில் செய்யப்பட்ட பரிசோதனையில் என் ரத்த சர்க்கரை அளவு அதிகரித்து காணப்பட்டது சிறுநீரில் உப்பு மற்றும் புரதச்சத்தும் அதிகமாகவே இருந்தது. என்ன ஆகுமோ ஏது ஆகுமோ என்ற ஒரு தளம் பயமும் மனதில் ஓடிக்கொண்டே இருந்தது. பிரச்சனைகளுக்கான சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டாலும் 16. 12. 2023தேதி மேல் சிகிச்சைக்காக என்னை திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தார்கள். இருந்தாலும் நான் 22. 12. 2023சாந்தி மருத்துவமனைக்கு சென்றேன் அங்கு வழக்கமான பரிசோதனைகள் மேற்கொண்டதில் ரத்த சர்க்கரை அளவு மிகவும் அதிகமாக கண்டறியப்பட்டது மறுநாளே தலை சுற்றல் ஏற்பட்டதால் சிதம்பரம் மருத்துவமனைக்கு சென்றேன் அங்கு சர்க்கரை நோய்க்கு வழங்கும் Insulin மருந்தின் அளவினை ஐந்து யூனிட் குறைவாக எடுத்துக் கொள்ளும்படி அறிவுறுத்தினார்கள்

29. 12. 2023 ஆம் தேதி துணை சுகாதார நிலையத்தில் தடுப்பூசி போட்டுக் கொண்டேன். என் பிரச்சனைக்காக நான் வேண்டாத தெய்வங்கள் இல்லை.

என் விதியா அல்லது சதியா என்று தெரியவில்லை 31. 12. 2024 தேதி அன்று காலை அதிகாலை இரண்டு மணி அளவில் குளியல் அறையில் விழுந்து விட்டேன். பட்ட காலே படும் கெட்ட கூடிய கெடும் என்று சொல்வது போல என் நிலைமை மோசமாகிவிட்டது. உடனடியாக என்னை சிதம்பரம் மருத்துவமனைக்கும் அங்கிருந்து மீண்டும் திசையன்விளை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் மீண்டும் அங்கிருந்து திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கும் பரிந்துரை செய்தார்கள்

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போது நான் மயக்க நிலையில் இருந்தேன் எனக்கு கொடுக்கப்பட்ட வழி தூண்டல் என்னால் உணர முடிந்தது கணு கால்களில் வீக்கம் இருந்தது என் மனதுக்கு ஆறுதல் அளிக்கும் விதமாக என் குழந்தையின் இதயத்துடிப்பு இருந்தது. என் சிகிச்சைக்கு தேவைப்படும் சிறப்பு மருத்துவர்கள் அனைவரும் வரவழைக்கப்பட்டு பரிசோதனைகள் செய்யப்பட்டது. அதில் என் மூளை திசுக்கள் பாதிப்படைகின்றதாக கண்டறியப்பட்டது என் நுரையீரலிலும் பாதிப்பு உள்ளதாக கண்டறிந்தார்கள். எனக்கு வரமாக கிடைத்த என் வாழ்க்கை சாபமாக அமையும் என்று நான் நினைக்கவில்லை. ஏனென்றால், என் குழந்தையின் இதயத்துடிப்பு நின்று விட்டது

01. 01. 2024 அனைவருக்கும் ஆங்கில புத்தாண்டு இம்மண்ணுலகை காணாத என் ஆண் குழந்தை இறந்து பிறந்தது. ஏற்கனவே மூளை மற்றும் நுரையீரலில் பாதிப்பு ஏற்பட்ட நிலையில் சிறுநீர் செயல்பாடுகளிலும் பாதிப்பு ஏற்பட்டது என் குழந்தையை பறிகொடுத்த நிலையில் என் உடலில் உயிர் இருந்தும் இல்லாததற்கு சமமே! கடவுளே உனக்கு இரக்கம் என்பதற்கு அர்த்தம் தெரியாதோ? என் உடலில் உயிர் உள்ளது க்கு ஆதாரமான என் இதயத்துடிப்பும் நின்று போனது. மருத்துவர்கள் மூன்று முறை முயற்சித்து என் இதயத்தை ஒரு உயிர்ப்பிக்க முடியவில்லை. கடவுளே உன் முடிவை யாரால் மாற்ற முடியும். என்னுடன் என் குழந்தையும் எடுத்துக் கொண்டாய்.

## 7. அலட்சியம் பேராபத்து!!

என்னுடைய அலட்சியத்தால் 23 வயது மகப்பேறு காலத்தில் இறந்து போன மதுமிதா பேசுகிறேன். எனக்கு திருமணம் முடிந்து ஒரு வருடத்தில் நான் கர்ப்பமானேன். மதுரையில் உள்ள தனியார் மருத்துவமனையில் எனது கர்ப்பம் உறுதி செய்தார்கள் இது எனது முதல் கர்ப்பம். அந்த ஹாஸ்பிடலில் எனக்கு ரத்தம் டெஸ்ட் செய்தார்கள் மற்றும் மாத்திரையும் கொடுத்தார்கள். அந்த மாதம் முடிந்த பின் எங்களுடைய கிராம செவிலியர் இடம் கர்ப்பத்தை பதிவு செய்தேன், தாய் அட்டையும் போட்டுக் கொடுத்தாங்க. எங்க ஏரியா ஆரம்ப சுகாதார நிலையம் திருநெல்வேலியில் பரிசோதனையும் செய்து கொண்டேன். ஒன்பதாம் மாதத்தில் எனக்கு காலில் வீக்கம் ஏற்பட்டது. உடனே திருநெல்வேலி, தனியார் ஹாஸ்பிட்டலில் அட்மிட் ஆனேன். பிபி குறைய மாத்திரை கொடுத்தாங்க. அடுத்த நாள் வீக்கம் குறைந்தது. பிரசவத்திற்கு இன்னும் பத்து நாள் இருந்ததால் நான் வீட்டுக்கு போகலாம் என்று கேட்டேன். மருத்துவ டெலிவரி வரையும் இங்கே இருக்கும்படி கூறினார், ஆனால் நான் கேட்கவில்லை. மருத்துவர் என்னை தினமும் பிபி செக் பண்ண வேண்டும் மாத்திரை சரியாக சாப்பிட வேண்டும் என்று அறிவுரை கூறினார். 28ஆம் தேதி காலையில் ஒன்பதே கால் மணிக்கு எனக்கு சுகப்பிரசவம் ஆயிடுச்சு, பெண் குழந்தை பிறந்தது காலை 10:30 மணிக்கு எனக்கு கீழ் முதுகு வலியாக இருந்தது. அதை மருத்துவரிடம் கூறினேன். பரிசோதனை செய்து பார்த்ததில் என் பிறப்புறுப்பு வழியாக நிறைய ரத்த கசிவு இருந்தது. எனக்கு ரெண்டு யூனிட்டு ரத்தம் போட்டாங்க. ரத்தம் நிக்கல, என் கர்ப்பப்பையை எடுத்தால் தான் ரத்தம் நிற்கும் என்று மருத்துவர் கூறினார். உடனே கர்ப்பப்பையை எடுத்து அறுவை சிகிச்சை செய்தார்கள். அன்று மூன்று மணி அளவில் என்னுடைய இதயத்துடிப்பு ரொம்ப அதிகமாய் இருந்ததால், எனக்கு செயற்கை சுவாசம் கொடுத்தாங்க. அப்புறம் என்னுடைய கை ,கால் எல்லாம் வெளுத்து போயிருச்சு ,பீபியும் குறைந்தது ,நாடித்துடிப்பு, உணர முடியவில்லை. இதற்காக நிறைய ஊசியும், மருந்தும் அவசர சிகிச்சையும், கொடுத்தாங்க. ஆனாலும் எனக்கு உடல்நிலை மோசமாகி அன்னைக்கு சாயங்காலம் இறந்து விட்டேன். மருத்துவரின் அறிவுரையை கேட்டு அட்மிட் ஆகி இருந்தால் நான் உயிருடன் இருந்திருப்பேன். என் குழந்தை தாயை இழந்து கஷ்டப்படாமல் இருந்திருக்கும். நானும் என் குடும்பமும் சந்தோஷமாக இருந்திருப்போம். என்னுடைய அஜாகரதையால் இன்று என் குழந்தை, கணவருடன் வாழ முடியாமல் போய்விட்டது. ஆகையால் கர்ப்பிணி தாய்மார்கள் முன்கூட்டியே மருத்துவரின் ஆலோசனையை கேட்டு இதுபோல் தவறு இனிமேல் நடக்காதவாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

## 8. எங்கே என் ஜீவன்!!

என் பெயர் திருமதி.ஹேமலதா, 23 வயது. நான் திரு.ரமேஷ் என்பவரை திருமணம் செய்து கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள சாவடியூர் கிராமத்தில் வசித்து வந்தேன்.

திருப்பத்தூர் மாவட்டத்திலுள்ள குனிச்சி சமுதாய சுகாதார மையத்தில். 14 .10 .2021 அன்று என் வாழ்க்கையை வசந்தமாக்க ஒரு ஆண் குழந்தையை பெற்றெடுத்தேன். எனக்கு எந்தவித சிக்கலும் இன்றி சுகப்பிரசவம் நடைபெற்றது. இரண்டு வருடம் கழிந்தது. பிறகு கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள மத்தூர் வட்டாரத்தை சார்ந்த சாமல்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு உட்பட்ட துணை சுகாதார நிலையம் குமரம்பட்டியில் கிராம சுகாதார செவிலியர் மூலம் 1.4.2023 அன்று எனது இரண்டாவது கர்ப்பம் உறுதி செய்து பதிவு செய்யப்பட்டது.

என்னுடைய கடைசி மாதவிடாய் நாள் 5.2.2023 என்பதால் எதிர்பார்க்கப்படும் பிரசவ தேதி 12 .11.2023 என்று கணக்கிட்டு எனக்கு தெரிவித்தனர். நான் மொத்தமாக 18 முறை பார்வையிடப்பட்டேன். அதாவது ஆரம்ப சுகாதார நிலையத்தில் 12 முறையும் .5 முறை துணை சுகாதார நிலையத்திலும் மற்றும் ஒரு முறை திருப்பத்தூர் அரசு மருத்துவமனையிலும் பார்வையிடப்பட்டு பரிசோதனைகளை மேற்கொண்டேன்.

2 வது மாதம் சாம்பல்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் எனக்கு முதல் கர்ப்பகால பரிசோதனைகளை மேற்கொள்ளப்பட்டது. 0**8.04.2023** அன்று ஸ்கேன் செய்யப்பட்டு கர்ப்பப்பை கர்ப்பத்தை உறுதி செய்து எதிர்பார்க்கப்படும் பிரசவதேதி 23.11.23 என்று தெரிவித்தார்கள். மேலும், கர்ப்பகால ஆய்வக பரிசோதனைகளை மேற்கொள்ளப்பட்டு. 30 நாட்களுக்கு இரண்டு வேளைஃபோலிக் அமில மாத்திரைகள் வழங்கப்பட்டது.

3வது மாதம் அன்று பரிசோதனைக்கு செல்லும்போது மீண்டும் 30 நாட்களுக்கு இரண்டாவது முறையாக போலிக் அமிலமாத்திரைகள் வழங்கப்பட்டது.

நான் 4வது மாத முடிவில் குமராம்பட்டி துணை சுகாதார நிலையத்தில் பரிசோதணைகள் மேற்கொள்ளப்பட்டு. குடற்புழு நீக்கமாத்திரை ஒன்றும் இரும்புசத்து மற்றும் போலிக் அமில மாத்திரை 60–ம், கால்சியம் சத்து மாத்திரை 60–ம் வழங்கினார்கள்.

5 வது மாதம் சாம்பல்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மீண்டும் ஸ்கேன் செய்து குழந்தையின் வளர்ச்சியை பரிசோதித்தார்கள். என் குழந்தை இதயத்துடிப்பை கேட்டு ஆனந்த மடைந்தேன்.

ஐந்தாவது மாதம் மற்றும் ஆறாவது மாதம் பரிசோதனையில் எந்தவித சிக்கலுமின்றி என் குழந்தை வளர்வதை அறிந்து நிம்மதி அடைந்தேன் குழந்தையின் அசைவுகளை உணர்ந்து உற்சாகமடைந்தேன்.

ஏழாவது மாதம் பார்வையின்போது வழக்கமான ஆய்வக பரிசோதனைகளும் ஸ்கேன் பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டது. அதில் குழந்தையின் வளர்ச்சி நன்றாக உள்ளதை அறிந்துகொண்டேன், ஆனால் ரத்தபரிசோதனையில் ஹீமோகுளோபின் அளவு குறைவாக உள்ளதாக தெரிவித்தார்கள். அதனை சரிசெய்ய இரும்புச்சத்து ஊசி நான்கு தவணையாக வழங்கப்பட்டு சரிசெய்யப்பட்டது.

31.10.2023 அன்று வரை முறையாக, ஆரம்ப சுகாதார நிலையத்திலும், துணை சுகாதார நிலையத்திலும், கர்ப்பகால பரிசோதனைகளை மேற்கொண்டேன். ஆனால் 7.11.2023 அன்று கொறப்பட்டி ஆரம்ப சுகாதார மையத்தில் மதியம் 12 மணிஅளவில் வழக்கமான கர்ப்பகால பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது.

அதில் ஒரே வாரத்தில் திடீரென்று மூன்று கிலோ எடை அதிகரித்தது என கண்டறியப்பட்டது. ஆகையால், ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்நோயாளியாக சேருமாறு அறிவுறுத்தினர்கள். பிரச்சனையின் தீவிரத்தன்மையை உணராத நான் உள்நோயாளியாக சேரமாட்டேன் என்று மறுத்துவிட்டேன்.

மீண்டும் மீண்டும் அறிவுறுத்தப்பட்டேன். ஆனாலும், நான் ஒத்துழைக்க மறுத்துவிட்டேன். இருப்பினும் வலி ஏற்பட்டால் உடனே ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வருமாறு கூறினார்கள். மதியம் ஒருமணிவரை கண்காணிக்கப்பட்ட அன்றே மாலை 4 மணிஅளவில் பிரசவ வலி ஏற்பட்டு இரண்டாவதாக, அழகான உயிருள்ள பெண் குழந்தையை பெற்றெடுத்தேன். மனம் பதப்பதைத்தது, உடலும் மனமும் வலுவிழந்தது.

மணி 4.32 அளவில் 108 அவசர ஊர்தி அழைக்கப்பட்டது . ஆம்புலன்ஸ் மாலை 4.50 மணிக்கு வந்து சேர்ந்தது, 108 பணியாளர்கள் விரைவாக தொப்புள்கொடியை துண்டித்தார். நஞ்சுகொடியை வெளிவருவதற்கான ஊசி மருந்து தசை வழியாக செலுத்தப்பட்டு நஞ்சுக்கொடி தானாக 5.10 மணி அளவில் வெளிவந்தது. ஆனாலும், பதட்டம் தொடர்ந்தது.

மேலும், மாலை 6:15 மணிஅளவில் தொடர் சிகிச்சைக்காக வீட்டிலிருந்து, குனிச்சி சமுதாய சுகாதார நிலையத்தில் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்பட்டேன். மாலை 6:20 மணிக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில், என் சுயநினைவை இழந்து மயங்கிய நிலைக்கு சென்றுவிட்டேன். கணுக்காலில் மிக அதிகமாக வீக்கம் இருந்ததாம், என் முகம் வெளுத்து காணப்பட்டதாம்.

பிறர் என்னை அழைப்பதை என்னால் உணர முடியவில்லை, கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு உதிரப்போக்கு இருந்ததாம். எனது குழந்தையின் எடை 3.880 kg இருந்ததாம். எனது உயிரைக்கொடுத்து, என் செல்ல மகளை பெற்றெடுப்பேன் என்பதை நான் அறிந்திருக்கவில்லை. மாலை 6.00 மணி அளவில் இறக்கும் தருவாயில் இருந்த நான் மீண்டும், அவசர ஊர்தியில் திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டேன்.

என் வாழ்வில் கடைசி நிமிடங்களை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த நான் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் மாலை 7.25 மணி அளவில் எனது

இரண்டு செல்ல குழந்தைகள் மற்றும் குடும்பத்தினரையும் மீளாதுயரத்தில் ஆழ்த்தி இறைவனடி சேர்ந்தேன்.

**"இறைவா ஏன் இந்த கோபம் என் மீது".** எனினும் என் குழந்தைகள் மற்றும் குடும்பத்தை பாதுகாப்பாய் என்ற நம்பிக்கையில் இவ்மண்ணுலகில் இருந்து விண்ணுலகத்திற்கு விடைபெறுகிறேன். மருத்துவர்களின், அறிவுரைகளை ஏற்க மறுத்த எனக்கு கிடைத்த இழப்பு, ஈடுசெய்யமுடியாதது, விலைமதிப்பற்றது.

நான் இழந்தது, என் உயிர்மட்டுமல்ல என் குழந்தைகளின் எதிர்காலம், என் குடும்பத்தின் சந்தோஷம் , நான் இறந்தும் வேதனை அடைகிறேன்.

***"தரமான முறையில் மக்களுக்கு வழங்கப்படும் சுகாதார சேவைகளை ஏற்போம், பங்களிப்போம், பயனடைவோம்".***

## 9. மகளை இழந்த தாயின் மனக்குமுறல்

நான் ஒரு ஆசிரியைஅரசு வேலை கிடைக்காவிட்டாலும் தனியார் பள்ளியில் மகிழ்ச்சியுடன் பணி செய்யும் ஒரு ஆசிரியை எனது மகளின் பெயர் பிரியா முப்பது வருடங்களுக்கு முன்பு பிறந்த அவளை பாசமும் நேசமும் ஊட்டி வளர்த்தோம் சுட்டிப்பிள்ளையாக இருந்தாலும், பெற்றோர்களாகிய நாங்கள் சொல்லும் வார்த்தைக்கு மறு வார்த்தை பேசமாட்டாள் அவள்

எங்கள் குடும்பமும் சரி, கிராமத்து உறவுகளும் சரி மிகப் பெரியதுகுடும்ப . !உறவுகள் விட்டுப் போகக் கூடாது என்பதில் கூடுதல் அக்கறையுடன் இருப்போம் பன்னிரெண்டு வயதில் பூப்பெயதினாள் மகள்அப்போதே இருபத்து ஐந்து வயது நிரம்பிய அண்ணன் மகனுக்கு சம்பிரதாய ரீதியாக எனது மகளை நிச்சயம் செய்துகொண்டோம்நிச்சயம் என்றால் என்னவென்று எனது ஆசை மகளுக்குத் தெரியாது உண்மையைச் சொல்லப்போனால், மாதவிடாய் என்றால் என்னவென்று கூட அவளுக்கு அப்போது தெரிந்திருக்க வாய்ப்பில்லை

பதினைந்து வயதைத் தொட்ட போது, மணமகன் வீட்டு சொந்தங்கள் அவசரம் காட்டத் தொடங்கினார் 'தம்பிக்கு இருபத்து எட்டு வயசாகுது... இனிமேல காத்திருக்க முடியாது...' என அழுத்தம் கொடுக்க, அவளது பதினைந்து வயது நிறைவதற்கு முன்பே திருமண தேதி நிச்சயிக்கப்பட்டது.

பன்னிரெண்டு வயதில் மாதவிடாய் என்றால் என்னவென்றே முழுமையாகப் புரிதல் இல்லாததைப் போல, பதினைந்து வயதில் திருமண உறவு என்றால் என்னவென்று புரிதல் இல்லாத சூழலில் ஒருவருக்கு மனைவியாகக் கட்டாயப் பதவி உயர்வை அளித்துவிட்டோம் நாங்கள் .90களில் காலக் கட்டத்தில், கிராமத்து சூழலில் இது சர்வ சாதாரண நிகழ்வு தானே என்று மனதைத் தேற்றிக்கொண்டோம்.

பதினாறு வயதில் கர்ப்பிணியாக அடுத்தக் கட்டத்திற்கு நகர்ந்திருந்தாள் எங்கள் செல்ல மகள்பதினாறு வயது குழந்தையாகக் கருப்பையில் ஒரு குழந்தையைச் சுமந்துகொண்டிருந்த அவளைப்பார்ப்பதற்கு அவ்வளவு வேதனையாக இருந்தது 'உறவு விட்டுப் போகக் கூடாது...' என்ற சிந்தனையில் மகளுக்குத் தகுதியற்ற வயதில் இப்படியொரு வேதனையைக் கொடுத்துவிட்டோமே என்று கண்ணீர் சிந்தாத நாட்களே இல்லை!

மருமகன் எனது மகளைப் பாசத்தோடு பார்த்துக்கொண்டாலும், உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் அவள் அனுபவித்த துன்பங்களைத் தாயாக என்னால் மட்டுமே முழுமையாக உணர்ந்துகொள்ள முடிந்ததுஅவளைப் போலவே அழகான பெண் குழந்தையைப் பதினாறு வயதின் இறுதியில் பெற்றெடுத்தாள் !மகள்.

அடுத்த ஒன்றரை வருட இடைவெளியில் அடுத்த கர்ப்பம்... சில வருடங்களுக்குப் பிறகு மற்றொரு கர்ப்பம் என இருபது வயதுக்கு உள்ளாகவே மூன்று குழந்தைகளுக்குத் தாய் எனும் மிகப் பெரிய அந்தஸ்து சமூகத்தால் அவளுக்கு வழங்கப்பட்டதுமன்னிக்கவும் எங்களால் அவளுக்கு வழங்கப்பட்டது.

வருடங்கள் நகர நகர உடல் அளவில் பல்வேறு இன்னல்களை அனுபவிக்கத் தொடங்கினாள் அவள்சோர்வு, பதற்றம், என்புகளில் வலுவின்மை, இரத்த சோகை, மாதவிடாய் பிரச்சனை என எல்லாம் ஒன்று சேர்ந்து அவளைப் பாடாய்ப்படுத்த இப்போது முப்பது வயதில் நாற்பது, ஐம்பது வயதில் அனுபவிக்க வேண்டிய துன்பங்களை அனுபவித்துக்கொண்டிருக்கிறாள்...

அவளை ஒவ்வொரு முறை பார்க்கும் போதும், எனக்கு ஏற்படும் குற்ற உணர்வை வார்த்தைகளால் சொல்ல முடியாது !'நான் ஒரு படித்த ஆசிரியை அல்ல... படித்த முட்டாள்...' என நிலைக் கண்ணாடியைப் பார்த்து அடிக்கடி திட்டிக்கொள்வேன்... உண்மை தான்நான் செய்த தவறை நீங்களும் செய்ய வேண்டாம் என்பதை உங்களுக்கும்தெரிவிப்பதற்காகவே இந்தக் கடிதம்!

அன்புடன்... 30.07.2010 இப்போது 2024இல், நான் 2010ல் எழுதிய கடிதத்தை எடுத்துப் படித்துப் பார்க்கும் சூழல் ஏற்பட்டதுசில பத்தாண்டுகளுக்கு முன்பு . இருந்ததைப் போலவே இப்போதும் சில பெற்றோர் செய்த அதே தவறைத் செய்து கொண்டிருக்கின்றனர் மருத்துவத் துறையின். தொடர்ந்த விழிப்புணர்வுக்குப் இப்போது நான் ஆசிரியை அல்ல !பலரும் செவி மடுப்பதில்லை, மருத்துவத்துறையில் பகுதி நேர விழிப்புணர்வு கொடுக்கும் தாதியாகப் பணியாற்றி வருகிறேன் நான் செய்த குற்றத்திற்குப் பிராயச்சித்தமாக இளவயது திருமணங்களைத் தடுத்து, தகுதியான திருமணங்கள் குறித்து விழிப்புணர்வு அளித்து வருகிறேன்...!

மாறுவோம்... செல்ல வேண்டிய தூரம் நிறையவே இருக்கிறது!

## 10. கலைந்த கனவுகள்

என் பெயர் குணசுந்தரி வயது 19 ஆண்டுகள் இந்த விடலைப் பருவ கனவுகளை அனுபவித்துக் கொண்டிருந்த எனக்கு திரு.சுப்ரதன் திருமணம் நடந்தது. என் எதிர்கால கனவுகளும் கூடியது.

ஒன்பது மாதங்களுக்குப் பிறகு என் திருமணத்தின் அடுத்த படி நிலையாக முதல் முறையாக கர்ப்பம் அடைந்தேன்.

மாதவிடாய் தள்ளிப்போன 11 வது வாரத்தில் 13.06.2023 அன்று என் எனது கர்ப்பத்தை மூக்கண மலைப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் பதிவு செய்தேன். வழக்கமான பரிசோதனைகள் மேற்கொண்டு சத்து மாத்திரையும் தடுப்பூசியும் வழங்கினார்கள். 07.06.2023 அன்று ஸ்கேன் செய்து கர்ப்பம் கர்ப்பப்பையில் உள்ளது என்பதையும் உறுதி செய்தார்கள்.

இத்தனை வருடம் என் தாய்க்கு குழந்தையாக வளர்ந்த நானும் ஒரு குழந்தைக்கு தாயானதை எண்ணி மனம் மகிழ்ச்சியில் சிறகடித்தது.

3–வது மாதத்தில் முக்கனம் மலைப்பட்டி துணை சுகாதார நிலையத்திலும், ஆரம்ப சுகாதார நிலையத்திலும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது. அதில் நானும் என் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆரோக்கியமாக உள்ளோம் என்பதை அறிந்து ஆனந்தம் அடைந்தேன்.

3–வது மாத முடிவில் முக்கண மலைப்பட்டி துணை சுகாதார நிலையத்தில் பரிசோதனை செய்து இரண்டாம் தவணை தடுப்பூசியும் வழங்கினார்கள்.

4–வது மாதத்தில் அன்னவாசல் அரசு மருத்துவமனையில் பரிசோதனை செய்து சத்துமாத்திரைகளை பெற்றுக் கொண்டேன். மேலும் 21–வது வாரத்தில் குழந்தைக்கு பிறவிக் குறைபாடுகளை கண்டறியும் ஸ்கேன் பரிசோதனை செய்தார்கள்.

என் குழந்தை எந்த குறைபாடுகளுமின்றி வளர்வதை அறிந்து நிம்மதி அடைந்தேன். என் குழந்தையின் அசைவினை உணர்ந்து என் மனது குதுகளித்தது.

7–வது மாதத்தில் மீண்டும் அன்னவாசல் அரசு மருத்துவமனையில் பரிசோதனை செய்து கொண்டேன். நானும் குழந்தையும் ஆரோக்கியமாக உள்ளதாக தெரிவித்தார்கள்.

என் குழந்தையின் வளர்ச்சியோடு என் கனவுகளும் வளர்ந்தது.

மேலும் முக்கண்மலைப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் கர்ப்பகால பரிசோதனைகள் செய்து கொண்டேன்.

இதுவரை அனைத்தும் நன்றாக நடந்தது. ஆனால் மாத பரிசோதனையில் கர்ப்பப்பையில் நீர்ச்சத்து குறைந்ததை கண்டறிந்து அதற்கான சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அதன் பிறகு நீர்ச்சத்து குறைபாடும் சரி செய்யப்பட்டது.

9-வது மாதத்தில் 24.11.2023 அன்று ரத்த அழுத்தம் சற்று அதிகரித்தை அன்னவாசல் அரசு மருத்துவமனையில் கண்டறியப்பட்டது.

25.11.2023 அன்று எனக்கு லேசான அடிவயிற்று வலியும் வெள்ளைப்படுதல் போன்ற பிரச்சனைகளோடு அன்னவாசல் அரசு மருத்துவமனைக்குச் சென்றேன். பதட்டமாக இருந்தது, பயமும் தொற்றிக் கொண்டது.

பரிசோதனை மேற்கொண்டதில் கணுக்கால் வீக்கம் கர்ப்பப்பை வாய் விரிவடைய ஆரம்பித்துள்ளதாகவும் குழந்தையின் இதயத்துடிப்பு நன்றாக உள்ளதாகவும் கூறினார்கள்.

பிரச்சனை ஏற்பட்ட உள்ளதை உணர்ந்து எனக்கு பயம் அதிகரித்த. ஆனாலும் எல்லாம் சரியாகிவிட வேண்டும் என்று மனதுக்குள் இறைவனிடம் மன்றாடினேன்.

26.11.2023 அன்று பரிசோதனையில் ரத்த அழுத்தம் சற்று அதிகரித்ததாக கூறினார்கள். ஆகையால் என் மன அழுத்தமும் அதிகரித்தது.

ஆகையால் உயர் ரத்த அழுத்தத்திற்கான சிகிச்சை அளித்து என்னை கண்காணித்தார்கள்.

27.11.2023 அன்று அறுவை சிகிச்சை மூலம் பிரசவிக்க முடிவு செய்தனர். ஆகையால் நானும் என் குழந்தையும் காப்பாற்றப்படுவோம் என்ற நம்பிக்கையில் இருந்தேன்.

28.11.2023 அன்று மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் என் நம்பிக்கையில் பேரிடி விழுந்தது. ஏனென்றால் என் குழந்தையின் இதயத்துடிப்பை கேட்க முடியவில்லையாப் என் இதயம் வலித்தது கண்கள் குளமானது.

நம்பிக்கை நகர்ந்தது என் உடல் தளர்ந்தது எனக்கு மேலும் வாந்தி மற்றும் காய்ச்சல் இருந்ததால் என்னை இராணி மருத்துவமனைக்கு இரவு 8 மணி அளவில் கொண்டு சென்றனர்.

எனக்கு மூச்சு திணறல் அடி வயிற்று வலி ,வாந்தி, காய்ச்சல் போன்ற பிரச்சனைகளோடு இரவு 9.04 மணி அளவில் ராணிஸ் அரசு மருத்துவமனையை அடைந்தேன்.

என் குழந்தை வயிற்றில் இறந்து விட்டது என்று செய்தி அறிந்து மனதளவில் இறந்த நான் என் உயிரையும் இழக்கப் போகின்றேன் என்று நினைக்கவில்லை.

வேதனையில் உடல் ஜடமானது இரவு 9.20 மணியளவில் இறந்த என் குழந்தையை ஆயுதம் போட்டு பிரசவித்தார்கள்.

என்னை தீவிரமாக கண்காணித்தார்கள். இரவு 9.30 மணி யளவில் எனக்கு வலிப்பு ஏற்பட்டது. மயக்க நிலைக்கு சென்று விட்டேன். நினைவை இழந்து

உணர்வை இழந்தேன். கண்மணிகள் விரிந்து நிலைக்கு சென்றது .நாடிதுடிப்பு நின்றது .

இதய துடிப்பை உயிர்பிக்க முயற்சித்தார்கள் எல்லாம் முடிந்தது.

கடவுளே நான் செய்த பாவம் தான், என்ன? தொடங்கிய வேகத்தில் முடிந்தது என் வாழ்க்கை பயணம்.

கலைந்தது என் எதிர்கால கனவு

## 11. எதிர்பார்ப்பு ஏமாற்றமானது

என் பெயர் திருமதி கலாதேவி, 35 வயது. நான் திரு. கிருஷ்ணசாமி என்பவரை திருமணம் செய்து பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள நான்கு ரோடு துறைமங்கலத்தில் வசித்து வந்தேன்.

எனக்கு திருமணம் ஆகி 7 வருடங்கள் ஆகிறது. கடந்த ஏழு வருடங்களாக எங்களுக்கு குழந்தை இல்லை. ஆகவே குழந்தை பெறுவதற்கு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தேன்.

அப்போது 2018 இல் இரண்டு முறை கர்ப்பம் தரித்து இரண்டு மாதத்தில் கரு கலைந்து விட்டது.

2019 இல் சிகிச்சை பெற்று மூன்றாவது முறையாக கருத்தரித்தது. 5 மாதங்கள் வரை நன்றாக வளர்ந்த என் குழந்தை ஆறாவது மாதத்தில் தானாக கரு கலைந்து விட்டது.

2020 இல் என் கருப்பையில் நீர்கட்டி இருந்ததால். கருவியின் மூலம் எனக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

2021 இல் சிறுநீரக செயல்பாட்டில் தொந்தரவு இருந்ததால் 5 மாதம் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தேன்.

2023 இல் பெரம்பலூரில் உள்ள, மது தனியார் மருத்துவமனையில், கருத்தரிப்பதற்கான சிகிச்சை பெற்று வந்தேன். அப்பொழுது 25.01.2024 அன்று எனக்கு கர்ப்ப பரிசோதனை செய்யப்பட்டு எனது கர்ப்பம் உறுதி செய்யப்பட்டது.

என்னுடைய கடைசி மாதவிடாய் நாள் 17.12.2023 என்பதால் எதிர்பார்க்கப்படும் பிரசவ தேதி 24.09.2024 என்று கணக்கிட்டு எனக்கு தெரிவித்தனர்.

மேலும் அதே மருத்துவமனையில் கர்ப்பத்திற்காக சிகிச்சை மேற்கொண்டு வந்தேன்.

20.02.2024 அன்று பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள, துரைமங்கலம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் எனது கர்ப்பத்தை பதிவு செய்தேன்.

அன்று எனக்கு அனைத்து பரிசோதனையும் செய்யப்பட்டது. மேலும் மருத்துவர் எனக்கு ரத்த அழுத்தம், ரத்தத்தின் வகை எதிர்மறை மற்றும் அதிக கரு கலைவு போன்ற சிக்கல்கள் உள்ளதை எடுத்துரைத்தார்.

துறைமங்கலம் துணை சுகாதார நிலையத்தில் உள்ள செவிலியர் இடம் பதிவு செய்தேன். அவர் எனக்கு அதிக அறிவுரை வழங்கப்பட்டார். மாதம் மாதம் என்னை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு பரிசோதனை செய்ய வருமாறு அறிவுறுத்தப்பட்டார். மேலும் தடுப்பூசி போடுவதை பற்றியும் சர்க்கரை பரிசோதனை பற்றியும் உணவு முறை பற்றியும் மற்றும் எனது உடல்நிலை சிக்கல் பற்றியும் அறிவுரை வழங்கினார்.

மேலும் துறைமங்கலம் துணை சுகாதார நிலையத்தில் உள்ள செவிலியர் எனக்கு 19.03.2024 அன்று முதல் தடுப்பூசியும் 30.04.24 அன்று இரண்டாம் தடுப்பூசியும் எனக்கு போடப்பட்டார்.

1.3.24 அன்று முதல் ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கப்பட்டது. 30.04.24 அன்று இரண்டாம் ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கப்பட்டது. 19.03.24 அன்று துறைமங்கலம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு பரிசோதனைக்கு சென்ற போது எனது உடல்நிலை நலமாக உள்ளது என்று கூறினார்கள்.

16.04.24 அன்று துறைமங்கலம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு பரிசோதனைக்கு சென்ற போது. எனக்கு செய்யப்பட்ட பரிசோதனையில் சிறுநீரக பரிசோதனையில் சிக்கல் உள்ள காரணத்தினால் அன்று மாலை தலைமை மருத்துவரை காண்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டனர்.

16.04.24 அன்று மாலை 4:30 மணிக்கு தலைமை மருத்துவர் காண்பதற்கு சென்றபோது அவர் எனது உடலை பரிசோதித்து எனது குழந்தையின் இதயத்துடிப்பு நன்றாக உள்ளது என கூறினார். எனக்கு சிறுநீரக செயல்பாட்டில் சிக்கல் உள்ள காரணத்தினால், திருச்சி அரசு தலைமை மருத்துவமனைக்கு சென்று சிறுநீரக மருத்துவரை பார்த்து கருத்து வாங்க வேண்டும் என்று வலியுறுத்தினார்கள். ஆனால் நான் அரசு மருத்துவமனைக்கு செல்ல மறுத்துவிட்டேன் அன்றே தனியார் மருத்துவமனைக்கு சென்று பரிசோதித்த போது எனது சிறுநீரக செயல்பாடு நன்றாக உள்ளது என்று தனியார் மருத்துவர் கூறினார்.

பிறகு 15.05.24 அன்று ஐந்தாவது மாதத்தில் எனக்கு வயிற்று வலி ஏற்பட்டது. ஆகையால் தனியார் மருத்துவமனைக்கு உடனே சென்றேன். அப்போது மருத்துவர் எனக்கு கர்ப்பப்பை வாய் திறக்கப்பட்டுள்ளது. 5 மாதத்தில் குழந்தையின் வளர்ச்சி முழுமையாக அடையவில்லை ஆகையால் கர்ப்பப்பை வாயின் கீழே தையல் போட வேண்டும். என்று அறிவுறுத்தி கர்ப்பப்பை வாய் கீழே தையல் போடப்பட்டது. இரண்டு நாட்கள் அதே மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வந்தேன். அதன் பிறகு எனக்கு வயிற்று வலி ஏற்படவில்லை எனது குழந்தையும் நலமாக இருந்தது.17.05.24 அன்று மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு சென்றேன். பிறகு 28.05.24 அன்று எனக்கு காய்ச்சல் ஏற்பட்டது.

அதை பரிசோதிக்க அன்று மாலை 7:30 மணிக்கு தனியார் மருத்துவமனைக்கு சென்றேன் அப்பொழுது எனது வயிற்றில் உள்ள குழந்தையின் அசைவுகளையும் இதயத் துடிப்புகளையும் பார்த்தபோது குழந்தையின் துடிப்பு கேட்கவில்லை.

அப்போது மருத்துவர் என் குழந்தை வயிற்றிலேயே இறந்து விட்டது என்று கூறினார். அதன் பிறகு குழந்தையை வெளியே எடுக்க வேண்டும் என்று கூறினார் குழந்தை வெளியே வருவதற்கான மருந்து கொடுக்கப்பட்டது. மருந்து கொடுக்கப்பட்ட சிறிது நேரத்திலேயே இரவு 9:43 மணி அளவில் எனது அழகான ஆண் குழந்தை 700 கிராம் எடையுடன் இறந்து பிறக்கப்பட்டது. அதன் பிறகு எனக்கு காய்ச்சல் குறையவில்லை அதுக்கான சிகிச்சையும் அளிக்கப்பட்டது.

29.05.24 அன்று காய்ச்சல் எனக்கு குறையவில்லை, எனது இதயத்துடிப்பு அதிகரித்துக் கொண்டே இருந்தது. எனது சுய நினைவுகள் குறைந்து கொண்டே இருந்தது அதன் பிறகு மருத்துவர் திருச்சியில் உள்ள தனியார் சுந்தரம் மருத்துவமனைக்கு என்னை பரிந்துரை செய்தனர்.

29.05.24 இன்று மாலை 7 மணிக்கு 108 வாகனத்தில் மருத்துவமனை செவிலியர், என் அம்மா மற்றும் என் கணவர் ஆகியோர் என்னை திருச்சி சுந்தர மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். செல்லும்போதே என் சுய நினைவுகளை நான் இழந்து விட்டேன. மனம் பதப்பதைத்தது, உடலும் மனமும் வலுவிழந்தது பிறர் என்னை அழைப்பதை என்னால் உணர முடியவில்லை பிறகு திருச்சி சுந்தரம் தனியார் மருத்துவமனையில் 29.05.24 இரவு 9.31 மணிக்கு அனுமதிக்கப்பட்டு உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். எனக்கு செயற்கை சுவாசக் குழாயை பொருத்தி தீவிர சிகிச்சை வழங்கப்பட்டது.

மேலும் அனைத்து பரிசோதனையும் செய்யப்பட்டு சிறுநீரக செயல்பாடு மிகவும் குறைவாக உள்ளதால் அதற்கான சிகிச்சை முறையும் செய்யப்பட்டனர்.

சிறுநீரகப்பை சுருங்கி விட்ட காரணத்தினால் சிறுநீரகம் வெளியேறவில்லை ஆகையால் டயாலிசிஸ் என்ற சிகிச்சை முறையை செய்யப்பட்டனர். மேலும் திருச்சி சுந்தரம் மருத்துவமனையில் அதிதீவிர சிகிச்சை வழங்கப்பட்டு வந்தது. 12 நாட்கள் எனக்கு முறையான தீவிர சிகிச்சை வழங்கப்பட்டது. என் வாழ்வில் கடைசி நிமிடங்களை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த நான் திருச்சி சுந்தரர் மருத்துவமனையில் 9:06:24 இரவு 10:30 மணி அளவில் எனது குடும்பத்தினரையும் மீளா துயரத்தில் ஆழ்த்தி இறைவனடி சேர்ந்தேன்.

**"இறைவா ஏன் இந்த கோபம் என் மீது"**. எனினும் என் குடும்பத்தை பாதுகாப்பாய் என்ற நம்பிக்கையில் இவ் மண்ணுலகில் இருந்து விண்ணுலகத்திற்கு விடைபெறுகிறேன்.

மருத்துவர்களின் அறிவுரைகளை ஏற்க மறுத்த எனக்கு கிடைத்த இழப்பு, ஈடு செய்ய முடியாதது, விலை மதிப்பற்றது.

நான் இழந்தது என் உயிர் மட்டுமல்ல என் குடும்பத்தின் சந்தோஷம் ,நான் இறந்தும் வேதனை அடைகிறேன்.

## 12. என் குழந்தை அனாதை இன்று

என் பெயர் நித்தியா .21 வயது .நான் திரு தீனா குமார் என்பவரை திருமணம் செய்து மயிலாடுதுறை மாவட்டத்தில் கொள்ளிடம் வட்டாரத்தில் உள்ள ஆர்பாக்கம் திருநாவுக்கரசநல்லூர் கிராமத்தில் வசித்து வந்தேன்எனது திருமணம் காதல் . எங்களுக்கு திருமணம் ஆகி இரண்டு ஆண்டுகள் .திருமணம்வரை குழந்தை இல்லை. எனது கர்ப்பம் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் குன்னத்தில் உறுதி செய்யப்பட்டது. மிகவும் சந்தோசமாக இருந்தேன்.

எங்கள் கிராமத்திற்கு அருகில் உள்ள துணை சுகாதார மையமான அரசூர் துணை சுகாதார நிலையத்தில் எனது கர்ப்பத்தை பதிவு செய்து கொண்டேன். எங்களது கிராம சுகாதார செவிலியர் எனது எதிர்பார்க்கப்படும். பிரசவ தேதி கணக்கிட்டு தாய் சேய் நல அட்டையும்வழங்கினார். கர்ப்ப கால பராமரிப்புக்கு உட்படுத்தப்பட்டேன் குன்னம் .PHC ல் முறையும் 10, துணை சுகாதார நிலையத்தில் முறையும் 5, சீர்காழி அரசு மருத்துவமனையில் முறையும் 3 பரிசோதனை செய்து கொண்டேன். அன்று ஸ்கேன் செய்யப்பட்டு 7 வார கர்ப்பம் உறுதி செய்யப்பட்டது. குழந்தைக்கு இருதய துடிப்பு உள்ளது என்றும்., குழந்தை நன்றாக உள்ளது என்றும் கூறினார்கள்.

ஆரம்ப சுகாதார நிலையம் குன்னத்தில் அனைத்து ஆய்வக பரிசோதனைகளும் செய்து கொண்டேன். போலிக் அமில மாத்திரையும், முதல் தவணை இரணஜன்னி தடுப்பூசியும், இரண்டாவது தவணை இரண ஜன்னி தடுப்பூசியும் வழங்கினார்கள்எனது கர்ப்ப காலத்தில் இரத்தத்தில் . ஹீமோகுளோபின் அளவும், இரத்த அழுத்த அளவும், இரத்தத்தில் சர்க்கரை அளவும் கர்ப்ப காலம் முழுவதும் பிரசவித்த பிறகும் சரியாகவே இருந்தது. எனக்கு சளி, ஜுரம் ஏற்பட்டதால் சீர்காழி GH ல், உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்றுக் கொண்டேன் .பிறகு டிஸ்சார்ஜ் செய்யப்பட்டு வீட்டுக்கு வந்தேன்.

அதில் குழந்தை சற்று .மூன்றாவது முறை ஸ்கேன் பரிசோதனை செய்து குறைவாக இருப்பதாக கூறினார்கள். PHC குன்னத்திலிருந்து GH சீர்காழிக்கு பரிந்துரை செய்யப்பட்டேன் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று, நலமுடன் வீடு திரும்பினேன். அன்று அடிவயிற்று வலியும் வெள்ளைப்படுதலும் இருந்ததால் GH சீர்காழிக்குச் சென்றேன் அன்றே சிதம்பரத்தில் ராஜாமுத்தையா மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரைக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டேன். அன்று காலை நான்கு மணிக்கு அறுவை சிகிச்சை மூலம் .அழகான பெண் மகளை ஈன்றெடுத்தேன் நானும் என் மகளும் நலமாக டிஸ்சார்ஜ் செய்யப்பட்டு வீட்டிற்கு வந்தோம்மருத்துவமனையில் இருந்து எனது தாய் வீடான . பெத்தடி தெரு சீர்காழி சென்று தங்கினேன். பிரசவித்த நாள் அன்றும் கிராம சுகாதார செவிலியர் எனது வீட்டிற்கு வந்து என்னை பரிசோதனை செய்தார் இரத்த அழுத்தம் பரிசோதித்து மற்றும் அறுவை சிகிச்சை செய்து தையல் . இடப்பட்ட பகுதியை பரிசோதித்து நன்றாக உள்ளது என்று எனக்கு அதற்குப் பிறகு உதிரப்போக்கு நின்றிருந்தது.

பிரசவித்த 30ஆம் நாள் சசொட்டாக உதிரப்போக்கும் தாய்ப்பால் கட்டிக்கொண்டு மார்பக வீக்கமும் இருந்ததால், அரசு மருத்துவமனை சீர்காழிக்கு மாலை 6மணிக்கு நானும் என் அம்மாவும் மருத்துவரை சந்தித்து பரிசோதனையை முடித்துவிட்டு உதிரப்போக்கு சாதாரணமாக தான் உள்ளது என்று கூறி மார்பக வீக்கத்திற்கு ஆயின்மென்ட் மட்டும் எழுதிக் கொடுத்தார் அடுத்த நாள் காலை அன்று காலை சற்று உதிரப்போக்கு அதிகமாக இருந்ததுஎனது தாயும் வேலைக்காக வெளியில் சென்று விட்டார். அசாதாரணமாகஉதிரப்போக்கு ஏற்படவில்லை ஆனால் சிறிதளவு உதிரப்போக்கு இருந்ததுநேரமாக ஆக ஆக எனக்குள் ஏதோ மாற்றம் நிகழ்வதை உணர்ந்தேன் அப்பொழுதும் எனக்கு யாரையாவது என் தாயையாவது தொடர்பு கொள்ள வேண்டும் என்று ஏனோ தோன்றவில்லை., கிராம சுகாதார செவிலியரையாவது உடனே அழைத்து இருந்திருக்கலாம்...

அதுவும் ஏனோ தோன்றவில்லை...

நேரம் ஆக ஆக சற்றே மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்ட பிறகு தான் எனக்குள் பயம் வந்ததுதாயின் நினைவும் வந்தது.உடனே அலைபேசியில் அவரை தொடர்பு கொண்டேன். என் தாயும் உடனே வந்து விட்டார்கள். மூச்சு விட சிரமமாக இருப்பதாக கூறினேன்என் அம்மா உடனடியாக ஒரு ஆட்டோவை அழைத்து அருகிலுள்ள சீர்காழி அரசு மருத்துவமனைக்கு என்னை அழைத்துச் சென்றார்கள்.

ஆட்டோவில் ஏறும் போது நினைவிருந்ததுநேரம் செல்லசெல்ல எனது சுயநினைவை இழக்க ஆரம்பித்தேன். அரசு மருத்துவமனைக்குள் செல்லும் பொழுது மூன்றரை மணிஅப்பொழுது அங்கு மருத்துவர் என்னை பரிசோதித்து விட்டு வழியிலேயே நான் இறந்து விட்டதாக கூறினார்களாம்.

என் உடல்நிலை மாற்றத்தை உணர்ந்துஆரம்ப நிலையிலேயே உரிய நேரத்தில் நான் யாரையாவது என் தாயையோ அல்லது கிராம சுகாதார செவிலியரையோ தொடர்பு கொண்டு இருந்தால் இன்று நான் உயிரோடு இருந்திருப்பேன்

சாதாரண மாதவிடாய் தானே என்று நினைத்தேன்

அதுவும் அதிகமாக இல்லையே என்றும் நினைத்து அலட்சியமாக இருந்து விட்டேன்

மருத்துவர்களும் கிராம சுகாதார செவிலியரும் எனக்கு ஏற்கனவே அறிவுரை கூறியிருந்தபடி ஏதாவது உடலில் அசாதாரணமாக சிறிய மாற்றம் தெரிந்தால் கூட அல்லது உணர்ந்தால் கூட உடனடியாக அவர்களை தொடர்பு கொள்ளும்படி கூறியிருந்த அறிவுரையை மறந்ததால் எனக்கு இந்த அவலம் நேரிட்டதுஅது இவ்வளவு சிக்கலில் என்னைஅழைத்துச் செல்லும் என்று நான் சிறிதுகூட நினைக்கவில்லைஇன்று என் குழந்தையை அனாதையாக விட்டு விட்டு இறந்து விட்டேன் என் அன்பு சகோதரிகளுக்கு நான் கூற விரும்புவது என்னவென்றால்

யார் விட்ட சாபமோ அல்லது கடவுள்கடவுளின் கோபமோஎன்றெல்லாம் நினைக்காமல் கர்ப்ப காலத்திலோ பிரசவ காலத்திலோ பிறகோ ஏதேனும் அசாதாரணமாக நமது உடல் நிலையில் சிறிய மாற்றம் தெரிந்தாலும் அலட்சியமாக நினைக்காமல் உடனடியாக கிராம சுகாதார செவிலியரரை அலைபேசியில் தொடர்பு கொண்டோ அல்லது அருகிலுள்ள மருத்துவமனைக்கு உடனடியாக சென்று மருத்துவரிடமோ உடல் நலத்தை பரிசோதனை செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்

இந்த தவறை நீங்கள் யாரும் செய்யாமல் மருத்துவர்கள் கூறும் ஆலோசனைகளையும் ஆலோசனைகளின் படி செவிலியர்கள் மற்றும் கிராம சுகாதார செவிலியர்களின் வழிகாட்டுதலின்படி பராமரிப்பு பெற்று உரிய நேரத்தில் சிகிச்சைக்கு சென்று உங்கள் உடல் நலத்தை காத்துக் கொள்ளுங்கள்

என்னைப்போல் என்னுடைய குழந்தையை அனாதையாக்கி விடாமல் இருக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

## 13. இரவிற்குப்பின் விடியல் ஆரம்பம்

எனது பெயர் லிடியால் ராஜகுமாரி எனது கணவரின் பெயர் ஜாக்சன் ஹாரிஸ் நான் நம்பர் 5 கீதம் நகர் வயலூர் மெயின் ரோடு திருச்சிராப்பள்ளி என்ற முகவரியில் வசித்து வந்தேன். என்னுடைய மூன்றாவது கர்ப்பத்தினை நகர்ப்புற சுகாதார நிலையம் ராமலிங்கம் நகரில் உள்ள சாந்தா ஷீலா நகர் பிரிவு 4 நகர்புற சுகாதார நிலைய செவிலியரால் 11 வாரத்தில் பதிவு செய்யப்பட்டது. எனது கடைசியாக மாதவிலக்கான தேதி 17.10.2022 எனவே எனக்கு பிரசவம் 24.07.2023 அன்று நடைபெற வாய்ப்புள்ளதாக எனது கர்ப்பத்தினை பதிவு செய்த நகர்ப்புற துணை சுகாதாரசெவிலியர் கூறினார்.

நான் அரசு நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம், அரசு மருத்துவமனை மற்றும் தனியார் மருத்துவமனைகளில் 17 முறை எனது கர்ப்பகால பரிசோதனையை செய்து கொண்டேன்.

அதாவது அருண் மருத்துவமனை திருச்சிராப்பள்ளியில் 5 முறையும், நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் ராமலிங்கம் நகரில் 6 முறையும், அரசு மருத்துவமனை குளித்தலையில் 3 முறையும், நியூ லைப் ஹாஸ்பிடல் குளித்தலையில் 3 முறையும் எனது கர்ப்ப கால பராமரிப்பினை செய்து கொண்டேன்.

என்னுடைய முந்தைய பிரசவம் அறுவை சிகிச்சை மூலம் நடைபெற்றதாலும் இது எனக்கு மூன்றாவது கர்ப்பம் என்பதாலும் இந்த பிரசவம் ஆபத்தாக இருக்கக்கூடும் என்று என்னிடம் மருத்துவ அலுவலர்கள் மற்றும் நகர்ப்புற துணை சுகாதார செவிலியர் கூறினார்கள்.

என்னுடைய முதல் கர்ப்ப கால பராமரிப்பினை திருச்சிராப்பள்ளியில் உள்ள அருண் மருத்துவமனையில் 28.11.2022 அன்று செய்து கொண்டேன் அங்கே என் என்னுடைய உயரம், எடை, இரத்த அழுத்தம் மற்றும் ஸ்கேன் பரிசோதனைகள் செய்தனர் அப்பொழுது என்னுடைய கர்ப்பகாலம் 6 வாரங்கள் ஆகும். எனக்கு சில மருந்துகளும் கொடுத்து ஆலோசனைகள் வழங்கினார்கள்.

என்னுடைய கர்ப்பகால பராமரிப்பினை 21.12.22 அன்று திருச்சிராப்பள்ளியில் உள்ள அருண் மருத்துவமனையில் செய்து கொண்டேன் அப்பொழுது எனக்கு 10 வார கர்ப்பம். எனக்கு எடை, இரத்த அழுத்தம்மற்றும் ஸ்கேன் எடுத்தார்கள் வயிற்றில் குழந்தை நன்றாக உள்ளது என்று கூறினார்கள்.

என்னுடைய கர்ப்பகால பராமரிப்பினை திருச்சிராப்பள்ளியில் உள்ள அருண் மருத்துவமனையில் 19.01.2023 அன்று செய்து கொண்டேன் அங்கே எனக்கு இரத்த பரிசோதனை சிறுநீர் பரிசோதனை மற்றும் சில சிறப்பு பரிசோதனைகளும் செய்தார்கள்.

எனது கர்ப்பகால பராமரிப்பினை 28.02.2023 அன்று ராமலிங்கம் நகரில் உள்ள நகர்ப்புறஆரம்ப சுகாதார நிலையத்தில் செய்து கொண்டேன். எனக்கு இரத்த அழுத்தம், எடை மற்றும் குழந்தையின் இதயத்துடிப்பு போன்றவற்றை

பரிசோதித்தார்கள் ஆரோக்கியமாக இருப்பதாக கூறினார்கள் எனது எனக்கு அப்பொழுது 20 வார கர்ப்பம்.

எனது கர்ப்ப கால பராமரிப்பினை குளித்தலையில் உள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் 16.06.2023அன்று செய்து கொண்டேன் எனக்கு அங்கே இரத்த அழுத்தம், எடை, இரத்தப் பரிசோதனை, சிறுநீர் பரிசோதனை செய்தார்கள் சிறுநீரில் சர்க்கரை இருப்பதாக தெரிவித்தார்கள் மேலும் இரத்த சர்க்கரை அளவு சற்று கூடுதலாக இருப்பதாகவும் எனது கர்ப்பகால வாரம் 30 என்றும் குழந்தை 32 வாரம்நன்றாக உள்ளது என்றும் தெரிவித்தார்கள் . மேலும் எனது இரத்த சர்க்கரை அளவு சற்று கூடுதலாக இருப்பதற்கும்மற்றும் சிறுநீரில் சர்க்கரை உள்ளதற்கும் சிகிச்சை பெற என்னை குளித்தலை அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தனர்.

எனது கர்ப்பகால பராமரிப்பினை 20.06.2023 அன்று குளித்தலையில் உள்ள நியூ லைப் மருத்துவமனையில் செய்து கொண்டேன் அங்கே எனக்கு இரத்த அழுத்தம், எடை, ஸ்கேன் பரிசோதனை,இரத்தப் பரிசோதனை செய்தார்கள். எனது கர்ப்ப வாரம் 35 வாரங்கள். அங்கே என்னுடைய கர்ப்பகால நீரிழிவு நோயை கட்டுப்படுத்த இன்சுலின் மருந்தினை ஆரம்பித்தார்கள்.

எனது கர்ப்பகால பராமரிப்பினை 09.07.அன்று குளித்தலையில் 2023 உள்ள நியூ லைப் மருத்துவமனையில் செய்து கொண்டேன் என்னையும் என்னுடைய வயிற்றில் உள்ள குழந்தையையும் காப்பாற்ற மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சை பெற வேண்டும் என்று மருத்துவர்கள்ஆலோசனை வழங்கினார்கள்ஆனால் நான் அதற்கு விருப்பம் தெரிவிக்காமல் மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு சென்று விட்டேன்.

எனதுபாதுகாப்பான பிரசவத்திற்காக 13.07.2024 அன்றுபிற்பகல் 12.10 மணிக்கு குளித்தலையில் உள்ள அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, எனது உடல் நிலையை கருத்தில் கொண்டும், முந்தைய பிரசவம் அறுவை சிகிச்சை மூலம் நடைபெற்றதாலும் தற்போது கர்ப்பகால நீரிழிவு நோய் உள்ளதாலும் குழந்தையின் இதயத்துடிப்பு மற்றும் கருப்பை சுருக்கங்கள் சரியான அளவில் இல்லாததினாலும் 14.07.2023 அன்றுமாலை 06.32 மணிக்கு மீண்டும் அவசரகால பிரசவ அறுவை சிகிச்சையுடன் குடும்ப நல அறுவை சிகிச்சை செய்தார்கள்.

நான் 18.07.2023 அன்று மாலை 06.32 மணிக்கு இரண்டு முறை வாந்தி எடுத்தேன். இரத்த அழுத்தம், நாடித்துடிப்பு, உடல் வெப்பநிலை, SPO2, மற்றும் இரத்த சர்க்கரையின் அளவை பரிசோதித்தார்கள். மருந்துகள்கொடுத்தார்கள். மேலும் நான் வாந்தி எடுத்ததற்கான காரணத்தை கண்டறியவும், கண்காணிக்கவும் மேல் சிகிச்சை பெறவும்திருச்சிராப்பள்ளியில் உள்ள மகாத்மா காந்தி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்து அனுப்ப அறிவுறுத்தினார்கள். ஆனால் மருத்துவ ஆலோசனைக்கு எதிராக எனக்கு விருப்பம் இல்லை என்று கூறி மகாத்மா காந்தி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு செல்ல மறுத்து என் சொந்த விருப்பத்தின் பேரில்வீட்டிற்குசெல்வதாக கூறி கையெழுத்திட்டு மருத்துவமனையில் இருந்து சென்று விட்டேன்.

நான் 18.07.2023 அன்று 08.30 மணிக்கு எனக்கு இரண்டு நாட்களாக வாந்தி இருந்தது அன்று மதியம் ஒரு முறை தளர்ந்த மலம் கழித்ததால் குளித்தலையில் உள்ள நியூ லைப் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன்.

எனக்கு காய்ச்சல் இல்லை, நான் சுயநினைவுடன் இருந்தேன். வயிறு பெருமளவில் வீங்கி இருந்தது. குடல் பரிசோதனையில் குடல் அசைவுகளின் சத்தம் எதுவும் கேட்கவில்லை. அறுவை சிகிச்சை செய்த காயம் நன்றாக ஆரோக்கியமாக இருந்தது.

மருத்துவமனையில் இரண்டாவது நாளான 19.07.2023 அன்றும்வயிறு வீங்கி காணப்பட்டது. குடல் அசைவுகள் மெல்ல கேட்டது. மலம் கழிக்கவில்லை, குடலிலிருந்து வாயு வெளியேறவில்லை. அல்ட்ரா சவுண்ட் பரிசோதனை செய்யப்பட்டது அதில் சிறுகுடல் ஓரளவுக்கு விரிந்த நீர் நிறைந்து மற்றும் அசைவுகள் குறைவாக காணப்படுவதாக கூறப்பட்டது. மருத்துவமனையில் 21.07.2023 அன்று எனக்கு வயிறு வீங்கி காணப்பட்டது. அறுவை சிகிச்சைக்குப் பின் ஏழாம் நாள் தையல்கள் அகற்றப்பட்டன. நான் நன்றாக இருப்பதாகவும் வீட்டிற்கு செல்ல வேண்டும் என்றும் வற்புறுத்தினேன். நான் சிகிச்சைகளை புற நோயாளியாக வந்து எடுத்துக் கொள்வதாக கூறினேன். வீட்டிற்கு செல்வதனால் வரக்கூடிய ஆபத்துக்கள் மற்றும் பின் விளைவுகளை விளக்கமாக கூறினார்கள்,தொடர்ந்து பரிந்துரைக்கப்பட்ட படி மருந்துகளை உட்கொள்ளவேண்டுமென்றும், இரண்டு நாட்களுக்குப் பிறகு மீண்டும் 23.07.2023 அன்றுபரிசோதனைக்காக வர வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள்.

எனவே என்னுடைய விருப்பத்தின் பேரில் மருத்துவமனையில் இருந்து 21.07.2023 அன்று 12 மணிக்கு விடுவிக்கப்பட்டேன்.

மருத்துவர்கள் கூறியபடி நான்23.07.2023 அன்று பரிசோதனைக்கு செல்லவில்லை.

26.07.2023 அன்று மலம் கழித்தேன், 4 நாட்களாக வாந்தி இருந்தது, வயிறு வீங்கி இருந்தது, வயிற்றில் வலி இருந்தது, இரண்டு கால்களும் வீங்கி இருந்தது எனவே மாலை 05.44 மணிக்கு Front line மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன். குடல்கள் ஒன்றுடன் ஒன்று ஒட்டி இருப்பதனால் குடலில் அடைப்பு ஏற்பட்டுசிறுகுடல் முழுவதும் விரிவடைந்து மேலும் சிறு குடலுக்கு இரத்தம் செல்லாமல் சுருங்கி காணப்பட்டது ஜிஜினத்தின் பல இடங்களில் துளைகளும் உள்ளது கண்டறியப்பட்டது எனவே உடனடியாக எனக்கு 28.07.2024 அன்று லேப் ரோட்டமி அறுவை சிகிச்சை செய்து டியோடினம் ஜிஜினத்துடன் இணைக்கப்பட்டது.

அன்று மாலை 4:00 மணிக்கு வயிற்றில் அறுவை சிகிச்சை செய்த இடத்திலிருந்து பித்த நீர் வருவது கண்டறியப்பட்டது அன்று இரவு 08.30 மணிக்கு மீண்டும் அறுவை சிகிச்சை செய்த இடம் பிரித்து பார்க்கப்பட்டது. தொற்றினை கட்டுப்படுத்த சிரை வழியாக அதிக வீரியமிக்க ஆன்ட்டிபயாட்டிக் மருந்துகள், தேவையான திரவம் மற்றும் புரதம் அளித்தார்கள், செயற்கை சுவாசக் கருவி பொருத்தப்பட்டு தேவையான சிகிச்சை அளித்தார்கள்.

09.07.2023 அன்று எனக்கு Bilateral pneumonia இருப்பது கண்டறியப்பட்டது உடனடியாக செயற்கை சுவாச கருவி பொருத்தப்பட்டு உயிர்ப்பிக்கும் மருந்துகள் மற்றும் தேவையான சிகிச்சைகளும் அளித்தார்கள்.

இது போன்ற அனைத்து சிகிச்சைகளுக்கு பின்னரும் எனக்கு இதயத்துடிப்பு ஒரு நிமிடத்திற்கு40 இருந்தது. அன்று மாலை 6 மணிக்கு எனது நிலை மிகவும் மோசமடைந்தது மருந்துகள் மற்றும் உயிர்ப்பிக்கும் முறைகள் செய்யப்பட்டது இருந்தும் முயற்சிகள் பல பலனளிக்காமல் 09.08.2023 அன்று மாலை 6:35 மணிக்கு நான் இறந்து விட்டேன்.

எனது இறப்பிற்கு காரணம் என்னுடைய அஜாக்கிரதியான நடத்தை, மருத்துவர்களின் அறிவுரைகளை ஏற்காதது என்னுடைய சுய விருப்பத்தின்படி நடந்து கொண்டதினால் எனக்கு இறப்பு ஏற்பட்டது.

நான் என்னுடைய இறப்பு காரணத்தை உங்களுக்கு எழுதி சமர்ப்பிப்பதற்கான காரணம் என்னுடைய இறப்பு மற்ற கர்ப்பிணிகளுக்கு ஒரு பாடமாக அமைய வேண்டும் என்ற நோக்கத்துடன் நான் இதை கூறி இருக்கிறேன் கர்ப்பிணிகள் அனைவரும் மருத்துவர்கள் கூறும் அறிவுரைகள், ஆலோசனைகளை கடைப்பிடித்து நலமுடன் உங்கள் குழந்தைகள் மற்றும் குடும்பத்தினருடன் வாழ வேண்டும் என்பதே எனது விருப்பம். நானே சுயமாக முடிவு எடுத்ததன் விளைவாக என்னுடைய இறப்பு நிகழ்ந்தது இந்த தவறை வேறு யாரும் செய்ய வேண்டாம்.

**உங்களுக்கான விடியல் ஆரம்பம் ஆகட்டும்**

## 14. என் சுவாசக் காற்றே!!

என்னுடைய பெயர் சங்கீதா சதீஷ்குமார், சொந்த ஊர் சீயமங்கலம். எங்களுககு திருமணமாகி 3 ஆண்டுகள் ஆகிறது. எனக்கு ஏற்கெனவே 2 முறை கருக்கலைந்த நிலையில் நான் மூன்றாவது முறையாக கர்ப்பம் தரித்துள்ளேன். இந்தக்குழந்தையை நல்லமுறையில் பெற்றெடுத்து வளர்க்க கூடுதல் கவனத்துடன் இருக்கும்படி குடும்பத்தினரை அறிவுறுத்தப்பட்டேன். எனவே, அருகிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையம், தேவூர் சென்று தேவையான கர்ப்பகால கவனிப்பு மற்றும் பரிசோதனைகள் செய்துகொண்டேன். மருத்துவர் மற்றும் செவிலியர்கள் தேவையான பரிசோதனைகளை மேற்கொண்டு குழந்தை நல்லபடியாக வளர தேவையான மருந்து மாத்திரைகளை கொடுத்து அனுப்பினர்.

மேலும், அடுத்தடுத்த கர்ப்பகால பரிசோதனைகளை ஆரம்ப சுகாதார நிலையத்தில் மேற்கொண்டேன். மேலும், ஏழாவது மாதத்தில் கால்வீக்கம் இருந்ததால் மகப்பேறு மருத்துவரின் ஆலோசனைக்காக அனுப்பினர். அங்கு அவர் கால்களை உயரமாக வைத்து உறங்கும்படியும், ஓய்வெடுக்கும்படியும். கடினமான வேலைகளை செய்யக்கூடாது என்றும் அறிவுறுத்தினர். பின்பு, 08.05.23 அன்று இரத்தசோகை மற்றும் கால்வீக்கம் காரணமாக செங்கல்பட்டு அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டேன்.

09.05.23 அன்று செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டேன். அங்கு இரத்தசோகை காரணமாக 1 யூனிட் இரத்தம் ஏற்றினர். குழந்தைக்கு மூச்சுத்திணறல் காரணமாக 15.05.23 அன்று இரவு 9.52 மணிக்கு ஆபரேஷன் மூலமாக அழகான ஆண் குழந்தை பிறந்தது.

16.05.23 அன்று காலை என்னுடைய வயிறு வீக்கம் அடைய ஆரம்பித்தது. எனவே, அதற்கான பரிசோதனைகளை செய்து மீண்டும் 16.05.23 அன்று ஆபரேஷன் தியேட்டருக்கு கொண்டு சென்று மீண்டும் அறுவை சிகிச்சை செய்தனர். ஆனாலும் சிகிச்சை பலனின்றி நான் இறந்துவிட்டேன்.

நான் என்னுடைய மகனை நல்லபடியாக பெற்றெடுத்து வளர்க்க ஆசைப்பட்டேன். ஆனால், அது நடக்காமல் போனது. என்னுடைய குழந்தையை தனியாக விட்டு வந்துவிட்டேன்.

## 15. இன்னுயிரை இழந்த தாயின் தவிப்பு

நான் ராணி என் வயது 32 திரு சரண்ராஜ் என்பவரை திருமணம் செய்து கொண்டேன். எங்களுக்கு இரண்டு வயதில் ஆண் குழந்தை உள்ளது. ராணிப்பேட்டை மாவட்டம் ஓட்டேரியல் நாங்கள் வசித்து வந்தோம், நிறைவாக சென்ற என் வாழ்வில் மேலும் மகிழ்ச்சியூட்டும் விதமாக இரண்டாவதாக கர்ப்பம் அடைந்தேன். 14.08.2023 அன்று ஜெயராம் நகர் துணை சுகாதார நிலையத்தில் இரண்டாவது கர்ப்பத்தை பதிவு செய்தேன், எதிர்பார்க்கப்படும் பிரசவ தேதி என்று கூறினார்கள் அன்றே ராணிப்பேட்டை நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்திலும் பரிசோதனை செய்து கொண்டேன். மேலும் அதே தேதியில் ராஜேஸ்வரி என்ற தனியார் மருத்துவமனையில் ஸ்கேன் பரிசோதனை செய்து கர்ப்பப்பையில் கர்ப்பம் உறுதி செய்யப்பட்டது. மூன்றாவது மாதத்தில் இரண்டு முறை ராணிப்பேட்டை நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் கர்ப்பகால பரிசோதனைகள் செய்து கொண்டேன். மேலும் அங்கு பரிசோதனை செய்த சிறப்பு மகப்பேறு மருத்துவர் என்னை வேலூர்.

அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இதய செயல்பாடுகளுக்கான பரிசோதனையை செய்து கொள்ளும் படி அறிவுறுத்தினர். சத்து மாத்திரைகளை வழங்கினார்கள். எல்லாம் நல்ல விதமாக நடக்க வேண்டும் என்று எண்ணம் என் மனதில் ஓடிக்கொண்டிருந்தது.

4–வது மாதத்தில் சிஎம்சி மருத்துவமனையிலும் ஒரு பரிசோதனையை செய்து கொண்டேன். குழந்தை வளர்ச்சிக்கான ஸ்கேன் செய்ய சொன்னார். மறுபடியும் அதிலும் நன்றாக இருந்தது.

5–வது மாதத்தில் என்னை இசிஜி எடுக்கும்படியும் தைராய்டு டெஸ்ட் செய்யும்படியும் அறிவுறுத்தினார்கள் அதையும் செய்து கொண்டேன். குழந்தையின் வளர்ச்சிக்கான ஸ்கேன் பரிசோதனை இசிஜி எக்கோ என அனைத்து பரிசோதனைகளையும் செய்து கொண்டேன். அதில் எல்லாம் சாதாரணமாக உள்ளதாக கூறினார்கள். என் கர்ப்ப காலமும் பிரசவ காலமும் நல்லபடியாக இருக்க வேண்டும் என்று என் மனதில் இறைவனை வேண்டிக் கொண்டே இருந்தேன்.

6–வது மாத பரிசோதனைகளும் நல்லபடியாக நடந்தது. இதுவரை எந்தவித சிக்கலும் இன்றி நல்லபடியாக சென்றது. ஆனால் 7–வது மாத பரிசோதனையில் ரத்த சக்கரை அளவு சற்று அதிகரித்து காணப்பட்டது. அதற்கான சிகிச்சையும் அறிவுரையும் வழங்கினார். இதுவரை என் மனதில் இருந்த லேசான நெருடல் சற்று அதிகரித்தது.

8–வது மாதம் சிஎம்சி மருத்துவமனையிலும் ராணிப்பேட்டை நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்திலும் பரிசோதனையை செய்து கொண்டேன் அதிகரித்த சர்க்கரை அளவு கட்டுக்குள் இருப்பதாக கூறினார்கள்.

9–வது மாத கர்ப்ப காலமும் எந்தவித புதிய சிக்கலும் இன்றி நல்லபடியாக கடந்தது. ஆனால் 10–வது மாதத் தொடக்கத்தில் 23.02.2024 அன்று லேசான அடிவயிற்று வலி மற்றும் நான்கு முறை வயிற்றுப்போக்கு ஆகிய பிரச்சனைகளோடு சிஎம்சி மருத்துவமனைக்கு சென்றேன். அப்போது மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் குழந்தை நன்றாக உள்ளது என்றும் எனக்கு வாய்வழி உப்புச் சர்க்கரை திரவ சிகிச்சை மட்டும் தேவை என்று கூறினார்கள் அடுத்த நாள் திரும்ப வரும்படி அறிவுறுத்தினார்கள். இதைக் கேட்டு மனம் சற்று

ஆறுதல் அடைந்தது. அடுத்த இரண்டு வாரங்களில் செய்யப்பட்ட பரிசோதனைகளில் எந்தவித பிரச்சனையும் இல்லை.

ஆனால் கடைசி வாரத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறுநீர் பரிசோதனையில் கிருமி தொற்று உள்ளதாக கூறி ஐந்து நாட்களுக்கான சிகிச்சையை வழங்கினார்கள். என்ன இது கடைசி நேரத்தில் பிரச்சினை ஏற்படுகின்றதோ என பதட்டம் இருந்தது.

மேலும் 18 ஆம் தேதி எனக்கு தூண்டுதல் மூலம் பிரசவிக்கலாம் என்று முடிவு செய்து என்னிடம் எடுத்துரைத்தார்கள். நகர்ப்புற செவிலியரும் எனக்கு முன்கூட்டியே ஞாபகப்படுத்தினார்கள். மேலும் அபாய அறிகுறிகள் பற்றியும் கூறினார்கள். இறைவனிடம் என் மனம் அனைத்தையும் நன்றாக நடத்திக் கொடு என்று மன்றாடியது.

18.03.2024 அன்று பிரசவித்திற்காக சிஎம்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன் இதுவரை 26 முறை கர்ப்பகால பரிசோதனைகளை மேற்கொண்டேன். எனவே கடவுள் என்னை கைவிட மாட்டார் என்ற நம்பிக்கை இருந்தாலும் பயமும் இருந்தது.

19.03.2023 அன்று அதிகாலை 3 மணி அளவில் பனிக்குடம் உடைந்தது. அப்பொழுது செய்த பரிசோதனையில் குழந்தையின் இதயத்துடிப்பு குறைவாக உள்ளதாக கூறினார்கள் என் இதயத்துடிப்பு அதிகரித்தது. அறுவை சிகிச்சை மூலம் எனக்கு இரண்டாவதாக ஆண் குழந்தை பிறந்தது. ஆனால் என்னால் என் குழந்தையை பார்க்க முடியவில்லை மயங்கிய நிலையில் இருந்தேன். என் மனக்கண்களால் பார்த்து ரசித்த என் குழந்தையை என் நிஜ கண்களால் காண முடியவில்லையே. என் குழந்தை பிறந்த நாள் என் வாழ்வில் கடைசி நாளாக அமையும் என்று நினைக்கவில்லை.

பிரசவத்திற்குப் பிறகு அதிகமாக உதிரப்போக்கு ஏற்பட்டதால் அதனை சரி செய்ய கர்ப்பப்பையை அறுவை சிகிச்சையில் எடுத்துவிட்டார்கள். அதோடு என் பிரச்சனையை சரியாகவில்லை ஆனால் மேலும் மோசம் அடைந்தது என் இதயத்துடிப்பு நின்றுவிட்டது மருத்துவர்கள் எவ்வளவோ முயற்சி செய்தும் என் இதயம் துடிக்க மறுத்துவிட்டது.

***இறைவா உன் கணக்கு தான் என்ன? எதற்காக என்னை என் இரு பிள்ளைகளிடமிருந்து பிரித்தாய் எனக்கு அநியாயம் செய்து விட்டாய் என்னை கைவிட்ட நீ என் குழந்தைகளை காத்திட வேண்டும் என்று மன்றாடி வேண்டிக் கொள்கின்றேன்.***

## 16. காற்றினிலே கலந்த ஜீவன்

என் பெயர் ரஞ்சிதா. வயது 22 நான் சத்யராஜ் என்பவரை திருமணம் செய்துகொண்டு கரியலூர் தாலுகா சேத்தூர் கிராமத்தில் சந்தோஷமாக வாழ்ந்து வந்தேன். எங்களுக்கு திருமணம் முடிந்து ஆறு வருடங்கள் ஆயின நாட்கள் கடந்தது ஆனால் எங்களுக்கு குழந்தை இல்லையே என்ற வருத்தம் மட்டும் இருந்து கொண்டே இருந்தன. சொந்தக்காரர்கள் அனைவரும் ஏதாவது சிகிச்சை எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்னார்கள்.

கடவுள் புண்ணியத்தால் எனது மாதவிடாய் நாட்கள் தள்ளிப்போனது. அறம் பூண்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர்கள் கர்ப்பத்தை உறுதி செய்தனர் அளவில்லா ஆனந்தம் அடைந்தேன் அங்கு என் கர்ப்பத்தை பதிவும் செய்து கொண்டேன்.

நான் மொத்தமாக கரியலூர் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் மூன்று முறை சென்று பரிசோதனை செய்துக்கொண்டேன். ஐந்து முறை அறம் மூண்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் பரிசோதனை செய்துக்கொண்டேன்.

என்னுடைய கடைசி மாதவிடாய் நாள் 10.09.22 என்பதால் எதிர்பார்க்கப்படும் பிரசவ தேதி 17.6.23 என்று கணக்கிட்டு எனக்கு தெரிவித்தனர். எனக்கு அங்கு ஆய்வக பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது மற்றும் எனது எடை உயரம் பார்க்கப்பட்டது. எனது எடை 37.5 கிலோ கிராம் என்பதால் என்னை சிக்கலான கர்ப்பிணி என்று பதிவு செய்தனர்.

மூன்றாவது மாதத்தில் பரிசோதனைக்காக அறம் பூண்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்றேன் அங்கு ஆய்வக பரிசோதனைகள் செய்யப்பட்டது. ஆய்வக முடிவில் ஹீமோகுளோபின் அளவு 10.5g/dl இருந்ததால் எனக்கு மிதமான ரத்தசோகை உள்ளதாக செவிலியர்கள் சொன்னார்கள் மற்றும் ஊட்டச்சத்து இரும்புச்சத்து நிறைந்த உணவுகளை உட்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்கள்

நான்காவது மாதத்தில் அறம் பூண்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு பரிசோதனைக்காக சென்றபோது எனக்கு ஆய்வக பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது. அதில் எனக்கு தைராய்டு இருப்பதாக மருத்துவர்கள் சொன்னார்கள் அதற்கான மருந்து மாத்திரைகளை உட்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்கள். ஸ்கேன் பரிசோதனையும் செய்யப்பட்டது. எனது குழந்தை நன்றாக உள்ளது என்பதை அறிந்து மகிழ்ச்சி அடைந்தேன். மேலும் ஹீமோகுளோபின் அளவு 10.5 g/dl கிராமிலிருந்து 8.5g/dl குறைந்து இருந்ததால் எனக்கு இரும்புச்சத்து ஊசியை நாலு தவணைகளாக போடுமாறு மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் பரிந்துரை செய்தார்கள் அதன்படி நான் அவர்கள் சொன்ன தேதியில் வந்து இரும்புச்சத்து ஊசிகளை போட்டுக்கொண்டேன். மேலும், கால்சியம் மற்றும் இரும்புசத்து மாத்திரைகளையும் உட்கொள்ளுமாறு எனக்கு அறிவுறுத்தினார்கள்.

ஆறாவது மாதத்தில் கரியலூர் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு பரிசோதனைக்காக சென்றேன். ஸ்கேன் பரிசோதனை மற்றும்

ஆய்வக பரிசோதனைகள் செய்யப்பட்டது. இரும்புச்சத்து மாத்திரை மற்றும் கால்சியம் சத்து மாத்திரைகளை கொடுத்தார்கள்

ஏழாவது மாதத்தில் அறம்பூண்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு, பரிசோதனைக்காக சென்றபோது, எனது எடை மீண்டும் பார்க்கப்பட்டது. சற்று எடை (37.5 கிலோவில் இருந்து 42 கிலோ ஆக) கூடியதாக செவிலியர்கள் சொன்னார்கள். அதை நினைத்து மிகவும் சந்தோஷப்பட்டேன். ஆய்வக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, அனைத்து ரிப்போர்ட்டுகளும் சரியாக உள்ளது என்று சுகாதார செவிலியர் சொன்னார்கள். இரும்புச்சத்து மற்றும் மாத்திரைகளை தொடர்ந்து உட்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்கள்

எட்டாவது மாதத்தில் கரியலூர் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிக்கல் உள்ள கர்ப்பிணிகளை பரிசோதிக்கும் முகாமிற்கு சென்றேன். ஸ்கேன் பரிசோதனை மற்றும் ஆய்வக பரிசோதனைகளும் செய்தனர் தைராய்டு மாத்திரை கால்சியம் மாத்திரை இரும்புசத்து மாத்திரைகளை தொடர்ந்து உட்கொள்ளுமாறு மருத்துவர்கள் சொன்னார்கள்.

ஒன்பதாவது மாதத்தில் அறமூண்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு பரிசோதனைக்கு சென்றேன், அங்கு எனக்கு குழந்தையின் வளர்ச்சி நிலையை காண ஸ்கேன் பரிசோதனை செய்யப்பட்டது. குழந்தைக்கு எவ்வித சிக்கல்களும் இல்லை என்று மருத்துவர்கள் சொன்னார்கள் அதை நினைத்து அளவில்லா ஆனந்தம் அடைந்தேன்.

15.06.23 அன்று மதியம் 2 மணி அளவில் எனக்கு பிரசவவலி ஏற்பட்டது. நான் அருகிலுள்ள சிட்லிங் பழங்குடியினர் மருத்துவமனையில் இரவு 9:30 மணிக்கு அனுமதிக்கப்பட்டேன். பின்பு 16. 6. 23 அன்று அதிகாலை சுகபிரசவத்தில் காலை 3:20 மணிஅளவில் எனக்கு ஒரு அழகான பெண்குழந்தை பிறந்தது, அதை நினைத்து மட்டற்ற மகிழ்ச்சியுற்றேன். மூன்று நாட்கள் கண்காணிப்பில் வைத்துவிட்டு 19.6.23 அன்று தான் என்னை வீட்டிற்கு அனுப்பிவைத்தார்கள். மருத்துவர்கள் என்னை தொடர்ந்து மருந்து மாத்திரைகளை உட்கொள்ளுமாறு சொன்னார்கள். கிராம சுகாதார செவிலியர் என்னை கள்ளக்குறிச்சி மருத்துவமனைக்குதான் பிரசவத்திற்கு செல்ல வேண்டும், என்று சொன்னார்கள். ஆனால் எனது வீட்டில் இருந்து அதாவது சேத்தூர் கிராமத்தில் இருந்து சிட்லிங் மருத்துவமனை (18KM) அருகில் உள்ளதால், அங்கு சென்று பிரசவத்தை மேற்கொண்டேன். ஆனால் அது எவ்வளவு பெரிய தப்பு என்று பின்பு உணர்ந்தேன்.

வீட்டிற்கு சென்று இரண்டு நாட்கள் கழிந்து 20.06.2023 அன்று எனக்கு குளிருடன் கூடிய காய்ச்சல் மற்றும் முதுகுவலி ஏற்பட்டு மாலை 6:30 மணிஅளவில் சிட்லிங் மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டேன். அங்கு மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் என்னை பரிசோதித்து விட்டு தொடர் கண்காணிப்பில் இருக்குமாறு சொன்னார்கள் அதற்கான மருந்து மாத்திரைகளும் வழங்கப்பட்டது. நிறைய தண்ணீர் அருந்துமாறும் சொன்னார்கள்

21.6.23 அன்று காலை 9:30 மணிஅளவில் மீண்டும் எனக்கு குளிர்காய்ச்சல் நெஞ்செரிச்சல் ஐந்து முறை வயிற்றுப்போக்கு ஏற்பட்டது. ஒருவேளை நான்

இரண்டு நாட்கள் முன்னதாக வெளியில் உணவு வாங்கி சாப்பிட்டதால் வயிற்றுப்போக்கு ஏற்பட்டிருக்கலாம் என நான் நினைத்துக்கொண்டேன்.

என்னை பரிசோதித்த மருத்துவர்கள் எனக்கு வைரஸ் காய்ச்சல் மற்றும் அலர்ஜி இருக்கலாம் என சந்தேகித்து எந்த மாத்திரையையும் உட்கொள்ளவேண்டாம் என அறிவுறுத்தினார்கள்.

21. 6 .23 அன்று மதியம் 2:30 மணிக்கு மீண்டும் மேல்வயிறு வலி மற்றும் வயிற்றுப்போக்கு தொடர்ந்து ஏற்பட்டு கொண்டிருந்தது. எனக்கு குளுக்கோஸ் ஏற்றினார்கள். அதே நாளன்று மதியம் 2:45 மணிக்கு தாங்கமுடியாத வயிற்று வலி ஏற்பட்டதால் மருத்துவர்கள் என்னை பரிசோதித்தபோது வயிறு சிறிது உப்பிசமாக உள்ளது என்றும் குடல் ஒலி கேட்கவில்லை என்றும் கூறினார்கள்.

ஆனால், எனக்கு முன்னோக்கி உட்கார்ந்தால் மட்டும் வலி சிறிது குறைந்த மாதிரி இருந்தது. மீண்டும் வலி தொடர்ந்து இருந்து கொண்டே இருந்தது. எனக்கு கணையத்தில் பாதிப்பு இருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்டு என்னை சேலம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு மேற்பரிந்துரை செய்தனர். நான் 108 ஆம்புலன்ஸ் மூலம் இரவு ஆறுமுப்பது மணிக்கு சேலம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்றேன்.

எனக்கு அதிக காய்ச்சல், மூச்சுத்திணறல் மற்றும் இதயத் துடிப்பு அதிகரித்தது போன்ற பல பிரச்சனைகளும் இருந்ததால் எனக்கு ஆக்சிஜன் வைத்தார்கள். சிறுநீர் போகவில்லை, அதனால் சிறுநீர் டியூப்போட்டு சிறுநீரை வெளியேற்ற முயற்சி செய்தார்கள். அப்படி இருந்தும் சிறுநீர் வெளியேறவில்லை. ஆய்வக பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது. அதில் எனக்கு உப்புச்சத்து அதிகமாக இருப்பதாக மருத்துவர்கள் சொன்னார்கள் மற்றும் அனைத்து ஆய்வக முடிவுகளும் சரியாக இருந்தது.

மயக்கவியல் மருத்துவர், இருதய மருத்துவர் மற்றும் சிறுநீரக சிறப்பு மருத்துவர் அனைவரும் என்னை பரிசோதித்து அனைத்து பிரச்சனைகளுக்கும் மருந்துகளை அளித்தனர். ஆனால், எனக்கு மூச்சுதிணறலும், இதயப் படபடப்பும், சிறிது கூட குறையவில்லை. அதனால் 22.06.23 அன்று எட்டு மணிக்கு எனக்கு செயற்கை சுவாசம் செலுத்தினார்கள். ஒருமணி நேரத்திற்கு சிறுநீர் அளவு 5மி.லி தான் போயிருந்தது. இருப்பினும் சிறிது சிறிதாக என் நிலைமை மோசமாக சென்றுகொண்டிருந்தது, கடுமையான சிறுநீரக பாதிப்பு இருக்கலாம் என்று மருத்துவர்கள் என்னை பரிசோதித்து சிகிச்சையும் செய்தார்கள். கொஞ்சம் கொஞ்சமாக சுயநினைவு இழந்த நான் எனக்கு மாரடைப்பும் சேர்த்து வந்துவிட்டது, என்று மருத்துவர்கள் கூறினார்கள். மருத்துவர்கள் அனைத்து உயிர்காக்கும் சிகிச்சைகளை, அளித்தும் அனைத்து முயற்சிகளும் தோல்வி அடைந்தன. என் வாழ்வு இவ்வளவு சீக்கிரம் முடிவடையும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஆறு வருடம் கழித்து பிறந்த என் செல்ல மகளுடன் எப்படியெல்லாம் வாழவேண்டும் என்று ஆசைப்பட்டேன். எனது ஆசைகள் அனைத்தும் நிராசையாகிவிட்டன. 22.06.23 அன்று மதியம் 2 மணி அளவில் என் குழந்தையை விட்டு விட்டு குடும்பத்தினரை மீளாதுயரத்தில், ஆழ்த்தி இறைவனடி சேர்ந்தேன்.

இறைவா நான் என்ன பாவம் செய்தேன் என்னை இப்படி தண்டித்து விட்டாயே, எனினும் என் குழந்தை மற்றும் என் குடும்பத்தாரை நீ பாதுகாப்பாய்

என்ற நம்பிக்கையில் இம்மண்ணுலகை விட்டு நான் விண்ணுலகிற்கு விடைபெறுகிறேன்.

மருத்துவரின் அறிவுரையின்படி நான் கள்ளக்குறிச்சி மருத்துவமனைக்கு அன்றே சென்று இருந்தால் எனது உயிரை காப்பாற்றி இருக்கலாம். எவ்வளவோ மருத்துவத்தில் நிறைய புதிய முயற்சிகள் வந்து உயிர்காக்கும் சிகிச்சைகளும் நிறைய இருந்தும் அதை நான் பயன்படுத்திக்கொள்ளாமல், தவறவிட்டேன். நான் இழந்தது, என் உயிரை மட்டுமல்ல என் குழந்தையையும், குடும்பத்தினரையும் கூட. எப்படி எல்லாம் என் குழந்தை கஷ்டப்பட போகிறதோ அதை நினைத்தால் என் மனது மிகவும் வேதனைப்படுகிறது.

**தரமான முறையில் மக்களுக்கு வழங்கப்படும் சுகாதார சேவைகளை,** ஏற்போம், பங்களிப்போம், பயனடைவோம்.

## 17. பாதை மாறிய பயணம்

"இரண்டாவதும் பொட்ட புள்ளைய பெத்து எடுத்தினா... நேரா அப்படியே உங்கம்மா வீட்டுக்கு போய்டு... எங்களுக்கு ஆம்பிள பிள்ளைதான் வேணும். மனசுல வச்சுக்கோ. எனக்கு கொள்ளிவைக்க என் பையன் இருக்கான். அவனுக்கும் ஒரு ஆண் புள்ள வாரிசா வேணும் புரிஞ்சுதா! அதட்டலான மாமியாரின் குரல், நினைத்துப் பார்த்தலே எப்பவும் அப்படியே ஒலிக்கும் சுந்தரியின் காதுகளில்.

அதோடு வசனம் நின்றுவிடவில்லை. முதல்ல பொட்ட புள்ளையைத் தான் கொஞ்சம் கலர் கம்மியா பெத்துட்டே. பொறக்கப்போற பேரனையாவது நல்லா சிவப்பா பெத்து குடு" இது மாமியாரின் அடுத்த ஆணை.

அம்மா சொல்றத கொஞ்சம் புரிஞ்சிக்க. எங்க பரம்பரையிலேயே ஆம்பள புள்ள பொறக்காத குடும்பமே கிடையாது. என்னை நீ விதி விலக்கு ஆக்காதே, இது சுந்தரியின் கணவன் கிஷோரின் கெஞ்சல் வார்த்தைகள். அம்மாவுக்கு தப்பாம பிறந்த மகன்.

மாமனார் சுப்ரமணி மாறுபட்டவர். கல்லூரிப் பேராசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர். தனது இரண்டு மகள்களுக்கும், தான் வேலையில் இருக்கும் போதே திருமணத்தை முடித்துவிட்டார். ஓய்வு பெற்றவுடன் ஒரே மகன் கிஷோருக்கு திருமணத்தை முடித்து கடமையை நிறைவேற்றியவர். அவர் எப்போதும் மருமகள் பக்கம். ஆனால், அந்த குடும்ப ராஜ்யத்திற்கு அவர் அதிபதியில்லே, அவள் மனைவி தேவகிதான் அனைத்தும்.

சுந்தரியின் குடும்பமும் வசதியான குடும்பம் தான். தூரத்து சொந்தமான கிஷோரும், அவனது கை நிறைய சம்பாத்தியமும், குடும்ப அந்தஸ்தும், சுந்தரியை இந்த வீட்டு மருமகளாக்கி விட்டது. " இவள் எங்க வீட்டு மருமகளல்ல... எங்கள் மகள்" ... என்ற வாசகத்தோடு, வலதுகால் எடுத்து வைக்கச் சொல்லி, கூட்டிட்டு வந்து விட்டார்கள்.

திருமணமாகி ஒன்றரை வருடம் ஆனவுடனே, "என்ன இன்னும் நல்ல செய்தி சொல்லல" என்று சாடைமாடையாக பேச ஆரம்பித்தவள் தான் சுந்தரியின் மாமியார் தேவகி. சுந்தரியின் நல்ல நேரம், அவள் வாய் திறந்த மறு மாதமே கர்ப்பமாகி விட்டாள். குல வழக்கப்படி முதல் பிரசவம் தாய் வீட்டில் நல்லபடியாக பெண் குழந்தை பிறந்தது. மகாலட்சிமிய பெத்து குடுத்துட்ட என்றாள் மாமியார். இரண்டு வருடங்கள் கழித்து, இப்போது இரண்டாவது கர்ப்பம். ஆனால் இந்த பிரசவத்தில் மகாலட்சுமி வேண்டாம். மகாலட்சுமணன் தான் வேண்டுமாம். மாமியாரின் ஆணை. அதுவும், நல்ல சிகப்பான மகாலட்சுமணன்.

இரண்டாவது கர்ப்பத்தின் போது சுந்தரிக்கு 29 வயது. உடல் மட்டும் மாறிப்போயிடவில்லை. மனமும் மாறிப்போயிருக்கிறது. முதல் கர்ப்பத்தில் மகிழ்ச்சியே உச்சம். இரண்டாவது கர்ப்பத்தில் குழப்பமே மிச்சம். பூவா தலையா சுண்டி விடுவது போல, ஆணா பெண்ணா... பதற ஆரம்பித்தது மனம்.

அருகிலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பதிவு செய்து கொண்டாள். உயரம், எடை, சர்க்கரை, இரத்த அழுத்தம் என அனைத்தையும் அளவிட்டு பார்த்த பின் கிராம சுகாதார செவிலியர் எல்லாம் நல்லாத்தான் இருக்கு. ஆனா மாசம் ஏற ஏற எல்லாமுமே மாறலாம். சரியா சாப்பிடலைனா உடம்புல இரத்தம் குறைந்து போய் பெரிய பிரச்சனை வந்துவிடும் கவனமாக இரு என்று கூறியவர் சத்தான உணவு என்னவெல்லாம் சாப்பிட வேண்டும், அடுத்தடுத்து எப்போது மீண்டும் பரிசோதனைக்கு வரவேண்டும் என்பதை விளக்கமாக எடுத்துரைத்தாள். மேலும், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவி திட்டத்தின் கீழ் 14 ஆயிரம் ரூபாய் பல தவணைகளாக எப்படி கிடைக்கும் என்பதை விளக்கியதோடு, இரண்டுமுறை ஊட்டச்சத்து பெட்டகத்தையும் அதற்கான தவனைகளில் சுந்தரியிடம் கொடுத்துவிட்டனர்.

சுந்தரி இரும்பு சத்து டானிக்கையும், ஊட்டச்சத்து பெட்டகத்திலுள்ள பேரீட்சம் பழத்தையும் ஓரிரு நாள்தான் சாப்பிட்டாள். குழந்தை சிகப்பாக பிறக்கனும்னு மாமியார் சொன்னது நினைவுக்கு வர, இரண்டையும் சாப்பிடுவதை நிறுத்தினாள். இதற்கு விதை போட்டவள், பக்கத்து வீட்டு தோழி சொப்னா, கருப்பாக இருக்கிற பழங்களையோ மாத்திரை மருந்தையோ, சாப்பிட்டால் குழந்தை கருப்பாக பிறக்கும் என விதைத்தாள். ஊட்டச்சத்து பெட்டகத்திலுள்ள புரோட்டின் பவுடர், தனது 4 வயது மகளுக்கு பிடித்து போக, அவளுக்கு அதை தாரை வார்த்தாள்.

சுந்தரி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு பரிசோதனைக்கு போகும்பொழுதெல்லாம், எல்லாவற்றையும் சாப்பிடுகிறேன், என்று ஏமாற்றுவாள். மாதங்கள் நகர்ந்தன. கால்கள் வீங்க தொடங்கின. நடந்தால் மூச்சு வாங்கியது.

அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர் மூலம் சுந்தரியை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தாள். அங்கு அவளுக்கு ஊசி மருந்து ஏற்றினர். இருந்தாலும், தனது உணவு பழக்கத்தை மாற்றவே இல்லை. சுந்தரி கருப்பு திராட்சையை கூட தள்ளி விடுவாள், குழந்தை சிகப்பாக பிறக்கவேண்டுமே.

பிரசவ காலமும் நெருங்கியது. பல்வேறு உபாதைகளுடன் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டாள். குழந்தை எடை கூடவில்லை. பனிக்குடத்தில், நீர்ச்சத்து குறைவு, கடுமையான இரத்தச்சோகை, இருதய பலவீனம் என பல பிரச்சினைகளை முன் வைத்தார்கள் மருத்துவர்கள். அவர்கள், முழு முயற்சியுடன் சிகிச்சை அளித்தனர். சுந்தரியும் அவர் கணவர் குடும்பமும் பிரார்த்தனை மேற்கொண்டு பதட்டமாக இருந்தனர். ஒவ்வொரு நிமிடமும் பதரச்செய்தது. ஆபரேசன் செய்துதான் குழந்தை பிறக்கவைக்க முடியும் என்றார் மருத்துவர். நல்லபடியாக குழந்தை பிறந்தா போதும் டாக்டர், உங்க முடிவுதான். அம்மாவும் குழந்தையும் நல்லபடியாக உயிருடன் வேண்டும் என்றனர் குடும்பத்தினர்.

அறுவை சிகிச்சை வெற்றிகரமாக முடிந்தது. ஆண் குழந்தை பிறந்தது. ஆனால், எடை 2 கிலோ தான் இருந்தது. பச்சிளம் குழந்தைக்கான சிறப்பு பராமரிப்பு பகுதியில் குழந்தை அனுமதிக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டது. சுந்தரிக்கு பல்வேறு உடல் உபாதைகள் தொடர்ந்து கொண்டுதான் இருந்தது. அத்தனை

கஷ்டங்களுக்கிடையேயும், "ஆண் குழந்தையை" பெற்றுவிட்டேன் என்பதைப்போல பார்வையாளலேயே தகவல் பரிமாறிக்கொண்டிருந்தாள், மூச்சிரைப்பும் வலிப்பும் கூட அவ்வப்போது வரத்தொடங்கியது. போர்கால அடிப்படையில் மருத்துவப்படையும் சிகிச்சை அளித்தனர். ஆனாலும், சிகிச்சை பலனின்றி அன்று மாலையே இவ்வுலகைவிட்டு விடைபெற்றுவிட்டாள்.

நிலைக்குத்தி திறந்திருந்த அவளது விழிகள்" அவளது மாமியாரையும் மற்றவர்களையும் பார்த்து இதற்குத்தான் ஆசைப்பட்டீர்களா? என்று கேட்டுக்கொண்டிருந்தது. "அக்கா! நீ எனக்கு சொன்ன மருத்துவ அறிவுரைகள் எதையும் நான் கேட்கவில்லை. என் மூடத்தனமான நம்பிக்கைகளை கொண்டு நானே என்னைக் கொன்று விட்டேன். இத்தனைக்கும் நான் 12 –வது படித்தவள். படித்த முட்டாளாக இருந்துவிட்டேனே! என்று கண்ணீர் சிந்தாமல் கதறின அந்த விழிகள். தனது 4 வயது மகளிடம் மகளே! நான் எனக்கும் என் வயிற்றில் வளரும் குழந்தைக்கும் என வாழாமல் இந்த சமூகத்தின் அத்தனை முட்டாள்தனமாக கருத்துக்களுக்கும் பயந்து செயல்பட்டுவிட்டேன்.

செவிலியர்களும், மருத்துவர்களும் சரியாகத்தான் எனக்கு வழி காட்டினர்.. நான்தான் பாதை மாறி பயணம் செய்துவிட்டேன். என்னைப் பிடித்திருந்த உன் கைகளை விட்டுவிட்டு பாதியிலேயே பயணிக்கிறேன். திசையற்ற பாதையில் உன்னை அனாதை ஆக்கி செல்லும் என்னை மன்னிப்பாயா? என்று மன்றாடி கொண்டிருந்தன. அந்த நிலைக்குத்திய விழிகள்.

**18. உதிரமே– உயிரே!!**

நானோ ஜெயராணி. என்னுடைய கணவர் பெயர் மகேஸ்வரன் எனக்கு வயது 34 ஆகுது.

எனக்கு 19 வயதில் ஒரு கல்யாணம் ஆச்சு. இப்போ எனக்கு 14 வயதில் ஒரு பெண்குழந்தை இருக்குது. இந்த குழந்தை சுகப்பிரசவம் மூலம் பிறந்தது. மறுபடியும் 30 வயசுல இரண்டாவது கல்யாணம் செஞ்சாங்க.

எனக்கு இது இரண்டாவது கர்ப்பம். என் கிராமத்தில் உள்ள நர்ஸ் அக்காவிடம் கூறி கர்ப்பத்தை உறுதி செய்து, பிக்மி இணையதளத்தில் பதிவு செய்துகொண்டேன். தொடர்ந்து, கர்ப்பகால பரிசோதனை எல்லாவற்றையும் செய்துகொண்டேன். இதுவரை மொத்தமாக 22 முறை கர்ப்பகால பரிசோதனை செய்துள்ளேன். சாணர்பாளையம் துணை சுகாதார நிலையத்தில் 3 முறையும், திருச்செங்கோடு தரம் உயர்த்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் 2 முறையும் திருச்செங்கோடு அரசு மருத்துவ மனையில் 2 முறையும், SPM தனியார் மருத்துவமனையில் 13 முறையும் பரிசோதனை மற்றும் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். 04.12.23 அன்று இரவு சுமார் 11:30 மணியளவில் எனக்கு பிரசவவலி வந்ததால் SPM தனியார் மருத்துவமனையில் சேர்ந்தேன்.

அங்கு எனக்கு இரத்த அழுத்தம், நாடித்துடிப்பு, கர்ப்பப்பை சுருக்கம் மற்றும் கருவில் உள்ள குழந்தையின் இதயத்துடிப்பு ஆகியவற்றை 2 மணி நேரத்திற்கு ஒருமுறையும் பிறகு 1 மணி நேரத்திற்கு ஒருமுறையும் இரவு 10 நிமிடத்திற்கு ஒருமுறையும் பரிசோதனை செஞ்சாங்க.

05.12.23 அன்று 12:15 AM க்கு என்னை அவசரகால அறுவை சிகிச்சை பிரிவில் சேர்த்தார்கள். அன்று இரவு சுமார் 9 மணி அளவில் எனக்கு அதிகமான நாடி துடிப்பும் குழந்தைக்கு குறைவான இதயதுடிப்பும் இருந்ததால் சுமார் 9.15 மணியளவில் அறுவை சிகிச்சை மூலம் பெண் குழந்தையை வெளியே எடுத்தார்கள் குழந்தையின் எடை 2.600 கி.கி. குழந்தை பிறந்தவுடன் அழவில்லை. குழந்தை அழுவதற்காக ஏதேதோ செஞ்சாங்க. ஆனாலும், குழந்தை அழவில்லை. அப்புறம் மருத்துவர் குழந்தை இறந்தே பிறந்தது என்று சொல்லிட்டாங்க.

குழந்தை இறந்து பிறந்த அதே நேரத்தில் எனக்கும் அதிகமான உதிரப்போக்கு ஏற்பட ஆரம்பித்தது. சாதாரணமாக 500ml இரத்தம் தான் வெளியேறுமாம். ஆனால், எனக்கு அதிகமாகவே உதிரப்போக்கு இருந்தது. இதனை கவனித்த மருத்துவர் உடனே உதவிக்கு இன்னும் இரண்டு மருத்துவர்களை கூப்பிட்டாங்க. உதிரப்போக்கு குறைய ஏதேதோ செஞ்சாங்க. ஆனாலும் நிக்கல. அந்தசமயத்தில் எனக்கு இரத்த அழுத்தம் குறைந்து கொண்டே போனது மருத்துவர்கள் கலந்தாலோசித்து கர்ப்பப்பையை எடுத்துடனும்னு சொன்னாங்க அப்புறம் 10.45 PM மணியளவில் கர்ப்பப்பையை வெளியே எடுத்துட்டாங்க.

தொடர்ந்து இரத்தம் ஏத்திகிட்டே இருந்தாங்க. சுமார் 1:30 மணிஅளவில் இரத்தப்போக்கு நின்னுடுச்சு.

இதெல்லாம் நடந்துட்டு இருக்கும்போது தொடர்ந்து என்னுடைய நிலை மோசமாக இருந்ததால் உயிரைக் காக்கும் பொருட்டு மேல் சிகிச்சைக்காக ஈரோடு அவசரகால சேவை மருத்துவமனைக்கு சுமார் 2 மணி அளவில் பரிந்துரை செய்தார்கள்.

ஈரோடு அவசர சிகிச்சை மருத்துவமனையில் விடியற்காலை 2.50 மணிக்கு தீவிர சிகிச்சை பிரிவில் சேர்த்தாங்க. அப்ப எனக்கு பரிசோதனை பண்ணும்போது நாடிதுடிப்பு சரியாக இல்லை. இரத்த அழுத்தத்தை பதிவுசெய்ய இயலவில்லை. சரியாக காலை 3:25 மணிக்கு எல்லாம் எனக்கு சுயநினைவே இல்லை.

நாடித்துடிப்பு மிகவும் குறைவாகவே உள்ளது என்று பேசிக்கிட்டாங்க. என்னுடைய கழுத்துல கையை வைத்து பார்த்தாங்க. கழுத்திலும் நாடித்துடிப்பு உணரமுடியவில்லை. உடனே உயிர்காக்கும் சிகிச்சைக்காக அவசரகால மருந்துகளை எல்லாம் போட்டாங்க. அப்பொழுதும் இதயதுடிப்பு குறைந்துகொண்டே போனதால் என்னுடைய மார்பு பகுதியில் கையை வைத்து அழுத்தினாங்க. ஆனாலும் எந்த பலனும் இல்லை. காலை 3.45 மணிக்கு இறந்துவிட்டேன்.

நான் இறந்ததற்கு காரணம் கர்ப்பப்பை கிழிவு மற்றும் அதனால் ஏற்பட்ட அதிர்ச்சி மற்றும் அதிக உதிரப்போக்கு.

## 19. அறிந்தும் அறியாததும்!

29 வயது நிரம்பிய எனது பெயர் திருமதி.கஸ்தூரி. நான் திரு.அசோக் என்பவரை திருமணம் முடித்து திண்டுக்கல் மாவட்டத்தில், மலைப்பட்டி பகுதியில் சாய்பாபா காலனியில் வசித்து வந்தேன்.

திண்டுக்கல் மாவட்டத்தில் தாடிக்கொம்பு வட்டாரத்தில், தொட்டநூத்து அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்குட்பட்ட பாலகிருஷ்ணாபுரம் துணைசுகாதார நிலையத்தில் எனது மூன்றாவது கர்ப்பத்தை உறுதி செய்து கிராம சுகாதார செவிலியர் மூலம் எனது கர்ப்பம் பதிவு செய்யப்பட்டது.

எனது கடைசி மாதவிடாய் ஆன தேதி 08.11.2022 என்பதால் எதிர்பார்க்கப்படும் பிரசவ தேதி 15.08.2023 என கணக்கிடப்பட்டு தெரிவித்தனர். என் முதல் கர்ப்பத்தில் குழந்தைக்கு இதயதுடிப்பு இல்லாத காரணத்தால் தனியார் மருத்துவமனையில் கருக்கலைப்பு செய்யப்பட்டது. இரண்டாவது கர்ப்பம் முத்துப்பிள்ளை கர்ப்பம் என்பதால் மருத்துவ ரீதியில் தனியார் மருத்துவமனையில் கருக்கலைப்பு செய்யப்பட்டது. ஆகவே மோசமான முந்தைய மகப்பேறு வரலாறு மற்றும் தைராய்டு சுரப்பு குறைபாடு போன்ற காரணத்தால் என்னை சிக்கல் உள்ள கர்ப்பிணிகளின் பட்டியலில் வைத்திருந்தார்கள்.

நான் மொத்தமாக 21 முறை மருத்துவமனைகளுக்கு சென்று பரிசோதனைகள் செய்து வந்துள்ளேன். எனக்கு 23.01.2023 அன்று மலைப்பட்டி சமுதாய சுகாதார நிலையத்தில் UPT கார்டு மூலம் கர்ப்பம் உறுதி செய்யப்பட்டு எனக்கு போலிக் அமில மாத்திரைகள் ஒருநாளைக்கு ஒரு வேளைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென அறிவுரை வழங்கப்பட்டது.

எனது மூன்றாவது மாதம் முடிவில் 31.01.2023 அன்று தொட்டனூத்தூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்று எனக்கு கர்ப்பகால ஆய்வக பரிசோதனைகள் செய்யப்பட்டது. அங்கு நான் தைராய்டு குறைபாட்டிற்காக ஏற்கனவே Eltroxin மாத்திரை 50 மைக்கிரோகிராம் அளவு ஒருவேளைக்கு எடுத்துக் கொண்டு வந்ததாலும், 13 ஆம் வாரத்தில் எடுக்கப்பட்ட NT ஸ்கேனில் மூளையில் கோராய்டு பிளக்ஸ்ஸிஸ் 2.2 மி.மீ அளவு கட்டி இருந்ததாலும் என்னை திண்டுக்கல் அரசு மருத்துவ மருத்துவமனைக்கு, மகப்பேறு மருத்துவரின் அறிவுரைக்காக மேற்பரிந்துரை செய்யப்பட்டேன்.

எனது 15 வது வார கர்ப்பத்தின் போது மலைப்பட்டி சமுதாய மையத்தில் எனக்கு பரிசோதனைகள் செய்யப்பட்டு முதல் தவணை டிடி தடுப்பூசி வழங்கப்பட்டது. அனைத்து அளவிடுகளும் சரியான நிலையில் இருப்பதாக கூறினர். தைராய்டு குறைப்பாட்டிற்கு Eltroxin மாத்திரையும் மற்றபடி இரும்புச்சத்து ஃபோலிக் அமில மாத்திரை, கால்சியம் மாத்திரை, பிகாம்ளக்ஸ் மாத்திரை எடுத்துக் கொள்ள அறிவுறுத்தப்பட்டது. என்னுடைய ஸ்கேன் முடிவினை எடுத்துக்கொண்டு திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் பரிசோதிக்குமாறு கூறினர்.

மலைப்பட்டி சமுதாய சுகாதார நிலையத்தில், எனது 23 வார கர்ப்பகாலத்தில் எட்டாம் பார்வையின் போது எடை, இரத்த அழுத்த பரிசோதனை, வயிறு பரிசோதனை செய்யப்பட்டு மேற்கூறிய மாத்திரைகளையே தொடருமாறு கூறினர்.

எனது 28 வது வார கர்ப்பகாலத்தில் தொட்டனூத்தூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் எடை, இரத்த அழுத்தம், வயிறு பரிசோதனை, ஸ்கேன் பரிசோதனை, ஹீமோகுளோபின் ஆகியவை பரிசோதிக்கப்பட்டது. அன்று செய்யப்பட்ட பரிசோதனையின் போது எனது ஹீமோகுளோபின் 9.9 கிராம் ஆக இருந்ததால் இரத்தசோகை கண்டறியப்பட்டு 4 தவணை இன்ஜெக்ஷன் அயன்சுக்ரோஸ் ஒருநாள் விட்டு ஒரு நாளாக வழங்கப்பட்டது.

சிக்கல் உள்ள கர்ப்பிணி என்பதாலும் மேலும் இசிஜி, எக்கோ பரிசோதனை செய்வதற்காக திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு செல்லுமாறு மேற்பரிந்துரை செய்யப்பட்டது. மேலும் நான் எனது அம்மாவீட்டிற்கு சென்ற காரணத்தினால் கொசவம்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை சார்ந்த கூவனூத்துகுரும்பப்பட்டி துணை சுகாதார நிலையத்திற்கு அங்குள்ள கிராம சுகாதார செவிலியர் தொடர் கவனிப்பு வழங்க என்னை குறித்த தகவல் பரிமாற்றம் செய்யப்பட்டது.

எனது 37 வது வார கர்ப்பகாலத்தில் 25.07.2023 அன்று கொசவப்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் எனது எடை, இரத்த அழுத்தம், குழந்தையின் இதயத் துடிப்பு, ஸ்கேன் ஆகியவை பரிசோதிக்கப்பட்டது. மேலும் முன்னர் கூறிய மாத்திரைகளையே எடுத்துக் கொள்ளுமாறு கூறினர். இங்கும் என்னை இசிஜி, எக்கோ பரிசோதனைகளை திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் பரிசோதனை செய்யுமாறு அறிவுறுத்தினர்.

எப்படியோ முதலாவதாக கூறப்பட்ட நாளிலிருந்து 1 மாதம் 7 நாட்கள் கழித்து பின்னர் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் எக்கோ பரிசோதனை செய்யப்பட்ட போது மூவிதல் வால்வில் மிதமான ரத்த பின்னேற்றம் இருப்பதாகவும், இதயத்திலிருந்து வெளியேறும் இரத்தத்தின் அளவு 66 % மட்டுமே இருக்கின்றது என்றும் கண்டறியப்பட்டது.

எனக்கு அடி வயிற்றில் வலி ஏற்பட்டதால் 08.08.2023 அன்று இரவு கொசவபட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு காண்பிக்க சென்றிருந்தேன். மேலும் பிரசவ முன்னேற்றத்தை கண்காணிப்பதற்காக அங்கு உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டேன். அங்கு 09.09.2023 அன்று காலை 11 மணிக்கு கர்ப்பவாய் 2 சென்டிமீட்டர் அளவு திறந்து இருப்பதாகவும் (இதில் கர்ப்பவாய் பல பிள்ளை பெற்றவருக்கு இருப்பது போலவும்) கர்ப்பவாய் 10% மிருது தன்மையுடன் இருப்பதாகவும் மேலும் இரத்தமும் சளியும் கலந்த கசிவு இருப்பதாகவும் கூறினர். 1 மணிக்கு வயிறு பரிசோதனை, குழந்தையின் இதயத் துடிப்பு, யோனி பரிசோதனை செய்தபோதும் முன்னர் இருந்தது போலவே இருப்பதாக கூறினர்.

எதிர்பார்க்கப்படும் பிரசவ தேதியான 15.08.2023 அன்று மதியம் 2.10 மணி அளவில் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன். எனக்கு பிரசவத்தை தூண்டுதல் தோல்வி அடைந்த காரணத்தினால் 18.08.2023 அன்று

அவசரமாக சிசேரியன் அறுவை சிகிச்சை செய்து எனக்கு பிரசவம் பார்க்கப்பட்டது எனக்கு காலை 11.17 அளவில் பிறப்பு எடை 3.580 Kgயில் அழகிய பெண் குழந்தை பிறந்தது.

அன்றே எனக்கு தீடீரென சீரற்ற கருப்பை சுருக்கத்தினால் பிரசவ பிற்கால உதிரப்போக்கு ஏற்பட்டதால் தீவிர சிகிச்சை பிரிவில் மதியம் 12.45 மணி அளவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கினர். அதன் பின் மதியம் 1.20 மணியளவில் யோனி பரிசோதனை செய்யப்பட்ட போதும் இரத்தக்கசிவு இருந்ததால் உதிரப் போக்கை கட்டுப்படுத்துவதற்காக உடனே NASG Bag யை பொருத்தினர்.

மதியம் 3.30 க்கு எனக்கு அதிகமாக வியர்த்தது. மார்பிற்கான சி.டிஸ்கேன் பரிசோதனையின் போது அதில் இதய வீக்கமும், வலது மூச்சுக்குழல் சுருங்கியும் இடது மூச்சுக்கிளைக்குழல் அமுங்கியும் நுரையீரலில் நீர் கோர்த்தும், அலர்சியுடனும் காணப்பட்டதாம். வயிறு மற்றும் கூபகத்திற்கான சி.டி ஸ்கேன் பரிசோதனையின் போது கர்ப்பப்பை வீங்கியும் கூபகத்தை சுற்றி நீர் கோர்த்தும், வயிற்றை சுற்றி நீர்க் கோர்த்தும் காணப்பட்டதாக கண்டறிந்தனர். திண்டுக்கல் அரசு மருத்துவமனை முதன்மை மருத்துவரின் ஆலோசனையை பெற்றபோது அவர் எனக்கு ஹீமோலைடிக் யூரிமிக் சிண்ட்ரோம் என்றும் அதற்கு பிளாஸ்மாஃப்ரசிஸ் என்ற சிகிச்சை அளிக்கப்பட வேண்டும் என்றும் கூறி என்னை 23.08.2023 அன்று மதியம் 12:00 மணி அளவில் மதுரை மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தனர்.

23.08.2023 அன்றே குழந்தை பிறந்து ஐந்து நாட்கள் கழித்து என்னை மதுரை அரசு மருத்துவமனையில் மதியம் 2:20 மணி அளவில் அனுமதித்தனர். அப்பொழுது நோயின் விபரம் பிரசவ பிற்கால உதிரப்போக்கினால் ஏற்பட்ட அதிர்ச்சி/ தீவிர சிறுநீரகபாதிப்பு / கல்லீரல் பாதிப்புகள் இருந்தது. அனுமதிக்கப்பட்ட பின் அங்கும் எனக்கு செயற்கை சுவாசம் வழங்கப்பட்டது. சிசேரியன் செய்யப்பட்டபின், யோனியில் ரத்தக்கசிவு ஆகியவை நல்ல நிலையில் காணப்பட்டது. வெளியேறிய சிறுநீரின் அளவு 200மி.லி ஆக இருந்தது.

23.08.2023 அன்று மாலை 4.30 மணி அளவில் எனக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டது. உடனடியாக எனக்கு மேம்படுத்தப்பட்ட உயிர்ப்பிப்பு முறைப்படி அனைத்து முயற்சிகளுடன் கூடிய மீட்பிற்கான செயல்பாடுகள் அனைத்தும் மருத்துவர்களாலும் செவிலியர்களாலும் வழங்கப்பட்டது. ஆனால் பயனின்றி அன்றே மாலை 4.55 மணி அளவில் எனது உயிர் என் உடலை விட்டுப் என் குழந்தையை பார்க்க முடியாத சோகத்துடன் பிரிந்தது.

"நான் ஒரு செவிலியராக இருந்த போதும் எனக்கு இருமுறை கருக்கலைப்பு நடந்ததை கருத்தில் கொண்டு முன்னரே முறையாக அனைத்து பரிசோதனையும் செய்து, மருத்துவ ஆலோசனைகளையும் பெற்ற பின்னர் தற்போதைய கர்ப்பத்தை தொடர்ந்திருந்தால் நான் எனக்கு கிடைத்த பொக்கிஷமான எனது குழந்தையை தனியே விட்டு சென்றிருக்க மாட்டேன்".

## 20. சிறு அலட்சியம் பேரிழப்பு

எனது பெயர் திருமதி. ஷாலினி 28 வயது, நான் திரு. சிவனேஸ்வரன் என்பவரை திருமணம் முடித்து வேலூர் மாவட்டத்தில் உள்ள லட்சுமிபுரம் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு உட்பட்ட பூந்தோட்டம் துணை சுகாதார நிலையத்தில் எனது முதல் கர்ப்பத்தை உறுதி செய்து கிராம சுகாதார செவிலியர் மூலம் பதிவு செய்யப்பட்டது. எனது கடைசி மாதவிடாய் நாள் 18.04.2023 என்பதால், எதிர்பார்க்கப்படும் பிரசவ தேதி 25.01.2024 என்று கணக்கிடப்பட்டு தெரிவித்தனர்.

நான் மொத்தமாக 14 முறை பார்வையிடபட்டுள்ளேன். அதாவது பூந்தோட்டம் துணை சுகாதார நிலையத்தில் 5 முறையும், லட்சுமிபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் 2 முறையும், தனியார் கிறிஸ்தவ மிஷன் மருத்துவமனை வேலூரில் 7 முறையும் பார்வையிடப்பட்டு அங்கு எனக்கு பரிசோதனை செய்யப்பட்டு அவர்கள் கூறிய சிகிச்சைகளை மேற்கொண்டேன்.

நான் 26.06.2023 அன்று பூந்தோட்டம் துணை சுகாதார நிலையத்தில் ஆய்வக பரிசோதனை செய்த போது UPT கார்டு மற்றும் ஸ்கேன் பரிசோதனை செய்து எனது கர்ப்பம் உறுதி செய்யப்பட்டது. அதன் பின்னர் எனக்கு இரும்பு சத்து மற்றும் போலிக் அமில மாத்திரைகள் ஒரு நாளைக்கு ஒரு வேளை சாப்பிடுமாறு அறிவுறுத்தப்பட்டது..

மூன்றாவது மாதம் அன்று லட்சுமிபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு பரிசோதனைக்கு செல்லும்போது மீண்டும் இரும்பு சத்து மற்றும் போலிக் அமில மாத்திரை 60-ம், கால்சியம் மாத்திரை 60-ம் வழங்கினார்கள். மூன்றாவது மாதம் ஸ்கேன் பரிசோதனை செய்து எல்லாம் சாதாரணமாக உள்ளது என கூறினர்.

நான்காவது மாதம் தனியார் கிறிஸ்தவ மிஷன் மருத்துவமனை வேலூரில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு அனைத்தும் சாதாரணமாக உள்ளது என கூறினார்கள்.

நான்காவது மாதம் முடிவில் லட்சுமிபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு குடற்புழு நீக்க மாத்திரை ஒன்றும், இரும்புச்சத்து மற்றும் போலிக் அமில மாத்திரை, கால்சியம் சத்து மாத்திரைகள் வழங்கினார்கள்.

ஐந்தாவது மற்றும் ஆறாவது மாதம் பரிசோதனையில் எந்த வித சிக்கலும் இன்றி என் குழந்தை வளர்வதை அறிந்து நிம்மதி அடைந்தேன். குழந்தையின் அசைவுகளை உணர்ந்து உற்றாகமடைந்தேன்.

ஏழாவது மாதம் தனியார் கிறிஸ்தவ மிஷன் மருத்துவமனை வேலூரில் ஆய்வக பரிசோதனைகளும், ஸ்கேன் பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டது. அதில் குழந்தையின் வளர்ச்சி நன்றாக உள்ளதை அறிந்து கொண்டேன். ஆனால் ரத்த பரிசோதனையில் குளுக்கோஸின் அளவு - 118, இரத்த அழுத்தம் 120/70 mmHg உள்ளதாக தெரிவித்தார்கள்.

13.11.2023 அன்று பூந்தோட்டம் துணை சுகாதார நிலையத்தில் கர்ப்ப கால பரிசோதனைகளை மேற்கொண்டேன். எல்லாம் சாதாரணமாக உள்ளது என கூறினர்.

20.12.2023 அன்று வரை தனியார் கிறிஸ்தவ மிஷன் மருத்துவமனை வேலூரில் வழக்கமான கர்ப்பகால பரிசோதனைகளை மேற்கொண்டேன். அனைத்தும் சாதாரணமாக உள்ளது என கூறினர்.

28.12.2023 அன்று எனக்கு வளைகாப்பு நிகழ்ச்சி நடந்தது. அன்று மாலை 5 மணிக்கு எனக்கு முதுகு வலி வந்தது. என்னை எனது குடும்பத்தினர் வேலப்பாடியில் உள்ள சுப்ரியா கிளினிக் அழைத்து சென்றனர். அங்கே எனக்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது. இரத்த அழுத்தம் மற்றும் குழவியின் இதயத்துடிப்பு அனைத்தும் சாதாரணமாக உள்ளது என கூறினார்கள். பரிசோதனையின் முடிவில் பாரசிட்டாமால் 500 mg மாத்திரை எனக்கு வழங்கப்பட்டது.

29.12.2023 அன்று நள்ளிரவில் ஒரு மணிக்கு எனக்கு தலைவலி மற்றும் வாந்தி ஒரு முறை வந்தது. பின்னர் நான் காபி அருந்திய போது நான் நன்றாக இருப்பதாக உணர்ந்தேன். பின்னர் வீட்டில் படுத்து கொண்டேன். மீண்டும் அதிகாலை 5.30 மணி அளவில் எனக்கு வீட்டில் வைத்து வலிப்பு நோய் ஏற்பட்டது . உடனடியாக என்னை அருகில் உள்ள சதுவசேரியில் உள்ள சிவகுமார் மருத்துவமனைக்கு எனது குடும்பத்தினர்கள் அழைத்துச் சென்றனர். எனக்கு வாயிலிருந்து உமிழ் நீர் வடிதல் மற்றும் எனது கண்கள் மேல்நோக்கி உயர்ந்து இருந்தது.

நான் 29.12.2023 அன்று அதிகாலை 6.36 மணியளவில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன். அப்பொழுது எனக்கு இரத்த அழுத்தம் 220/110 mm Hg, எனது நாடித்துடிப்பு ஒரு நிமிடத்திற்கு 120– ம், இரத்தத்தில் ஆக்சிஜன் அளவு Spo2 – 76% இருந்தது. நான் சுயநினைவுடன் தான் இருந்தேன். ஆனால் மூச்சு திணறலுடனும் கை கால்கள் மரத்துப்போன நிலையிலும் காணப்பட்டேன்.
பரிசோதையின் போது குழவியின் இதயத்துடிப்பை உணர முடியவில்லை என்று கூறினார்கள். எனக்கு வலிப்பு நோய்க்கான மருந்தும் இரத்த அழுத்தத்தை குறைப்பதற்கான மருந்தும் சிரை வழியாக உடனடியாக செலுத்தப்பட்டு சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டது. ஆக்சிஜன் ஒருநிமிடத்திற்கு 4 லிட்டர் என முக மாஸ்க் வழியாக செலுத்தப்பட்டது. காலை 7 மணி அளவில் எனக்கு மறு மதிப்பீடு செய்யப்பட்ட போது உணர்திறன் குறைவாக உள்ளது எனவும், வலிப்புக்கான மருந்து கொடுத்த பின்னர் எனக்கு வலிப்பு வரவில்லை எனவும் கண்டறியப்பட்டது. அதன் பின்னர் இரத்த அழுத்தம் 180/100 mm Hg , ஆக்சிஜன் ஒருநிமிடத்திற்கு 6 லிட்டர் வழங்கப்பட்டு இரத்தத்தில் ஆக்சிஜன் அளவு Spo2 – 90 முதல் 94 % வரை பராமரிக்கப்பட்டது.

காலை 7.15 மணி அளவில் எனக்கு மறுமதிப்பீடு செய்த போது உணர்திறன் இல்லை, செயற்கை சுவாசம் அளிக்க அறிவுறுத்தப்பட்டது. ஆனால் எனது உறவினர்களுக்கு இங்கு சிகிச்சை மேற்கொள்ள மனமில்லை. ஆதலால் சொந்த விருப்பத்தின் பேரில் என்னை தனியார் கிறிஸ்தவ மிஷன் மருத்துவமனை வேலூருக்கு என்னை எடுத்து சென்றனர்.

29.12.2023 அன்று காலை 7.30 மணி அளவில் தனியார் கிறிஸ்தவ மிஷன் மருத்துவமனை வேலூரில் அனுமதிக்கப்படும் போது என்னிடமிருந்து எந்த பிரதிபலித்தலும் இல்லை மற்றும் இரத்த அழுத்தமோ மற்றும் நாடித்துடிப்போ அவர்களால் பதிவு செய்ய முடியவில்லை. எனக்கு செயற்கை சுவாசம் மற்றும்

உயிர்ப்பித்தல் ஒரு முறை கொடுத்து என்னை காப்பாற்ற போராடினார்கள் எனக்கு கர்ப்ப கால வலிப்பு நோய் இருந்ததால் கருப்பையிலே கரு இறந்ததை ஸ்கேன் பரிசோதனை மூலம் உறுதி செய்யப்பட்டு, உடனடியாக அறுவை சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டேன். அங்கு நான் சுயநினைவின்றி இருந்தேன்.

காலை 9.45 மணி அளவில் எனக்கு அறுவை சிகிச்சை முடிந்து தீவிர அறுவை சிகிச்சை பிரிவுக்கு மாற்றப்பட்டேன்.

எனது இரத்த அழுத்தம் 2 மருந்துகளின் உதவியோடு 78/56 mmHg ஆக பராமரிக்கப்பட்ட்து. மூளைக்கான CT ஸ்கேன் பரிசோதனையும் எடுக்கப்பட்டது. மூளையில் மூளையில் ரத்த கசிவு இருப்பதாகவும் உடனடியாக மூளை அறுவை சிகிச்சை நிபுணர் வரவழைக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டனர்.

ஆய்வக பரிசோதனையில் எனது ரத்தம் உறையும் தன்மை கண்டுபிடிக்கப்பட்டு, பின்பு பரிசோதனையின் மூலம் எனது மூளைச் சாவு உறுதி செய்யப்பட்டது.

30.12.2023 அன்று மூளை வேலை செய்யவில்லை என்பதை EEG பரிசோதனை மூலம் உறுதி செய்தனர். மருத்துவ உபகரணங்கள் இல்லாமல் உயிர் வாழ்வது சாத்தியம் இல்லை என்பதை எனது குடும்பத்தாரிடம் தெரிவிக்கப்பட்டது. என்னை மீட்க எடுக்கப்பட்ட அனைத்து மருத்துவர்களின் முயற்சி பற்றி எனது குடும்பத்தாரிடம் எடுத்துரைக்கப்பட்டது. எனது குடும்பத்தார் மருத்துவ உபகரணங்களை அகற்றுவதற்கு சம்மதம் தெரிவித்தனர். உயிர் காக்கும் கருவிகளை நீக்கியவுடன் மதியம் 1.30 மணி அளவில் எனது உயிர் என் உடலை விட்டு பிரிந்தது.

கர்ப்ப காலத்தில் ஏற்படும் எந்த ஒரு அசௌகரியங்களையும் உடனே உரிய மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை மேற்கொள்ள வேண்டும். எனக்கு முதுகு வலி ஏற்பட்ட உடனே அருகில் இருந்த சிறிய மருத்துவமனைக்குச் செல்லாமல் எல்லா வசதிகளும் உள்ள உயர் மருத்துவமனைக்கு சென்று இருந்தால் மருத்துவர்கள் உடனே காரணத்தை கண்டறிந்து சிகிச்சை செய்து என்னையும் என் குழந்தையையும் இவ்வுலகில் வாழ வைத்திருப்பார்கள். எங்களது அறியாமையினால் நான் இன்று என் குழந்தையையும், என்னையும் இழந்து விட்டேன்.

## 21. என் இன்ப வாழ்வின் எமன்

என் பெயர் திருமதி சார்மினா தங்கராஜ். நான் தூத்துக்குடி மாவட்டத்தில். உள்ள சாத்தான்குளம் வட்டம், கருங்கடல் துணை சுகாதார நிலையத்திற்கு உட்பட்ட செம்மண் குடியிருப்பு என்னும் கிராமத்தில் வசித்து வந்தேன்

எனது முதல் கர்ப்பம் சாந்தி மருத்துவமனையில் ஸ்கேன் மூலம் உறுதி செய்யப்பட்டது. எனக்கு போலிக் அமிலம் மாத்திரைகள் அளிக்கப்பட்டது. என்னுடைய கடைசி மாதவிடாய் நாள் 19.8 .2023, எதிர்பார்க்கப்படும் பிரசவ தேதி 26.05.2024 என்று கணக்கிட்டு தெரிவிக்கப்பட்டது .

எனக்கு 16 வயதிலிருந்து முதல் வகை நீரழிவு நோய் உள்ளது . ஆனால் நான் இதை அலட்சியமாக கருதி முறையான சிகிச்சை எடுத்துக் கொள்ளவில்லை .

நான் எனது கர்ப்ப கால பரிசோதனைகளை சாந்தி மருத்துவமனையில் 6 முறையும், சாலைப்புதூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 3 முறையும் கருங்கடல் துணை சுகாதார நிலத்தில் 3 முறையும், திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் 1 முறையும் மேற்கொண்டேன்.

17.10.2023 அன்று சாலைப்புதூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் செய்யப்பட்ட பரிசோதனையின் போது என்னுடைய இரத்த அழுத்தம் அதிகமாக இருந்ததால் Tab.Labetalal 100mg மாத்திரைகள் ஆரம்பிக்கப்பட்டது மேலும் எனக்கு இரத்தம் மற்றும் சிறுநீரில் சர்க்கரையின் அளவு அதிகமாக இருந்ததால் பொது மருத்துவர் மற்றும் மகப்பேறு மருத்துவரின் ஆலோசனைகளுக்காக TVMCH –க்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டேன். ஆனால் நான் எனது பிடிவாதத்தாலும் அலட்சியத்தாலும் செல்லவில்லை.

19.10.2023 அன்றும் சாலைப்புதூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்ற போது பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது . மீண்டும் என்னை TVMCH –க்கு செல்ல அறிவுறுத்தப்பட்டது ஆனால் நான் செல்லவில்லை .

25.10.2023 அன்று எனக்கு வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு ஏற்பட்டதால் சாந்தி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன். அங்கு Tab.Loperamide மாத்திரை கொடுக்கப்பட்டு இரண்டு நாட்களில் வயிற்றுப்போக்கு கட்டுப்படுத்தப்பட்டது.

மீண்டும் 16.12.2023 அன்று சாலைப்புதூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பரிசோதனை மேற்கொண்ட போது இரத்தத்தில் சர்க்கரை அளவு 284 மில்லி கிராம் இருந்ததால் Human Mixtard Insulin 15u –0 –15u எடுத்துக்கொள்ள பரிந்துரைக்கப்பட்டேன். மீண்டும் TVMCH –க்கு மேல் சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்டேன் .

19.12.23 அன்று TVMCH –க்கு பரிசோதனைக்காக சென்றேன். எனது பிரசவத்தில் சிக்கல்கள் அதிகமாக இருப்பதால் உள் நோயாளியாக சேர்ந்து சிகிச்சை பெற அறிவுறுத்தப்பட்டேன். ஆனால் நான்எனது அலட்சியத்தால் அதற்கு சம்மதம் இல்லை என கூறி மறுத்து விட்டேன் .

நான் மீண்டும் சாந்தி மருத்துவமனைக்கு சென்று பரிசோதனை செய்து கொண்டேன். 23.12.2023 அன்று எனக்கு மயக்கம் ஏற்பட்டதால் சிதம்பரம் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். இரத்தத்தில் சர்க்கரை அளவு

50 மில்லி கிராம் ஆக குறைந்து இருந்ததால் இன்சுலின் அளவு 10u–0–10u யூனிட் ஆக எடுக்க, வாய்மொழியாக அறிவுறுத்தப்பட்டேன்

31.12.2023 அன்று காலை 2 மணிக்கு நான் கழிப்பறையில் விழுந்து விட்டதால் என்னை சிதம்பரம் மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர் 'அங்கிருந்து திசையன்விளை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு எடுத்துச் சென்றனர் மீண்டும் அங்கிருந்து TVMCH –க்கு மேல்சிகிச்சைக்கு பரிந்துரைக்கப்பட்டேன்

TVMCH இல் எனக்கு அனைத்து சிகிச்சைகளும் துரிதமாக நடைபெற்றது. நான் மயக்க நிலையிலேயே இருந்தேன். நரம்பியல் மருத்துவர், இருதயவியல் மருத்துவர், பொது மருத்துவர், மனநல மருத்துவர் மற்றும் மகப்பேறு மருத்துவரின் ஆலோசனைகளையும் உடனுக்குடன் பெற்று சிகிச்சை நடைபெற்றது

01.01.2024 அன்று எனக்கு இரத்தம் 1 யூனிட் ஏற்றப்பட்டது. 01.01.2024 அன்று என் வயிற்றில் சிசுவின் இதயத்துடிப்பு இல்லாததால் பிரசவம் தூண்டப்பட்டது.

02.01.2024 , அன்று காலை 5 மணிக்கு ஆண் குழந்தை இறந்தே பிறந்தது. 02.01.2024 , அன்று இரவு 10 மணிக்கு எனக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டது. அனைத்து மருத்துவர்களும் சேர்ந்து என்னை காப்பாற்ற எடுத்துக் கொண்ட அனைத்து முயற்சிகளும் என் சாவை நிறுத்த முடியவில்லை.

நான் என்னுடைய அலட்சியத்தாலும் பிடிவாதத்தாலும் என்னை எத்தனையோ முறை அனைத்து சிகிச்சை வசதிகளும் உள்ள மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக செல்ல அறிவுறுத்தப்பட்டும் என் குழந்தை வயிற்றிலேயே இறப்பதற்கு காரணமாகவும், எனது இறப்பிற்கு காரணமாகவும் இருந்து விட்டேன் .

நான் பிடிவாதம் இல்லாமலும், அலட்சியம் இல்லாமலும் என் குழந்தை மேல் அக்கறை எடுத்துக்கொண்டு அனைவரும் பரிந்துரைத்த மேல்சிகிச்சைக்காக எல்லா வசதிகளும் உள்ள உயர் மருத்துவமனைக்கு சென்றிருந்தால் நான் என்னையும் என் குழந்தையையும் காப்பாற்றி இவ்வுலகில் இன்பமாக வாழ்ந்து இருப்பேன். என்னுடைய அலட்சியத்தால் என்னையும் என் குழந்தையும் நான் இழந்துவிட்டேன். இந்த நிலை யாருக்கும் வரக்கூடாது என வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 22. சிப்பிக்குள் முத்து

என் பெயர் திருமதி ஆனந்தி, எனக்கு 21 வயது ஆகிறது. நான் திரு சதீஷ் என்பவரை திருமணம் செய்து செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் என்னும் ஊரில் உள்ள செல்லம்மாள் கோவில் தெருவில் வசித்து வந்தேன்.

என் வாழ்க்கையில் சந்தோசமான ஒரு தருணத்தை எதிர்பார்த்து காத்திருந்தேன். ஆம் நான் எதிர்பார்த்தது போல் அந்த தருணம் எனக்கு விரைவாக நடந்து விட்டது. நான் கருவுற்றிருந்தேன்.

கடவுள் எனக்கு இரட்டிப்பான சந்தோஷத்தை கொடுத்தார். நான் பரிசோதனை செய்வதற்காக அருகில் உள்ள ஜமீன் இடத்துர் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் எனது கர்ப்பத்தை உறுதி செய்தேன். பின்னர் பரிசோதனை செய்து கொண்டேன்.

என்னுடைய கடைசி மாதவிடாய் நாள் 19-3-2023 என்பதால் எதிர்பார்க்கப்பட்ட பிரசவ தேதி 26-12-2023 என்று கணக்கிட்டு எனக்கு தெரிவித்தனர். நான் மொத்தமாக 10 முறை பரிசோதனைக்கு சென்றேன்.

அதாவது மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் நான்கு முறையும், மதுராந்தகத்தில் உள்ள அரசூர் மருத்துவமனையில் ஐந்து முறையும், ஒரு முறை வீட்டு பார்வையில் ஒரு முறையும் பார்வையிடப்பட்டு பரிசோதனையை மேற்கொண்டேன்.

எனது இரண்டாவது மாதம் முடிவில் ஜமீன் என்ற ஊரில் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் எனது முதல் கர்ப்பகால பரிசோதனையை மேற்கொண்டு 5-6-2023 அன்று ஸ்கேன் செய்யப்பட்டு கர்ப்பத்தை உறுதி செய்யும்போது என் கர்ப்பப்பையில் இரண்டு சிசுக்கள் இருப்பது உறுதி செய்யப்பட்டது. மேலும் கர்ப்பகால ஆய்வக பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு முப்பது நாட்களுக்கு இரண்டு வேளை போலிக் அமில மாத்திரைகள் வழங்கப்பட்டது.

எனது ஐந்தாவது மாதம், மதுராந்தக அரசு மருத்துவமனையில் மீண்டும் பரிசோதித்து ஸ்கேன் செய்து குழந்தையின் வளர்ச்சியை பரிசோதித்து குழந்தையின் இதயத்துடிப்பை கேட்டு இரட்டிப்பு சந்தோஷம் அடைந்தேன். ஸ்கேன் ரிப்போர்ட்டில் என் கர்ப்பப்பையில் ஒரு நஞ்சு கொடியில் இரண்டு சிசுக்கள் 16 வாரங்கள் வரை உள்ளது என்றும். கருவில் சிசுக்களின் இதயத்துடிப்பு நன்றாக உள்ளது என்றும் மருத்துவர்கள் கூறினார்கள்.

29-9-2003 அன்று நான் எனது ஏழாவது பார்வையின் போது மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் பரிசோதனைக்கு சென்றேன். அப்போது எனக்கு லேசாக காய்ச்சல் இருந்தது அப்பொழுது எனக்கு இரத்த பரிசோதனைகள் செய்யபட்டது அதில் இரத்த வெள்ளை அணுக்களின் அளவு 100000 cells/cumm ஆக இருந்தது. அப்போது, அங்கு உள்ள செவிலியர்கள் என்னை இங்கு உள் நோயாளியாக அனுமதிக்க வேண்டும் என்று சொன்னார்கள். அப்போது நான் என்னுடன் கூட இருப்பதற்கு என் அம்மா, பெண் உதவியாளர்கள் யாரும் இல்லாததால் நான்

உள்நோயாளியாக இருப்பதற்கு எனக்கு விருப்பம் இல்லாமல் மருத்துவமனையை விட்டு வெளியே வந்து வீட்டிற்கு சென்று விட்டேன். மீண்டும் இரண்டு நாட்கள் கழித்து எனக்கு கடுமையான காய்ச்சல், தலைவலி, முகம் வீக்கம் மற்றும் பாத வீக்கம் ஏற்பட்டு மீண்டும் மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். அங்கு மீண்டும் CBC பரிசோதிக்கப்பட்ட போது வெள்ளை அணுக்களின் அளவு 87 ஆயிரம் ஆக குறைந்து இருந்தது. என்னை மேல் பரிசோதனைக்காக செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு எனக்கு காய்ச்சல் பரிசோதனை செய்தார்கள்.

IgM டெங்கு பரிசோதனை செய்யப்பட்டு டெங்கு உறுதி செய்யப்பட்டது. 30–9–2023 அங்கு எனக்கு உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டேன். அங்கு எனக்கு எல்லா பரிசோதனைகளும் விரைவாக செய்யப்பட்டது. நான் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டேன். பிரசவத்திற்கு முந்தைய, கருவின் கண்காணிப்பு, கர்ப்பகாலத்தில் உண்டான காய்ச்சல் நிலையை கண்காணிப்பதற்காகவும், முன் நச்சூட்டு வியாதியை கண்காணிப்பதற்காகவும் எனெனில் எனக்கு உயர் இரத்த அழுத்தமும், சிறுநீரில் கணிசமான அளவு புரதமும் இருந்தது எனவே சிறுநீரக சிக்கல்கள், வலிப்பு வருவதற்கான அறிகுறியும் இருந்ததால் தீவிரமாக கண்காணிக்கப்பட்டேன். இது தாய் சேய் இருவரையும் தாக்கும் எனவும் எச்சரிக்கப்பட்டேன்.

மேலும் என் இரண்டு குழந்தைகளும் மிகவும் குறைவான பிறப்பு எடையில் உள்ளதாகவும், எனக்கு குறைமாத பிரசவம் நடைபெறலாம் என்றும் அறிந்து கொண்டேன். அதன் பின்னர் மிகவும் வேதனை அடைந்தேன்.

நான் இந்த தருணத்தில் என்னுடைய உடல் நிலை மிகவும் மோசமான நிலையில் இருப்பதை செவிலியர்கள் என்னுடன் இருக்கும் என் உறவினர்களுக்கு தெரிவித்து அவர்களிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டார்கள்.

எனக்கு அறுவை சிகிச்சை செய்து குழந்தைகளை வெளியே எடுத்தார்கள். அப்போது எனக்கு இரண்டு அழகான ஆண் குழந்தைகள் பிறந்தார்கள். அவர்களின் எடையில் முதல் குழந்தையின் எடை 1.21 Kg இரண்டாவது குழந்தையின் எடை 1.15 Kg இருந்தது. குழந்தைகள் இருவரும் எடை குறைவான பச்சிளம் குழந்தைகள். அதனால் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டனர்.

அப்போது தான் திடீர் என்று என் பிறப்பு பாதை வழியாக அதிகமான இரத்தப்போக்கு வெளியேறுகிறது என்று மருத்துவர்கள் செவிலியர்களும் மிகவும் பதட்டமான சூழலில் எனக்கு தீவிர சிகிச்சை அளித்தனர்.

இரத்தப்போக்கை கட்டுப்படுத்த மருந்துகள் என் உடல் நரம்புகள் வழியாக எனக்கு செலுத்தப்பட்டது. இரத்தப்போக்கு அதிகமாக இருப்பதால் அதிகமான திரவங்களும் உடனடியாக இரத்தமும் ஏற்றப்பட்டது. மீண்டும் மருத்துவர்கள் எனக்கு அறுவை சிகிச்சை மூலம் என் கர்ப்பப்பையை அகற்றுவதற்கு

என்னுடைய உறவினர்களுக்கும் செய்தி தெரிவிக்கப்பட்டு கையெழுத்து வாங்கப்பட்டது.

என்னை மீண்டும் செவிலியர்கள் அறுவை சிகிச்சை அரங்கிற்கு அழைத்துச் சென்றனர். நான் அப்போது பாதி சுயநினைவுகளை இழந்து விட்டேன். எனக்கு அறுவை சிகிச்சை செய்து என் கர்ப்பப்பையை அகற்றி விட்டார்கள்.

எனக்கு மீண்டும் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு தீவிரமாக கண்காணிக்கப்பட்டேன். எனக்கு மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்டதால் செயற்கை சுவாச கருவியின் உதவியுடன் சுவாசம் வழங்கப்பட்டது.

என்னை எப்படியாவது காப்பாற்றி விட துடித்தார்கள். என் இரு ஜீவன்களுக்கும் என் தாய்ப்பால் என்னும் அமுதத்தை ஊட்டி மகிழ்ந்திட என் மனம் மிகவும் ஆசைப்பட்டது.

ஆனால், என்னால் மனது ஆசைப்பட்டது போல் என் உடல் ஒத்துழைப்பு வராதபடியால் என் உடல்நிலை மிகவும் மோசமான கட்டத்தில் சென்று கொண்டிருந்தது. 4–10–2023 அன்று காலை 7 மணி அளவில் என் இதயம் செயலிழந்தது நான் எனது கடைசி மூச்சு நின்று விட்டது. எனது இரண்டு பிஞ்சு முகங்களையும் பார்க்காமல் தவிப்போடு இறைவனடி சேர்ந்தேன்.

என் ஆழ் மனது ஒன்று சொல்ல விரும்புகிறது, அது என்னவென்றால் ஆரம்ப நிலையிலேயே எனது உடல்நிலை பற்றி அறிந்து என்னை மருத்துவர்களும் செவிலியர்களும் என்னை உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்க அறிவுறுத்தப்பட்டேன்.

அவர்கள் அறிவுரைகளை கேளாது இருந்ததினால் என் இரண்டு செல்வங்களையும் இன்னுயிர் தந்தவர்களையும் விட்டுவிட்டு விண் உலகிற்கு சென்று விட்டேன். மன்னிக்கவும் இது போல் யாரும் மருத்துவர்களின், செவிலியர்களின் அறிவுரைகளை அலட்சியப்படுத்தாதீர்கள்.

’வேட்பத்தாஞ் சொல்லிப் பிறர்சொல் பயன்கோடல்

மாட்சியின் மாசற்றார் கோள்”

## 23. சொர்க்கத்திலிருந்து தாய்!

என் பெயர் திருமதி.ராணி, 32 வயது. நான் திரு.ராஜேஷ் கண்ணன் என்பவரை திருமணம் செய்து ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள வண்ணன்குண்டு கிராமத்தில் வசித்து வந்தேன்.

ராமநாதபுரத்தில் உள்ள சிவானி மருத்துவமனையில் 04.06.2023 அன்று எனது கர்ப்பத்தை உறுதி செய்தேன்.

என்னுடைய கடைசி மாதவிடாய் நாள் 24.4.2023 என்பதால் எதிர்பார்க்கப்படும் பிரசவ தேதி 01.02.2024 என்று கணக்கிட்டு எனக்கு தெரிவித்தனர்.

இராமநாதபுரத்தில் உள்ள சிவானி மருத்துவமனையில் நான் மொத்தமாக 17 முறை பார்வையிடப்பட்டேன் மூன்றாம் மாதம் சிவானி மருத்துவமனைக்கு பரிசோதனைக்கு சென்றபோது அனைத்து பரிசோதனைகளையும் செய்தேன்.

ஐந்தாவது மாதம் 18.08.2023 அன்று சிவானி மருத்துவமனையில் மீண்டும் குழந்தையின் வளர்ச்சியை பரிசோதித்தார்கள். என் குழந்தை இதயத் துடிப்பை கேட்டு ஆனந்தம் அடைந்தேன். அங்கு எனக்கு முதல் தவணை Inj.Td போட்டார்கள்.

ஆறாவது மாதம் 18.09.2023 அன்று வழக்கமான ஆய்வக பரிசோதனைகளும் ஸ்கேன் பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் இரத்த பரிசோதனையில் இரத்தத்தின் அளவு குறைவாக உள்ளதாக தெரிவித்தார்கள் அதோடு ஏழாவது மாதம் சிவானி மருத்துவமனைக்கு 15.10.2023 அன்று பார்வையிடச் சென்றேன். எனக்கு இதய பரிசோதனை ECHO செய்யப்பட்டது, அதுவும் நன்றாக இருப்பதாக கூறினார்கள் என் குழந்தையின் இதயத்துடிப்பு நன்றாக எனக்கு கேட்டது.

ஆனால் 24/10/23 அன்று எனக்கு திடீரென்று இருமலும் சளியும் இருந்தது இருமல் சளியினால் அவஸ்தைப்பட்டதால் நான் அதே சிவானி மருத்துவமனைக்கு மீண்டும் சென்றேன்

அங்கு எனக்கு காய்ச்சல் மாத்திரைகளும், நோய் தொற்றை குறைப்பதற்கு மாத்திரைகளும், இருமலுக்கு டானிக்கும் அளிக்கப்பட்டது. நான் மாத்திரை மருந்துகளை ஒழுங்காக சாப்பிட்டேன்.

எட்டாவது மாதத்தில் 13.12.2023 அன்று 5 தடவை திடீரென்று வயிற்றுப்போக்கு இருந்தது, அதனால் மீண்டும் அதே சிவானி மருத்துவமனைக்கு சென்றேன் பரிசோதிக்கப்பட்டேன். ஸ்கேன் பரிசோதனை செய்யப்பட்டது எக்கோ பரிசோதனை செய்யப்பட்டது. அதில் எக்கோவில் EF 67%ஆக இருந்தது. மருத்துவமனையில் ஓ.ஆர்.எஸ், பிஃபிலாக், எக்கோஸ்பிரின் மாத்திரைகள் கொடுத்தார்கள்.

28.12.2023 அன்று ஸ்கேன் பரிசோதனையின் போது குழந்தையின் இதயத் துடிப்பு பார்க்கப்பட்டது. பனி நீரின் அளவு பார்க்கப்பட்டதில் சிறிது அதிகமாக காணப்பட்டது. மற்ற அனைத்தும் நார்மலாக இருக்கிறது.

ஆனால் மறுநாளே எனக்கு காய்ச்சல் ஆரம்பித்துவிட்டது அதனால் அன்றே 05.01.2024 அன்று அதே சிவானி மருத்துவமனைக்கு சென்றேன். வெப்பநிலை அளவு 101 டிகிரி ஃபாரன்ஹீட், ரத்த அழுத்தம் 130/80 mmhg, எடை 70.2 kg, ஆக்ஸிஜன் அளவு 92% ஆக இருந்தது. குழந்தை வளர்ச்சியும் குழந்தையின் இதயத்துடிப்பும் நன்றாக இருந்தது. பரிசோதனையை முடித்துவிட்டு காய்ச்சல் இருந்ததால் காய்ச்சலுக்கான அனைத்து பரிசோதனைகளும் செய்யப்பட்டது. வெளி நோயாளியாகவே சிகிச்சை எடுத்தேன்.

இரண்டு நாட்களில் காய்ச்சல் சரியாகிவிட்டது அதனால் நான் வீட்டிலேயே இருந்துவிட்டேன். இரண்டு நாட்கள் கழித்து வயிற்றில் கடுமையான வலி ஏற்பட்டது. எனக்கு முதல் குழந்தை அறுவை சிகிச்சை செய்து எடுக்கப்பட்டதால் ராமநாதபுரம் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு 08.01.2024 அன்று 10.30 மணி அளவில் சென்றேன். அங்கு சென்றவுடன் என்னை மருத்துவமனையில் உடனே உள்நோயாளியாக சேர்த்தார்கள். அதற்கு அவர்கள் சொன்ன காரணம் டெங்கு காய்ச்சல் இருக்கிறதாகவும் பிரசவவலி ஏற்பட்டுவிட்டது என்றும் கூறினார்கள். அனுமதித்த போது காய்ச்சல் இல்லை ஆனால் டெங்கு காய்ச்சல் இருப்பதற்கான NS1 பாசிடிவ் ஆக இருந்தது , மற்றபடி இரத்த அழுத்தம், நாடித்துடிப்பு, சுவாசம், ஆக்ஸிஜன் அளவு எல்லாம் நார்மலாக உள்ளது. குழந்தை இதயத்துடிப்பு நன்றாக இருந்தது, பனிக்குடம் உடையவில்லை.

பின் நான்கு மணி நேரம் கழித்து எனக்கு நாடித்துடிப்பு அதிகமானது, என் வயிற்றில் முன்னாடி அறுவை சிகிச்சை செய்த இடத்தில் மிகவும் தொய்வு அடைந்து கிழியக்கூடிய நிலை தெரிவதாக கூறி அவசரமாக அறுவை சிகிச்சை செய்து என் குழந்தையை வெளியே எடுத்தார்கள். எனக்கு 08.01.2024 மாலை 5 மணி அளவில் அழகான பெண் குழந்தை 2.750 கிலோவில் பிறந்தது. உடனே குழந்தை அழுதது. அறுவை சிகிச்சையில் தசைகள் அனைத்தும் ஒன்றுடன் ஒன்று ஒட்டி இருந்தது என்று கூறினார்கள். நாடித்துடிப்பு வேகமாக இருந்தது, இரத்த அழுத்தம் நார்மலாக இருந்தது. என்னுடைய வயிறு கொஞ்சம் வீக்கமாகவே இருந்தது. அதே நிலையில் 10.01.2024 அன்று எனக்கு மூச்சு வாங்க ஆரம்பித்துவிட்டது, என்னுடைய வயிறு ரொம்ப வீங்கி விட்டது, இரத்த அழுத்தம் ஒரு நிலையாக நார்மலா தான் இருந்தது. என்னுடைய சுவாசம் அதிகரித்து எனக்கு மூச்சு விட மிக மிக கஷ்டமான நிலையில் இருந்தேன்.

என்னுடைய நம்பிக்கையை இழக்க ஆரம்பித்தேன் என் புதிய வரவு குழந்தையை என்னால் வளர்க்க முடியாதோ என்ற பயம் என்னை தொற்றிக் கொண்டது. மருத்துவர்கள் செவிலியர்கள் என் பக்கத்திலேயே இருந்து கவனிக்கிறார்கள். பெரிய டாக்டரை அழைத்து ஒப்புதல் கேட்கிறார்கள், அவர்களின் ஒப்புதலின்படி எனக்கு அதிக வீரியம் உள்ள நோய் தொற்று தடுப்பு மருந்து கொடுக்கப்படுகிறது. மூச்சு வித்தியாசமாக விடுகிறேன். செயற்கை சுவாசம் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுகிறது, மயக்க மருந்து மருத்துவர் வரவழைக்கப்படுகிறார். டெங்கு காய்ச்சலின் பின் விளைவுகள் இருப்பதாக

கூறுகிறார்கள். என்னுடைய நிலைமை மிகவும் மோசமான நிலைக்கு செல்வதை கவனித்த என் உறவினர்கள் என்னை எப்படியாவது காப்பாற்றி விட வேண்டும் என்ற நோக்கத்தில் அவர்கள் என்னை பெரிய வசதிகள் உள்ள மருத்துவமனைக்கு கூட்டிச் சென்று என்னை காப்பாற்றி விட வேண்டும் என்று அந்த நேரத்தில் தப்பு கணக்கு போட்டு இராமநாதபுரத்தில் எனக்கு செயற்கை சுவாசம் கொடுக்க அனுமதிக்கவில்லை. ஒரு வேளை அந்த நேரத்தில் கடவுள் எனக்கு தயை கூர்ந்து ராமநாதபுரத்தில் எனது உறவினர்கள் அறியாமையால் என்னை அந்த சிக்கலான நேரத்தில் மதுரை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அவசர ஊர்தியில் ஒரு VHN உடன் செல்கிறோம் என வற்புறுத்தி என்னை அழைத்து செல்கிறார்கள். எனது சுவாசம் கொஞ்சம் கொஞ்சமாக குறைகிறது. நான் போகும் வழியிலேயே ஆத்மா கொஞ்சம் கொஞ்சமாக வெளியே சென்று கொண்டிருக்கிறது. **"நான் என்ன செய்வேன் என் குழந்தைகள் என் செய்யும்"** . என் ஆன்மா என்னை விட்டு பிரிகிறது. கடவுளே! 10.01.2024 காலை 8 மணி அளவில் எனது உடல் மதுரை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு செல்கிறது. அவர்கள் என்னை பரிசோதித்து விட்டு இவர் வரும் வழியிலேயே இறந்து விட்டார் என்று கூறுகிறார்கள். என் ஆன்மா அடங்கி விட்டது. **ஆம் நான் இழந்தது "என் உயிர் மட்டுமல்ல என் குழந்தைகளின் எதிர்காலம், என் குடும்பத்தினரின் சந்தோசம் நான் இறந்தும் வேதனை அடைகிறேன்".**

குறிப்பு

**எனக்கு காய்ச்சல் ஏற்பட்டவுடன் நான் ஒரு எல்லா வசதிகளுடன் கூடிய மருத்துவமனையில் சேர்ந்து காய்ச்சலுக்கான காரணத்தை அறிந்து அதை அப்பொழுதே சரி செய்திருந்தால் அதன் பின் விளைவுகளில் இருந்து நான் காப்பாற்றப்பட்டு இருப்பேன். என் போதாத காலம் என் அஜாக்கிரதையால் நான் டெங்கு காய்ச்சலுக்கான பின் விளைவுகளுக்கு பலியாகினேன் என்ற வருத்தத்துடன் இந்த உலகத்தை விட்டு செல்கிறேன்.**

## 24. காற்றில் கரைந்த கீதம்!

என் பெயர் திருமதி.சந்தியா 22 வயது நான் திரு.சிவக்குமார் என்பவரை திருமணம் செய்து லட்சுமி நகர் தொட்டத்துப்பாளையம், திருப்பூர் என்ற முகவரியில் வசித்து வந்தேன். எனக்கு 19 வயதில் திருமணம் இனிதாக நடைபெற்றது.

எனக்கு முதல் குழந்தை அறுவை சிகிச்சையின் மூலம் பிறந்தது. இனிதே எனது நாட்களை குழந்தையுடன் மகிழ்ச்சியாக கழித்து வந்தேன். எனது மாதவிடாய் நாட்கள் தள்ளிப் போனதை அறிந்து, எனது இரண்டாவது மாதத்தில் ராக்கையகவுண்டன் புதூர் துணை சுகாதார நிலையத்தில் இரண்டாவது கர்ப்பத்தை உறுதி செய்தேன்.

அத்துணை சுகாதார நிலையத்தில் எனக்கு கர்ப்பகால பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு முதல் தவணை தடுப்பூசி போடப்பட்டது.

எனது மூன்றாவது மாதத்தில் நெருப்பெரிச்சல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஸ்கேன் செய்து கர்ப்பத்தை உறுதி செய்து, எதிர்பார்க்கப்படும் பிரசவ தேதி நவம்பர் மாதம் 11–ஆம் தேதி என்று (11.11.2023) தெரிவித்தார்கள்.

மேலும் அங்கே எனக்கு கர்ப்பகால ஆய்வக பரிசோதனைகள் மேற்கொண்டனர். ஆய்வக முடிவில் இரத்தசோகை இருப்பதனால் இரும்புச்சத்து நிறைந்த உணவு பொருட்களை உட்கொள்ள அறிவுறுத்தினார்கள். ஒரு மாதத்திற்கு இரு வேளை இரும்புச்சத்து மாத்திரை மற்றும் கால்சியம் மாத்திரைகள் வழங்கப்பட்டது.

மேலும் இரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகமாக இருப்பதினால் திருப்பூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு மேற்பரிந்துரை செய்தார்கள்.

நான் திருப்பூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ஆய்வக பரிசோதனைக்கு சென்றேன். இரத்தத்தில் சர்க்கரையின் அளவு சிறிது அதிகமாக இருப்பதனால் உணவுக்கட்டுப்பாடு திட்டத்தை மேற்கொள்ள அறிவுறுத்தினார்கள்.

நான் நெருப்பெரிச்சல் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் வழக்கமான ஆய்வக பரிசோதனைகளை மேற்கொண்டேன். சிறுநீரில் சர்க்கரையின் அளவும், புரதத்தின் அளவும் அதிகமாக இருந்ததால் மறுபடியும் திருப்பூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு மேற்பரிந்துரை செய்தனர். அம்மருத்துவமனையில் என்னை பரிசோதனை செய்து, உணவுக்கட்டுப்பாடு திட்டத்தை அறிவுறுத்தினார்கள்.

அதன்பிறகு நான் எந்தவித பரிசோதனைக்கும் செல்லாமல் வீட்டிலேயே தங்கிவிட்டேன். என்னை பதிவு செய்த செவிலியர் என்னை அலைபேசியில் அடிக்கடி தொடர்பு கொண்டு பரிசோதனைக்கு வர சொன்னார்கள். நான் செல்ல மறுத்துவிட்டேன். திரும்பவும் என்னை தொடர்பு கொண்டதால் நான் 9–வது மாதம் திருப்பூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு ஆய்வக பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு எனக்கு கடுமையான இரத்த சோகை இருப்பதினால் 18.10.23 அன்று உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டேன். எனக்கு

மூன்று பாட்டில் இரத்தம் ஏற்றினார்கள். இரத்த அழுத்தம் அதிகமாக இருந்ததினால் அதற்கான மருந்துகள் வழங்கப்பட்டது.

நான் தொடர் மருத்துவ பரிசோதனைக்கு செல்லத் தவறியதால் இத்தகைய மருத்துவ சிக்கல்கள் எனக்கு ஏற்பட்டது. 26.10.23 அன்று பிரசவ வலி ஏற்பட்டது. அறுவை சிகிச்சையின் மூலம் எனக்கு 01. 01 pm மணி அளவில் 3.5கிலோ எடை கொண்ட ஆண் குழந்தை பிறந்தது. பிறந்த எனது குழந்தைக்கு மூச்சுத் திணறல் இருந்ததினால் உடனடியாக தீவிர சிகிச்சை கண்காணிப்பு பிரிவிற்கு கொண்டு சென்றார்கள். அதனால் நான் மிகவும் கவலை அடைந்தேன். திடீரென்று எனக்கு வயிறு உப்புசம் ஏற்பட்டது. அதிக வயிறு வலியும், மூச்சுத்திணறலும் ஏற்பட்டது. உடனே என்னை தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதித்தனர். உயிர் காக்கும் சிகிச்சை மற்றும் மருந்துகள் அளிக்கப்பட்டது. நான் சுயநினைவை இழந்தேன். இம்மண்ணுலகை விட்டு விண்ணுலகத்திற்கு இரு பிஞ்சு குழந்தைகளையும் தவிக்கவிட்டு 26.10.23 அன்று மாலை 06.20 மணிக்கு விடை பெற்றேன்.

செவிலியர் மற்றும் மருத்துவரின் அறிவுரையின்படி தொடர் கண்காணிப்புக்கு செல்லாததால் தான், இந்த இழப்பு என் கணவருக்கும் என் குழந்தைகளுக்கும் ஈடு செய்ய இயலாத ஒன்று. 'தரமான முறையில் மக்களுக்கு வழங்கப்படும் சுகாதார சேவைகளை ஏற்போம் பயன்பெறுவோம்.'

## 25. சின்னஞ்சிறு கூட்டுக்குள்ளே சொர்க்கம் இருக்கு!!

எனது பெயர் திருமதி.ஆறுமுகம், 33 வயதாகிய நான் அருந்ததியபுரம் என்ற கிராமத்தில் வசித்து வந்தேன். இது எனது மூன்றாவது பிரசவமாகும். நான் இரத்த சோகை மற்றும் பலபிள்ளைபேறு கொண்ட சிக்கலான கர்ப்பிணி ஆவேன்.

06.06.2023 அன்று கடைசியாக மாதவிலக்கு ஆனேன். பின்பு 08.08.2023 அன்று தென்காசி அரசு மருத்துவமனையில் கர்ப்பம் உறுதி செய்யப்பட்டு, நான் 10–வது வாரம் கர்ப்பம் என்று தெரிந்துகொண்டேன். அன்றே எனக்கு இரத்த பரிசோதனை செய்யப்பட்டு, மிதமான இரத்தசோகை என கூறி, மறுநாள் ஸ்கேன் பரிசோதனைக்கு வர சொன்னார்கள். நானும் சென்றேன். சோதித்து பார்த்துவிட்டு 8 வார குழந்தை வளர்ச்சி அடைந்துள்ளதாக கூறினார்கள்.

14.08.2023 அன்று மேல்மெய்ஞானபுரத்தில் உள்ள துணை சுகாதார நிலையத்தில் கர்ப்பத்தை பதிவு செய்து கொண்டேன். அங்கு முதல் தவனை தடுப்பூசியும் போட்டு கொண்டேன். இரும்புசத்து மாத்திரையும் குடற்புழு நீக்க மாத்திரையும் வழங்கினார்கள்.

06.09.2023 அன்று தென்காசி அரசு மருத்துவமனைக்கு பரிசோதனைக்கு சென்றேன். அங்கு என்னுடைய இரத்த அழுத்தம் 110/70 என்று சராசரியாக உள்ளது என்று கூறினார்கள்.

13.09.2023 அன்று மேல்மெய்ஞானபுரத்தில் உள்ள துணை சுகாதார நிலையத்தில் என்னுடைய 14–வது வார கர்ப்பத்தில் 2–ஆம் தவனை தடுப்பூசி போட்டுக் கொண்டேன். இரும்புசத்து மாத்திரையும் பெற்றுக்கொண்டேன்.

சுகமாகவே எல்லா நாட்களும் செல்லும் என சொல்ல முடியாது. அன்றும் அப்படிதான். எனது கர்ப்பபையில் 2.4x1.7 செ.மீ அளவில் கட்டி உள்ளதாக ஸ்கேன் பார்த்து சொன்னார்கள். மிகவும் பயந்துவிட்டேன்.

25.10.2023 அன்று தென்காசி அரசு மருத்துவமனையில் எனது 20–வது வார கர்ப்பத்தில் ஸ்கேன் பரிசோதனைக்கு சென்றேன். குழந்தையின் வளர்ச்சி 19–வாரங்கள் உள்ளது எனவும், குழந்தையின் இதய துடிப்ப நன்றாக உள்ளது என கூறினார்கள், நானும் மகிழ்ச்சியோடு வீடு சென்றேன்.

எனது 21–வது வாரம், 22–வது வாரம், 23–வது வாரம், 24–வது வாரம். 26–வது வாரம், 27–வது வாரம் என தொடர்ச்சியாக நான் தென்காசி மருத்துவமனைக்கும், துணை சுகாதார நிலையத்திற்கும், அரியபாபுரம் சுகாதார நிலையத்திற்கும் சென்றேன். அங்கு ஸ்கேன், ECG மற்றம் இரத்த அழுத்தம் என அனைத்து பரிசோதனைகளம் சராசரியாகவே உள்ளது என தெரிவித்தார்கள். எனது ஹீமோகுளோபின் அளவு 10–ஐ தொட்டு இருந்ததாகச் சொன்னார்கள்.

12.12.2023 அன்று அரியபாபுரம் சுகாதார நிலையத்திற்கு சென்றேன். அங்கு எனக்கு 4 இரும்புசத்து ஊசி சிரை வழியாக ஒரு நாள் விட்டு ஒரு நாள் கொடுத்தார். எனது ஹீமோகுளோபின் அளவு 9.4 ஆக இருந்தது. 10.01.2024 அன்று தென்காசி அரசு மருத்துவமனைக்கு சென்று பரிசோதித்து வந்தேன்.

06.02.2024 அன்று காலை 7 மணி அளவில் உதிரப்போக்கு ஏற்பட்டது. உடனே தென்காசி அரசு மருத்துவமனைக்கு காலை 8 மணியளவில் சென்று பரிசோதித்தோம். அங்கு எனக்கு குறைமாத பிரசவமாக போகிறது எனகூறி அவசரகால அறுவை சிகிச்சைக்கு என்னை பரிந்துரைத்தனர். 10.30 மணிக்கு அறுவை சிகிச்சை முடிந்தது அழகான பெண் குழந்தை பிறந்தது. 1.9 கிலோ எடையில் என் மகள் இருந்தாள்.

அறுவை சிகிச்சைக்கு பின் எனது நிலை சராசரியாக இருந்தது. பின் மாலை 4 மணி அளவில் உதிரப்போக்கு அதிகமாக ஏற்பட்டது. எனது கருப்பை சாதாரணமாக சுருங்கி விரிவடையவில்லை என கூறினார்கள். எனது இரத்த அளவு 7 கிரமாக இருந்தது. இரத்தப்போக்கு நின்றபாடில்லை உடனே ஒரு பாட்டில் அடர் இரத்தம் கொடுக்கப்பட்டது. 6.15 மணியளவில் அறுவை சிகிச்சை மூலம் என் கருப்பை நீக்கம் செய்யப்பட்டது. பின்பு 5 பாட்டில் இரத்தம் செலுத்தப்பட்டது. எனது இரத்த அணுக்கள் குறைவதாக கூறினர். எனது சிறுநீரகம் செயல்பாட்டை இழக்க ஆரம்பித்தது. டயாலிசிஸ் செய்ய பரிந்துரைத்தனர். சிறுநீர் அளவு குறைய துவங்கியது. உயர் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு மாற்றினர்.

07.02.2024 அன்று 12 மணியளவில் இருந்து 11.02.2024 அன்று காலை 6 மணி வரை அங்கு எனக்கு செயற்கை சுவாசம் கொடுத்தனர். இரத்தம் ஏற்றினர். உயிர் காக்கும் மருந்துகள் கொடுத்தனர். சுயநினைவற்ற நிலையில் நான் இருந்தேன்.

11.02.2024 அன்று காலை 6.50 மணிக்கு இவ்வளவு சிகிச்சையையும் கடந்து என் உயிர் பிரிந்தது.

என் குழந்தைகள், என் கணவர், உறவுகள் என அனைவரையும் விட்டு விண்ணுலகம் சென்றேன். சிறு குடும்பமாக வாழ்ந்திருந்தால் வாழ்ந்திருப்பேன் நன்றாக இருக்கம் அதிக பிள்ளைப்பேறுக்கு ஆசை கொண்டு உயிரை இழந்துவிட்டேன்.

## 26. அலட்சியம் – குடும்பம் – தவிப்பு

**என் பெயர் திருமதி சுதா வயது 28**. நான் திரு. ஸ்டீபன் ராஜ் என்பவரை, திருமணம் செய்து ஜே. ஜே. ஆர். நகர் வியாசர்பாடி சென்னையில் இனிமையாக வசித்து வந்தேன், எங்களுக்கு, ஒன்றை வயதில் ஒரு பெண் குழந்தை உள்ளது. அவள் பிறக்கும் தருவாயில் எனக்கு, நீர் இழிவு நோய் இருப்பதை கண்டுபிடித்து அதை, சாப்பாட்டு கட்டுப்பாட்டின் மூலம் சரி செய்து, அறுவை சிகிச்சை மூலம் பிறந்தாள். சென்னை வடக்கு வியாசர்பாடி நகர் புற சுகாதார மையத்தில் , சுகாதார செவிலியர் அவர்களால் என்னுடைய இரண்டாவது, கர்ப்பம் உறுதி செய்து பதிவு செய்யப்பட்டது.

என்னுடைய கடைசி மாதவிடாய் நாள் 17.11 2022 என்பதால் எதிர்பார்க்கப்படும் பிரசவ தேதி, 24. 8. 2023 என்று கணக்கிட்டு தெரிவித்தனர். 28.02.2023 நகர் புற சுகாதார மையத்தில் வயிறு ஸ்கேன், முதல் தவணை ரணஜனி தடுப்பூசி போட்டு கையோடு இரும்பு சத்து மாத்திரைகள் தந்தார்கள். நான் மொத்தமாக ஐந்து முறை பரிசோதனைக்கு சென்றேன்.

அதில் வியாசர்பாடி நகர்ப்புற சுகாதார நிலையத்தில் 4 முறையும், ஒரு முறை ஸ்டான்லி அரசு பொது மருத்துவமனையில் பரிசோதனை மேற்கொண்டேன். 27.3.2023.

எனது இரண்டாவது கர்ப்ப பரிசோதனை வியாசர்பாடி நகர் புற மையத்தில் மேற்கொண்டு அனைத்து ரத்தம் மற்றும் சிறுநீர் பரிசோதனை மற்றும் ஸ்கேன் எடுத்து, வாய்வழி குளுக்கோஸ் திரன் தாங்கும் பரிசோதனையும் மேற்கொண்டார்கள். அதில் சர்க்கரை அளவு 135 மில்லி கிராம் ,சிறுநீரில் சர்க்கரை அளவு அதிகம் உள்ளது என்பதை தெரிவித்தார்கள். குடற்புழு மாத்திரை ஒன்றும், இரும்பு சத்து, எலும்பு சத்து மாத்திரை கொடுத்து, சாப்பாட்டு கட்டுப்பாட்டு முறைகளை எடுத்துரைத்து, பின்பற்றுமாறு எனக்கு கூறினார்கள்.

எனது ஐந்தாவது மாத பரிசோதனைக்கு சென்றேன், அன்று குழந்தைக்கு ஐந்தாம் மாத ஸ்கேன், Hb level அனைத்தையும் ரிப்பீட் செய்யுமாறு சொன்னார்கள்.

நான் UPHC சென்று பரிசோதனை செய்தபோது எனக்கு ரத்த அழுத்தம் மிகவும் குறைந்துள்ளது 88/68 mmhg என கணக்கிட்டு சர்க்கரை திறன் தாங்கும் பரிசோதனைள் 186 அதிகரித்து சிறுநீரில் சர்க்கரை ஒன் பிளஸ் அளவும் அதிகரித்து உள்ளது என தெரிவித்தனர் உடனே அரசு ஸ்டாலின் மருத்துவமனை பரிந்துரைக்க பட்டேன். எனது மனம் சிறிது பதட்டம் ஏற்பட்டது எனினும் பரிந்துரையின் பேரில் 22.6.23 ஸ்டான்லி மருத்துவமனைக்கு கர்ப்பகால நீரிழிவு நோய்க்கான சிகிச்சை க்காக உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு மூன்று நாட்கள் இன்சுலின் மருந்தும், சர்க்கரை உணவு கட்டுப்பாடு மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டு 24.06.2023 மருத்துவ மனையிலிருந்து வீட்டிற்கு சென்றேன்.

பிறகு, kGH மருத்துவமனையில், உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சர்க்கரை கட்டுப்பாட்டு மேலாண்மை சிகிச்சை அளித்து அதில் இன்சுலின் அளவு R 5 என மூன்று வேலையும் தொடங்கி 26.7.24 R4 யூனிட் ஆக குறைத்து 27.7.2024 வீட்டிற்கு சென்றேன் .

ஆனால் எனது பிரச்சினையின் தீவிரத் தன்மை உணராத நான் உள்நோயாளியாக சேர மறுத்து விட்டேன். பிறகு ஒரு வாரம் கழித்து 15.8.23 இல் உள்நோயாளியாக KGH மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இன்சுலின் அளவு R13 யூனிட் என அதிகப்படுத்தி கர்ப்பகால மேல் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு இருந்தேன். 16.8.23 அன்று அவசர கால அறுவை சிகிச்சை உடன் குடும்பக் கட்டுப்பாட்டு செய்து . 1. 55 மதியம் அழகான ஆண் குழந்தை 2.51 கிலோ கிராமில் பிறந்தது. அறுவை சிகிச்சைக்கு பிறகு மருந்து, நரம்பு வழியாக கொடுக்கப்பட்டது .

அறுவை கிச்சைக்கு முதல் நாள் காய்ச்சல் 103 டிகிரியும் Hb 9.2 ஆகவும் இருந்தது, அதற்கு சிறை வழி திரவம், காய்ச்சலுக்கு எதிர் மருந்தும் கொடுக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது ஆனாலும் எனக்கு காய்ச்சல் குறையவில்லை, பிறகு தீவிர தனி பிரிவு [HDU]க்கு மாற்றப்பட்டேன் அங்கு காய்ச்சலுக்கான மருந்தும் சிறை வழிமருந்தும் ,உடல் முழுவதும் நீர் ஒத்தட ம் சிகிச்சை அளிக்கப்பட்டு, இதயத் துடிப்பு சீரான மருந்தும் செலுத்தப்பட்டது. அங்கு ஸ்கேன் செய்து வயிற்றில் நீர் தேக்கமும் நுரையீரலில் தொற்று நீர் சேர்ந்துள்ளது என கூறினார்கள். என் நினைவும், சுவாசமும் மெதுவாக குறைந்து வருவதை நான் உணர்ந்தேன். 18.8.23. அன்று 11.15 மாலை எனக்கு வாய் வழியாக டியூப் சொறுகி சுவாச சிகிச்சை அளித்தார்கள். எனக்கு அதிக வீரியம் உள்ள மாத்திரையை கொடுத்தார்கள், உணவு குழாய் மூலம் டியூப் போட்டு திரவ நீரும் கொடுத்தார்கள். 22.8. 2023 மணி மதியம் SCAN, XRAY எடுத்து அதில் சளி உள்ளதால் முச்சு தினறல் மருந்து அளிக்கப்பட்டது பிறகு எக்மோ [ECMO]சிகிச்சைக்காக ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டேன். 24.8.23 எக்மோ சிகிச்சையில் எனக்கு நுரையீரலில் தொற்று அதிகமாகி என் இதயம் துடிப்பு முழுமையாக குறைந்து. 3.40 மாலை, முற்றிலும் என் இதயம் செயலிருந்து நாடித்துடிப்பு நின்று விட்டதை நான் முழுமையாக உணர்ந்தேன். இறைவா, என் இரண்டு குழந்தைகளையும் நீயே காப்பாற்று என்று கூறி , என் சுவாசம், காற்றோடு காற்றாக கலந்து விட்டது. இந்த மண்ணுலகை விட்டு விடைபெறுகிறேன் என் இறைவா ,இதற்கெல்லாம் காரணம் என் அலட்சியம். "**எனது அலட்சியமே எனக்கு எமனாக ஆனது "ஆதலால்**

**அலட்சியப்போக்கை தவிர்த்து தரமான முறையில் மக்களுக்கு வழங்கப்படும் சுகாதார சேவைகளை ஏற்போம் பயனடைவோம்.**

## 27. அமைதியின் பயணம்

எனது பெயர் கவிதா. 23 வயது கணவர் பெயர் சரத்குமார். நான் பாரதிநகர் தாமரைபாளையத்தில் வசித்து வருகிறேன்.

எனக்கு இது இரண்டாவது குழந்தை முதல் குழந்தை ஆபரேஷன் செய்து எடுக்கப்பட்டது. தற்பொழுது எனக்கு உயர் ரத்த அழுத்தம் இருக்கிறது. LMP: 20.5.2023 EDD : 27.2.2024, நான் 26 முறை கர்ப்பகால பரிசோதனைகள் செய்தகொண்டேன்.

முதல் முறையாக PHC–ல் 01,08,2023 பரிசோதனை செய்து கொண்டேன். அன்று எனது Hb –12.8gms மருத்துவர் என்னை PHC–ல் இரண்டாவது முறை பரிசோதனை செய்துகொண்டேன். அன்று எனது Hb– 11.7gms,GCT87mg/dl. ஸ்கேன் 15.10.2023 அன்று எடுக்கப்பட்டது. ஸ்கேன் நார்மல், ECG, ECHO,15.11.2023, அன்று எடுத்துக்கொண்டேன். அதுவும் நார்மலாக உள்ளது.

PHC–யில் பரிசோதனை மேற்கொள்ளும் பொழுது இரண்டு மாதத்தில் ஆறு கிலோ எடை கூடி உள்ளதாக கூறி மருத்துவர் என்னை ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கு சென்று மகப்பேறு மருத்துவரைப் பார்த்து பரிசோதனை மேற்கொள்ள அறிவுறுத்தினார்கள்.

நான் ஈரோடு மருத்துவமனையில் பரிசோதனை சென்றேன். எனக்கு ரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை அளவுகளை பரிசோதித்து சீராக உள்ளதாக கூறினார்கள்.

அரசு ஆரம்ப சுகாதார நிலையம் தாமரைபாளையத்தில் வாரம் ஒருமுறை உயர் இரத்த அழுத்தம் பார்த்துக்கொண்டேன் மற்றும் இது சீராக உள்ளதாக கூறினார்கள்.

அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பரிசோதனை மேற்கொண்டேன். அன்று எனது உயர் ரத்த அழுத்தம் 120/80 mmHg மருத்துவர் என்னை ஈரோடு அரசு மருத்துவமனைக்கு பரிசோதனைக்கு செல்ல அறிவுறுத்தினார். 24.01.2024 அன்று நான் கொடுமுடி அரசு மருத்துவமனையில் மகப்பேறு மருத்துவரை அணுகி பரிசோதனை மேற்கொண்டேன் அன்று எனது உயர்ரத்த அழுத்தம் 130/90 mmHg மருத்துவர் என்னை உயர் ரத்த அழுத்த மாத்திரையை சாப்பிட வழங்கினார்கள்.

01.02.24 அன்று தாமரைபாளையம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்குட்பட்ட மருத்துவர் மற்றும் கிராம சுகாதார செவிலியர் வீட்டில் எனக்கு உயர் ரத்த அழுத்த பரிசோதனை மேற்கொண்டார்கள். மூன்றாவது GCT பரிசோதனை செய்து கொள்ள கூறினார்கள், மற்றும் தினமும் இரத்த அழுத்தம், சிறுநீர் (alb /sug) பரிசோதனை செய்துகொள்ள கூறினார்கள்.

06.02.2024 அன்று 06.40 மணிக்கு எனக்கு அடிவயிறு வலித்ததால் தனியார் ஆஸ்பத்திரிக்கு சென்று மருத்துவரை அணுகினேன். மருத்துவர் எனக்கு T.Dolo 650 மற்றும் T.Nitrobact மாத்திரைகளை ஐந்து நாட்கள் சாப்பிட அறிவுறுத்தினார்கள். மற்றும் உயர் ரத்த அழுத்த மாத்திரைகளை தொடர்ந்து உட்கொள்ள அறிவுறுத்தினார். 08.02,2024 எனக்கு அதிகாலை முதல் காய்ச்சல்

இருந்தது. 03.30pm அளவில் நான் தனியார் மருத்துவமனையை அணுகினேன். அங்கு எனக்கு காய்ச்சலுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. மேலும், என்னை ஈரோடு அரசு தலைமை மருத்துவமனை அல்லது கரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை செல்ல அறிவுறுத்தினார்கள். கிராம சுகாதார செவிலியர் என்னை அரசு ஆரம்ப சுகாதார நிலையம் தாமரைபாளையத்திற்கு அழைத்து சென்று அங்க இருந்து 108 மூலமாக கரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சென்றேன்.

கரூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை 08.02.2024 மாலை 5.45 மணிக்கு நான் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டேன். எனக்கு காய்ச்சல் அதிகமாகிக் கொண்டே இருந்தது. எனக்கு IV fluids போட்டார்கள் பாராசிட்டமால் மற்றும் ஆன்டிபயாடிக் மருந்துகளை கொடுத்தார்கள். எனது தட்டை அணுக்களின் அளவானது 1.6 லட்சம் ஆக இருந்ததது எனக்கு டெங்கு சீராலஜிடெஸ்ட் எடுக்கப்பட்டது. எனினும், எனக்கு காய்ச்சல் அதிகமாகவே இருந்தது 11.02.2024 எனது தட்டை அணுக்களின் அளவானது 59 ஆயிரம் ஆக குறைந்தது. 12.02.2024 காலை 3மணி அளவில் எனக்கு பிரவச வலி எடுக்க ஆரம்பித்தது. அன்று எனது தட்டை அணுக்களின் அளவு 53 ஆயிரம் ஆக குறைந்தது. அவசரமாக அறுவை சிகிச்சை செய்யப்பட்டு 12.02.24 காலை 4.30 மணிக்கு ஆண் குழந்தை பிறந்தது. அறுவை சிகிச்சைக்கு பின் என்னை தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது.

அறுவை சிகிச்கைக்குப்பின் எனது Hb–9.4gms. தட்டை அணுக்களின் அளவு 39 ஆயிரம் ஆக குறைத்ததுTC–24,700. மேலும், எனக்கு எடுக்கப்பட்ட டெங்கு பரிசோதனை பாசிட்டிவாக ஆனது. 13.02.2024 காலை 6 மணி முதல் சிறுநீர் வெளியேறுவது குறைவாக இருந்தது. மேலும், எனக்கு ரத்தம் கொடுக்கப்பட்டது. ரத்த அழுத்தமானது குறைந்து கொண்டே சென்றது. அதற்கான சிகிச்சையும், மேற்கொள்ளப்பட்டது. ECHO எடுக்கப்பட்டது ECHO நார்மல் ஆக உள்ளது. அனைத்து சிறப்பு மருத்துவர்கள் மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டது.

அதன்பின் காலை 09.45 மணிக்கு எனக்கு மாரடைப்பு ஏற்பட்டது. மருத்துவர்கள் காப்பாற்ற முயன்று 17.02.2024 காலை 10.12 மணிக்கு நான் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டது.

## 28. கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம்

என் பெயர் திருமதி சாந்தி, 23 வயது ஆகிறது. எனக்கு 3 வருடங்களுக்கு முன் திருமணம் நடந்தது. திருமணத்தின் போது எனக்கு வயது 20. நான் தர்மபுரியில் வசித்து வந்தேன். எனக்கு இரண்டு குழந்தைகள் உள்ளன. இந்நிலையில் நான் மறுபடியும் கருவுற்றேன்.

எனக்கு கடைசி மாதவிலக்கான தேதி (LMP) 23.09.2022 ஆகும். எனக்கு ஏற்கனவே LSCS மூலம் குழந்தை பெற்றதால் நான் அதிக சிக்கலுள்ள கர்ப்பிணி பட்டியலில் சேர்க்கப்பட்டேன்.

மருத்துவரின் பார்வைக்காக 27.12.2022 அன்று காரிமங்கலம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். எடை – 74 கிலோ இருந்தது. இரத்த அழுத்தம் Bp–120/80 mmHg. Hb –10.6 கிராம் உள்ளது. சிறுநீரில் அல்புமின்/சர்க்கரை– இல்லை என்றும் கூறினார்கள்.

09.01.2023 அன்று ஸ்கேன் பரிசோதனை செய்தார்கள். ஸ்கேனில் குழந்தை நன்றாக இருப்பதாகவும், கருவின் வளர்ச்சி 11 வாரங்கள் 4 நாட்கள்ஆக உள்ளது என்று கூறினார்கள். மிகவும் மகிழ்ச்சியுற்றேன்.

Hb –11.00 கிராம் உள்ளது, சர்க்கரை அளவு 64 இருப்பதாக கூறினார்கள். உடல் எடை அசாதாரணமாக இருப்பதாக கூறி அனைத்து பரிசோதனைகளையும் எடுத்தார்கள். ஒரு மாதத்தில் 3 கிலோ எடை அதிகரிப்பு மற்றும் குழந்தை வளர்ச்சி குறைபாடுகள் கண்டறிய ஸ்கேன் செய்ய மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரைத்தனர்.

அங்கு என்னுடைய எடை 84 கிலோ, கருவின் இதயத் துடிப்பு பார்த்தார்கள். இரண்டு கால்களும் லேசாக வீங்கி இருப்பதை கண்டறிந்தானர். எனவே கர்ப்பகால இரத்த அழுத்த நோய் இருப்பதால் என்னை மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதியாகும் படி அறிவுறுத்தினர். எனக்கு விருப்பமின்மையால் நான் அனுமதியாகாமல் வீட்டிற்கே திரும்பிவிட்டேன்.

ஒரு வாரத்திற்கு பிறகு கால் வீக்கம் அதிமாக இருந்ததால் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு மீண்டும் சென்று அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு மூன்று நாள் கழித்து டிஸ்சார்ஜ் செய்யப்ப்பட்டேன்.

இரத்தசர்க்கரை அளவு இயல்பாக இருப்பதாகவும், கல்லீரல் செயல்பாடு இயல்பாக இருப்பதாகவும் கூறினார்கள். இரத்ததில் Hb அளவு 9.8 gm இருப்பதாக கூறினார்கள். இரத்த அழுத்தம் –110/70 mm/hg இருப்பதாக கூறினார்கள். ஸ்கேன் செய்த போது அதிகப்படியான பனிக்குட நீர் இருப்பதாக கூறினார்கள். கருவின் வளர்ச்சி –35 வாரங்கள் 3 நாட்கள் இருப்பதாகவும் இயல்பாக இருப்பதாகவும் கூறினார்கள். மிகவும் மகிழ்ச்சியுற்றேன்.

10.07.23 அன்று எனக்கு அடி வயிற்று வலி ஏற்பட்டது. நான் உடனடியாக GDMCH இல் 10.07.23 அன்று மதியம் 01.33 மணிக்கு அனுமதிக்கப்பட்டேன். சேர்க்கையின் போது சுவாசம், இதய துடிப்பு மற்றும் இரத்த அழுத்தம் இயல்பாக இருப்பதாக கூறினர். இரத்தம் எடுத்து, Hb பார்த்தார்கள். Hb –10.6 கிராம் உள்ளது என்று கூறினார்கள். கருவின் இதயத் துடிப்பு பார்த்தார்கள். இயல்பாக உள்ளதாக கூறினார்கள்.

எனக்கு அன்று மாலை 5.53 மணிக்கு அறுவை சிகிச்சை மூலம் அழகான பெண் குழந்தை பிறந்தது. என் குடும்பத்தில் உள்ள அனைவரும் மிகவும்

மகிழ்ச்சியாக இருந்தனர். தாய் மற்றும் குழந்தை இருவரும் நல்ல நிலையில் உள்ளனர் என்று மருத்துவர் குடும்பதாரிடம் தெரிவித்தனர்.

திடீரென 14.07.23 அன்று மாலை 06.00 மணிக்கு எனக்கு காய்ச்சல் ஏற்பட்டது. காய்ச்சல் வெப்பநிலை 99 F இருப்பதாக கூறினர். ஊசி மூலம் மருந்து செலுத்தினர். அன்று இரவு 11 மணிக்கு எனக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டது. உடனடியாக மருத்துவர் பார்த்து என்னை தீவிர சிகிச்சை பிரிவிற்க்கு மாற்றினார்கள். தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. ஊசி மூலம் மருந்துகள் செலுத்தினர். பின்பு எனக்கு பிராணவாயு செலுத்தினர். எனக்கு காய்ச்சல் வருவதற்க்கான காரணங்களை கண்டறிய இரத்த பரிசோதனைகள் செய்யபட்டன.

15.07.23 அன்று இரவு 08.00 மணிக்கு எனக்கு உடல் முழுவதும் வெடிப்புத் தடிப்புகள் கண்டறியப்பட்டது. எனக்கு இரத்ததில் தொற்று கலந்து இருப்பதாகவும், எனது சிறுநீரகம் செயல்பாட்டை நிறுத்தியதாகவும் மருத்துவர்கள் கூறினார்கள். எனக்கு தொற்று அதிர்ச்சி ஏற்பட்டதாகவும் கூறினார்கள்.

எனக்கு 16.07.23 அன்று நள்ளிரவு 12.20 மணிக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டது. உடனடியாக மருத்துவர்கள் எனக்கு உயிர் காக்கும் சிகிச்சையை மேற்கொண்டனர். தீவிரமாக சிகிச்சை அளித்தும் என்னை மருத்துவர்களால் உயிர்ப்பிக்க முடியவில்லை, 16.07.23 அன்று அதிகாலை 01.45 மணிக்கு நான் மரணமடைந்ததாக அறிவிக்கப்பட்டது. எனக்கு 2 குழந்தைகள் இருந்தும் குடும்பக் கட்டுப்பாட்டு முறையை பின்பற்றாமல் விட்டதால், என்னுடைய 3 குழந்தைகளையும் பிரியும் சூழ்நிலை உருவாகிவிட்டது.

## 29. கூடு விட்டு ஆவி பிரிந்தது ஏன்?

பெயர்: ஜெயா , கணவர்பெயர் சரவணன்.

வயது : 30 வருடங்கள்

எங்கள் ஊரில் உள்ள துணை சுகாதார நிலையத்தில் என்னுடைய கர்ப்பத்தினை பதிவு செய்துக்கொண்டேன். கடைசி மாத விலக்கான நாள்: 15.12.2022. எதிர் பார்க்கப்படும் பிரசவ தேதி: 22.09.2023. உயரம்: 159 சென்டி மீட்டர், எடை: 63 கிலோகிராம்.

இரண்டு தவணை ரணஜன்னி தொண்டை அடைப்பான் தடுப்பூசி அளிக்கப்பட்டது. கண்டறியப்பட்ட கர்ப்பகால சிக்கல்கள் : முந்தைய அறுவை சிகிச்சை/ ரத்தசோகை.

கர்ப்பகால பார்வை: ஹீமோகுளோபின் அளவு– 11கி/டெலி இரத்த அழுத்தம் – 100/70 மிமி மெர்குரி எடை – 63 கிலோகிராம். எச் ஐ வி தொற்று இல்லை. மஞ்சள்காமாலை தொற்று: இல்லை. பால்வினை தொற்றுகள் :இல்லை. சிறுநீரில் சர்க்கரை மற்றும் புரதம்: இல்லை. தைராய்டு ஸ்டிமுலேடிங் ஹார்மோன் 1.1

**20 கர்ப்பவாரங்களில்:** ஹீமோகுளோபின் அளவு :8.8 கி/டெலிகுளுக்கோஸ் தாங்கும் திறன்அளவு :91 மிகி/ டெலி சிறுநீரில் புரதம் மற்றும் சர்க்கரை :இல்லை. இரத்தஅழுத்தம் :100/70மிமி மெர்குரி .எடை – 66.5 கிலோகிராம். அயன் சுக்ரோஸ் ஊசி ஐந்து தவணைகள் தஞ்சாவூர் தனியார் மருத்துவமனையில் கொடுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாதமும் கர்ப்பகால பரிசோதனைகளை செய்துக்கொண்டேன் அனைத்தும் சரியாக உள்ளதாக கூறினார்கள்.

எனது 35 வார கர்ப்ப காலத்தில் காய்ச்சல் மற்றும் மூச்சுதிணறல் காரணமாக தஞ்சாவூர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டேன். அனுமதிக்கப்பட்ட பொழுது, உடல் வெப்ப நிலை 102 டிகிரி பாரன்ஹிட், நாடித்துடிப்பு 130/ நிமிடங்கள், SPO2 98%, இரத்தஅழுத்தம் : 110/70

2 பாட்டில்கள் A பாசிடிவ் இரத்த சிவப்பணுக்கள் போடப்பட்டது. இரண்டாவது பாட்டில் செலுத்தப்பட்டு கொண்டிருக்கும்போது, கர்ப்பிணிதாய்க்கு திடீரென மூச்சு திணறல் ஏற்பட்டது. இரத்தம் உடனடியாக நிறுத்தப்பட்டு இரத்த வங்கிக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, இரத்தவகை மீண்டும் பரிசோதிக்கப்பட்டது. இரத்தம் நிறுத்திய பிறகு தாய் இயல்பாக காணப்பட்டார்.

மார்பு எக்ஸ்ரே பரிசோதனை செய்யப்பட்டது. பரிசோதனை முடிவில், நுரையீரலின் இடது கீழ்ப்புற பகுதியில் சந்தேகத்திற்குரிய திட்டுக்கள் இருப்பது தெரியவந்தது. எனவே, எம் ஆர் ஐ ஸ்கேன் பரிசோதனை செய்ய அறிவுறுத்தப்பட்டது. ஆனால் 13/08/2023 அன்று இரவு 7 மணி அளவில் கர்ப்பிணித்தாய் தனது சுயவிருப்பத்தின் பெயரில் மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

**14/08/2023 அன்று–** கர்ப்பிணிதாய்க்கு திடீரென மூச்சுதிணறல் ஏற்பட்டு அருகில் உள்ள அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லப்பட்டார்.

அங்கிருந்து, 108 ஆம்புலன்ஸ் வாகனத்தில் ஆக்சிஜன் உதவியுடன் கர்ப்பிணித்தாய் தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்யப்பட்டார்.

மருத்துவக்கல்லூரி மருத்துவமனையை அடைந்தவுடன் கர்ப்பிணி தாய்க்கு சுவாசத்தை சீராக்க செயற்கை சுவாசம் பொருத்தப்பட்டது. **16/08/2023** அன்று மதியம் 3.33 மணி அளவில் கர்ப்பிணிதாய்க்கு உயிருள்ள ஆண் குழந்தை பிறந்தது. குழந்தையின் எடை 1.9 கிலோ கிராம்.

**19/08/2023 அன்று–**தாய்க்கு சுவாசக்குழாய் துளையிடப்பட்டு சுவாசம் அளிக்கப்பட்டது.

**20/08/2023** அன்று தாய்க்கு திடீரென இருதய துடிப்பு நின்று விட்டதால், அனைத்து உயிர்ப்பிக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. இருப்பினும், தாயை உயிர்ப்பிக்க முடியாமல் **20/08/2023 அன்று காலை 9:23** மணிஅளவில் தாய் இறந்து விட்டார் என்பது உறுதிசெய்யப்பட்டது.

மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மருத்துவர்களின் ஆலோனை படி தங்கி உயர் சிகிச்சை பெற்றிருந்தால் இன்று நான் உயிரோடு இருந்திருப்பேன்.

## 30. கவனக்குறைவு

வணக்கம். என் பெயர் தேவி, கணவர் பெயர் சதிஷ், வயது 24, எனக்கு இது இரண்டாவது பிரசவம். எனக்கு ஏற்கனவே வலிப்பு நோய் இருக்கிறது. மேலும், முதல் குழந்தை அறுவை சிகிச்சை மூலம் பிறந்தது. தற்போது நான் இரண்டாவது முறையாக கருவுற்றிருக்கிறேன். எனது கடைசி மாதவிலக்கு தேதி 09.11.2022 எதிர்பார்க்கப்படும் பிரசவ தேதி 16.08.23. எனது கர்ப்பத்தை எங்கள் கிராமத்தில் உள்ள கிராம சுகாதார செவிலியரிடம் 12 வாரத்தில் பதிவு செய்தேன்.

முதல் கர்ப்ப பரிசோதனையை 03.02.2023 அன்று 12வது வாரத்தில் துணை சுகாதார நிலையத்தில் சிறுநீர் பரிசோதனை செய்து எனது கர்ப்பத்தை உறுதிசெய்தேன். அப்போழுது எனது இரத்த அழுத்தம் 100/70 ஆக இருந்தது.

இரண்டாவது பரிசோதனை 14.02.23 அன்று 14 வாரத்தில் ஆரம்ப சுகாதார நியைலத்தில் மேற்கொண்டேன். அங்க எனக்கு இரத்த பரிசோதனை செய்தார்கள். சிறுநீர் பரிசோதனையில் அல்புமின், சுகர் இல்லை என்பது தெரியவந்தது. 30 நாட்களுக்கு சத்து மாத்திரை கொடுத்தனர். எனக்கு ஏற்கனவே வலிப்பு நோய் இருந்த காரணத்தினால் சேலம் அரசு மருத்துவமனையில் உள்ள நரம்பியல் நிபுணரை பார்க்க அறிவுறுத்தினர்.

ஏப்ரல் மாதம் 2–ம் வாரம் எனது கணவருடன் சண்டைபோட்டுக்கொண்டு எனது தாய் வீடான எடுதலை நத்தம் கள்ளக்குறிச்சிக்கு சென்றுவிட்டேன். எனது போனை சுவிட் ஆப்ஃ–ல் இருந்தது, எனக்கு தெரியவில்லை. அதனால் நர்ஸ் அக்காவால் என்னை தொடர்பு கொள்ள முடியவில்லை. பிறகு நான் அங்கு இல்லாத காரணத்தினால் கள்ளக்குறிச்சி கட்சிராபாளையத்தில் உள்ள இன்னொரு கர்ப்பிணி மூலம் தொடர்ப்புகொண்டார். அதன்பிறகு ஆஷா பணியாளர் மூலம் 23.05.23 அன்று அருகில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அழைத்து செல்லப்பட்டேன். இடைப்பட்ட நாட்களில் ஒரு மாதகாலமாக வலிப்புக்கான மாத்திரைகளை சாப்பிடவில்லை.

பிறகு அடுத்த நாள் கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றேன். வலிப்பிக்கான மாத்திரைகள் மருந்துகள் ஆரம்பிக்கப்பட்டது. ஒரு வழியாக என்னை தேற்றி 29.05.23 அன்று மீண்டும் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு 1.13kg , எடையுள்ள குறைமாத ஆண் குழந்தை பிறந்தது.

பிறகு தலையில் CT ஸ்கேன் எடுத்து நரம்பியல் நிபுணரிடம் அறிவுரை பெற்று கார்பமசிபின் மாத்திரை காலை மற்றும் இரவும், பிளைட்டாயின் மூன்று வேளையும் எடுக்கும் படிகூறி டிஸ்சார்ஜ் செய்யப்பட்டேன். பிரசவம் முடிந்த 15வது நாளில் 1 முறை வலிப்புஏற்பட்டது. அப்போது உடனே நான் மருத்துவமனைக்கு சென்று காண்பிக்க வில்லை. இரண்டு நாட்கள் கழித்து கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றேன்.

அன்று மாலை 6 மணிக்கு 1 முறை வலிப்பு ஏற்பட்டது. அதற்கான லெவிட்ரசிட்டம் மற்றும் மிடசோல் ஊசி சிரைவழியாக செலுத்தப்பட்டது.

இரவு 8 மணிக்கு மீண்டும் ஒருமுறை வலிப்பு ஏற்பட்டது. மேற்கூறிய சிகிச்சைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது.

30.05.23 அன்று காலை 6 மணியளவில் செயற்கை சுவாசத்திலிருந்து எடுக்க முடிவு செய்யப்பட்டு வலிப்புக்கான மருந்துகள் நிறுத்தப்பட்டது. மீண்டும் சுயநினைவு திரும்பாத காரணத்தினால் மீண்டும் செயற்கை சுவாசம் பொருத்தினர். மேலும், வலிப்புக்கான மாத்திரைகளும் எனக்கு தொடர்ந்து கொடுக்கப்பட்டது.

நரம்பியல் மருத்துவர் பார்த்துவிட்டு மேல் சிகிச்சைக்காக உயர் மருத்துவமனைக்கு அனுப்பவேண்டும் என்று கூறினார்.

30.5.23 அன்று மாலை 5.30 மணியளவில் செயற்கை சுவாச உதவியுடன் சேலம் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவர், கிராம சுகாதார செவிலியர், மயக்கவியல் மருத்துவர் உடன் பரிந்துரைசெய்தனர்.

பிறகு சேலம் மருத்துவமனையில் இரவு 8 மணியளவில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு, அனைத்து இரத்தபரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டது.

பிறகு நான் தொடர் செயற்கை சுவாச மிஷினிலேயே இருந்தால் தொற்று அதிகமாகும் என்பதால் தொண்டைக்குழியில் ஓட்டைபோட்டு, தொற்றுக்கிருமி தடுப்பு மருந்துகள் மற்றும் வலிப்பு தடுப்பு மருந்துகள் செலுத்தினர்.

13.06.23 அன்று மாலை 2.15 மணியளவில் திடீர் மாரடைப்பு ஏற்பட்டது. முதலுதவி சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. எவ்வளவோ முயற்சி செய்தும் என்னை காப்பாற்ற இயலவில்லை. மாலை 2.45 மணியளவில் நான்இறந்துவிட்டேன். மருத்துவரின் அறிவுரையின் படி வலிப்புக்கான மாத்திரையை சாப்பிடாததாலும் சரியான நேரத்தில் மருத்துவமனைக்கு செல்லாததாலும் எனக்கு இம்முடிவு ஏற்பட்டது.

## 31. மீளாத்துயரம்

வணக்கம், என் பெயர் ரேஷ்மா, எனக்கு வயது 35 ஆகிறது. திருமனமாகி 17 வருடம் ஆகிறது. எங்கள் சமூகத்தல் சீக்கரமே திருமணம் செய்வதால் எனக்கும் 17 வயதிலேயே திருமணம் ஆகிவிட்டது. எனக்கு 17 வயது மற்றும் 12 வயதில் இரண்டு மகன்கள் இருக்கிறார்கள். இது மூன்றாவது கர்ப்பம். காபர் டி போட்டிருந்தேன், அது விழுந்து விட்டது எனக்கு தெரியவில்லை. கர்ப்பமானதே எனக்கு தெரியவில்லை மாதவிலக்கு ஒவ்வொரு மாதமும் தள்ளிப் போவதால் இந்த முறையும் தள்ளிப் போகிறது என்று நினைத்துவிட்டேன்.

அதனால், தனியார் ஆஸ்பத்திரிக்கு சென்று சிறுநீர் பரிசோதனை செய்த்தில் கரப்பம் என்று கூறினார்கள். 5–வது வாரத்தில் எடை 60 Kg B.P 138/96mmhg என்று சொன்னார்கள். இரத்தம் மற்றும் சிறுநீர் வநளவ செய்தார்கள். மாத்திரைகொடுத்தார்கள். நான் அரசுஆரம்ப சுகாதார நிலையத்திற்கு துணை சுகாதார நிலையத்தில் பதிந்து, அட்டை போட்டு தடுப்புசியும் போட்டுக்கொண்டேன். HB 10.2 Gms மற்றும் இரத்தத்தில் சர்க்கரையின் அளவு 126Mg1/ dl என்று தெரிந்து கொண்டேன். டாக்டர் சத்தான காய்கறிகள் பழங்கள், பால், முட்டை சாப்பிடக் கூறினார்கள்.

3–வது மாத்த்தில் தனியார் ஆஸ்பத்திரிக்கு சென்று செக்கப் செய்து கொண்டேன். எடை 64 Kg B.P 140/80 mmHg. Tab Labetalol 100mg OD கொடுத்தார்கள்.

அடுத்த வாரமே அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வரக்கூறினார்கள். டாக்டர் என்னை பரிசோதனை செய்து பார்த்துவிட்டு இரத்தம் GCT Test செய்ய சொன்னார்கள். 1 ½ டம்ளர் தண்ணீரும், 1 pocket glucose powder–ம் கொடுத்து 10 நிமிடத்தில் குடிக்க கூறினார்கள். குடிக்கவே முடியவில்லை வாந்தி வருவது போலிருந்த்து. கஷ்டப்பட்டு குடித்துவிட்டேன். இரண்டு மணிநேரம் wait பண்ண சொன்னார்கள். பையன்கள் இரண்டுபேரும் பள்ளிக்கு சென்றுவிட்டதாலும் நானும் என் சித்தியும் 2 மணி நேரம் காத்திருந்து, இரத்தம் test கொடுத்தேன். அடுத்த நாள் Test Result வந்த்து. இரத்தத்தில் சர்க்கரையின் அளவு 143 mg/dl இருக்கிறது. சிறிது அதிகமாக இருக்கிறது. அதனால் சாப்பாட்டில் control ஆகிவிடும் என்று என்ன என்ன சாப்பிட வேண்டும் (மாவுப்பொருட்கள் குறைத்து, புரதச்சத்து அதிகம் எடுத்துக்கொள்ளவேண்டும்) என்று கூறினார்கள்.

இப்படியாக மாதந்தோறும் நானும் சலிக்காமல் Check–up செய்ய ஆஸ்பத்திருக்குப் போய் டாக்டரைப் பார்த்து பேசிட்டது வந்தால் கொஞ்சம் நிம்மதியாக இருக்கும் ஏனென்றால் 12 வருடம் கழித்து மீண்டும் கர்ப்பமாகி இருந்தால் முதல் இரண்டு பிரசவமும் அறுவை சிகிச்சை செய்து தான் பிறந்த்து. அதனால் தனியார் ஆஸ்பத்திரிக்கும் சென்று Check–up செய்து கொண்டேன். B.P அதிகம் இருப்பதாகவும் 3–வது மாதத்திலிருந்தே Tablet சாப்பிட்டுக் கொண்டு இருந்தேன்.

5–வது மாதத்தில் குழந்தை அசைவு தெரிந்தது. அப்பொழுது சளி இருமல் இருந்ததால் PHC–க்கு சென்று டாக்டரைப் பார்த்தேன். Scan எடுத்தார்கள். சளி

இருமலுக்கு, மாத்திரை கொடுத்தார்கள். தண்ணீரில் உப்புபோட்டு வாய் கொப்பளிக்க கூறினார்கள். எடை 66 Kg இருந்தது. எனக்கு B.P–ம், Sugar–ம் இருந்ததால் தஞ்சாவூர் பெரிய ஆஸ்பத்திரிக்கு போய் பெரிய டாக்டரைப் பார்க்கும்படி சீட்டு கொடுத்தார்கள். நான் பெரிய ஆஸ்பத்திரிக்கு போகாமல் தனியாரிடமே பார்த்துக்கொண்டேன். எடை 68Kg மற்றும் B.P 135/78 mmHg இருந்தது. RBS–120mg/dl, Hb 12 gms.

6–வது மாத்ததில் தனியார் ஆஸ்பத்திரிக்கு சென்று check–up செய்து கொண்டேன். குழந்தை சரியாக வளருகிறது. குழந்தை அசைவை மட்டும் கவனித்துக்கொள்ளச் சொன்னார்கள். எடை 70kg இருந்தேன். B.P 110/70mmHg இருந்த்து. இரண்டு நாட்கள் கழித்து PHC–க்கு சென்றேன். சிறுநீரில் சர்க்கரை 1+ இருப்பதாக கூறினால்கள். சாப்பிடுவதற்கு முன், பின் இரத்தம் test எடுத்துப்பார்ப்பதாக கூறினார்கள்.

பொங்கல் கழித்து 7 ½ மாத்த்தில் (30 வாரம்) நான் தனியார் ஆஸ்பத்திரிக்கு சென்றேன். wt–71.5kg, B.P 122/76 mmHg இருந்த்து. மாத்திரை தவறாமல் சாப்பிட்டுக்கொண்டு இருந்தேன். இப்படி மாறி மாறி 15 நாட்களுக்கு ஒருமுறை அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் தனியார் ஆஸ்பத்திரிக்கு Check–up செய்துகொண்டேன்.

8–வது மாத்த்தில் தனியார் ஆஸ்பத்திரிக்கு சென்றபொழுது எடை 72kg–ம், B.P 146/80mmHg இருந்த்து. Tab duvadilan ½ BD, Tab Labebet lt DS கொடுத்தார்கள்.

35–வது வாரத்தில் தனியார் ஆஸ்பத்திரிக்கு சென்றபொழுது பனிநீர் குறைவாக உள்ளது. wr 72.5 Kg, B.P 125//0 mmHg. என்று கூறி, இந்த குழந்தையும் அறுவை சிகிச்சை செய்து எடுத்துவிடலாம் என்று கூறி 27.02.2024 அன்று admit ஆகி அன்றே LSCS with ST செய்து அழகான பெண் குழந்தை 2.4Kg எடையில் பிறந்த்து. எனக்கு முதல் 2 ஆண்குழந்தை என்பதால், இந்தக்குழந்தை பெண் என்பதால் மிகுந்த சந்தோஷமாக இருந்த்து. 02.03.2024 நான்கு நாட்களிலேயே discharge ஆகி வீட்டிற்கு சென்றுவிட்டோம். Discharge advise–ல் மாத்திரை எழுதிக் கொடுத்தார்கள். Discharge ஆகி 05.03.2024 3–வது நாள் எங்கள் ஊர் நர்ஸ் வந்து என்னைப் பார்த்து, B.P மாத்திரை சாப்பிட்டாயா? என்று கேட்டார்கள். டாக்டர் கூறவில்லை. அதனால் நான் சாப்பிடவில்லை என்று கூறினேன். சொன்னால் தானே தெரியும். எழுதியிருப்பது எனக்கு தெரியவில்லை. குழந்தை பிறந்துவிட்டதே என்று நானும் அசால்ட்டாக இருந்து விட்டேன்.

4 நாட்கள் கழித்து, அதாவது குழந்தை பிறந்து 9 நாட்கள் கழித்து எனக்கு அதிகப்படியாக தலைவலி வந்தது. அருகில் உள்ள தனியார் மருத்துவமனையில் (மகப்பேறு மருத்துவர் இல்லை) பொது மருத்துவரிடம் பார்த்த பொழுது எனக்கு B.P 150/100 mmHg இருப்பதாக கூறினார்கள்.

தனியார் மருத்துவமனையில் B.P–க்கு கொடுத்த மாத்திரையை சாப்பிடாமல் நான் வீட்டிற்குத் திரும்ப வந்துவிட்டேன். அடுத்த நாள் காலை 5 மணிக்கு எனக்கு 2 முறை வாந்தி மற்றும் வலிப்பு வந்தது. உடனே அருகில் உள்ள தனியார்

ஆஸ்பத்திரிக்கு என்னை கூட்டி சென்றார்கள். அங்கு என்னை தீவிர சிகிச்சைப் பிரிவில் வைத்து சிகிச்சை கொடுத்தார்கள். ஒரு வாரம் அங்கு இருந்தேன்.

மூச்சுவிடுவதற்காக Ventilator–ல் எனக்கு நினைவு போய்விட்டது. அதனால் என் கணவர் உயர்சிகிச்சை வேண்டும் என்று டாக்டரிடம் கூறி AMA–ல் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் admit செய்தார்கள்.

அங்கு செல்லும் பொழுது எனக்கு நினைவில்லை. மூளையில் பிரச்சினை என்று என் கணவரிடம் கூறி CT brain எடுத்தபொழுது முன் பாதிப்பு ஏற்பட்டது தெரியவந்த்து. இங்கு பெரிய பெரிய டாக்டர்கள் சிறப்பு மருத்துவர்கள் எல்லாம் என்னை வந்து பார்த்து சிகிச்சை அளித்தார்கள். எதுவும் பலன் அளிக்கவில்லை. இரண்டு நாட்கள் கழித்து எனக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டு நான் இறந்து விட்டேன். என் குழந்தைகள் 3 பேரும் இப்பொழுது நான் இல்லாமல் அனாதையாக இருக்கிறார்கள். பாவம் என் கணவர் பிறந்த பெண்குழந்தையை எப்படி வளர்ப்பார். என் பையன்கள் இருவரும் இப்பொழுது தான் பெரிய வகுப்பு படிக்கிறார்கள். என்னுடைய கவனம் முழுவதும் பையன்கள் படிப்பில் இருந்தது. மேலும், பெண்குழந்தை பிறந்த சந்தோஷத்தில் நானும் என் கணவரும் இருந்ததில், குழந்தை பிறந்து விட்டதே என்று மாத்திரை பற்றி அலட்சியமாக இருந்துவிட்டேன். நானும் கேட்கவில்லை, டாக்டரும் கூறவில்லை. என்னுடைய சிறு தவறு எவ்வளவு பெரிய இழப்பு என் குடும்பத்திற்கு, இனிமேல் யார் கவனிப்பார் என் குழந்தைகளை?

பெண்களே இனிமேல் இதுமாதிரி தவறை நீங்கள் செய்யாதீர்கள்.

தனியார் மருத்துவர்கள், என்னைப்போல் இருப்பவர்களுக்கு சிகிச்சை அளித்து discharge செய்ததை அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்களுக்கு தெரிவிக்கவேண்டும்.

## 32. படித்த முட்டாள் நான்

என் பெயர் காவியா, எனக்கு 22 வயது நான் அரியலூர் மாவட்டத்தில் பிறந்தேன்.

நான் B.com படிச்சிருந்தேன். சென்னையில் ஒரு Private Company–ல் வேலைப்பாக்கும் போது நானும் திருவண்ணாமலை மாவட்டத்தை சேர்ந்த சதீஷ் என்பவரும் காதலித்தோம். நாங்கள் இருவரும் ஒன்றாக பழகியதால் நான் கர்ப்பமடைந்தேன் இதை நான் யாருக்கும் சொல்லவில்லை. எந்த Hospital லயும் போய்ப் பாக்கல. எனக்கு 6 மாசம் முடிஞ்சு ஏழாவது மாசம் ஆரப்பிக்கும் போது,

ஒரு தனியார் ஆஸ்பத்திரியில போய் scan எடுத்து இரத்தம் Test எல்லாம் எடுத்தோம் அங்க என்ன என்னோட இரத்தத்தோட அளவு குறைவா இருக்கிறதால அரசு கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செஞ்சாங்க அங்க போனப்புறம் என்னோட கர்ப்பத்தை பதிவு செய்ய சொன்னாங்க. அதுக்கப்புறம் நாங்க ரெண்டுபேரும் கல்யாணம் பண்ணிக்கிட்டோம். நான் ஆரம்ப சுகாதார நிலையத்துக்குப் போய் கர்ப்பத்துக்கு தேவையான பரிசோதனை எல்லாம் செஞ்சுக்கிட்டேன். எனக்கு 33 வாரம் ஆகும் போது காலையில் 5.30 மணிக்கு பணிக்குடம் உடஞ்சிருச்சு அதுக்காக ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு போனப்ப, அங்க எனக்கு பரிசோதனை செஞ்சுட்டு உடனடியாக மருத்துவக்கல்லூரிக்கு அனுப்பி வச்சாங்க நான் ரொம்ப லேட்டா போய் பணிக்குடம் உடைஞ்சத சொன்னதால, பனிநீரோட அளவு ரொம்ப கொரஞ்சிடுச்சி அதனால் உடனடியா எனக்கு ஆபரேஷன் செஞ்சு குழந்தைய எடுத்தாங்கு எனக்கு அதனால குறைமாசத்துல ஆண் குழந்தை பிறந்துச்சு. அடுத்தநாள் அதிகாலையில் எனக்கு உதிரப்போக்கு ஏற்பட்டுச்சு. எனக்கு நிறைய இரத்தம் ஏத்தற நிலை வந்துச்சு இரத்தப்போக்கு நிக்காத்தால என்னுடைய கரப்ப்பை எடுக்க வேண்டிய நிலை வந்துச்சு.

என்னுடைய நுரையீரல் சிறுநீரகம் பாதிச்சு கொஞ்சம் கொஞ்சமா எல்லா உறுப்பும் பாதிச்சிருச்சு.

திருமணத்திற்கு முன்பு உறவு வைத்தது தவறு. மேலும், பாதுகாப்பான உடலுறவு வச்சிருந்தா நான் கர்ப்பமாயிருக்க மாட்டேன். இல்லைனா ஆரம்பத்திலேயே நான் கர்ப்பமா இருக்கிறத சொல்லியிருந்தா பாதுகாப்பான கருக்கலைப்பு பண்ணியிருக்கலாம்.

எனக்கு பணிக்குடம் உடைஞ்சத ஆரம்பத்திலேயே சொல்லியிருந்தாலும் எனக்கு இவ்வளவு பெரிய பிரச்சினை ஏற்ப்பட்டிருக்காது.

## 33. அறிவுரை கேளுங்கள்

என் பெயர் சோபா, ஊர் காங்கேயம் பாளையம். எனக்கு 38 வயசு. என் கணவர் பெயர் பரமசிவம் நான் இப்ப இறந்து போய் 1 மாசத்துக்கும் மேலஆகுது. என்னடா இவ இப்ப வந்து என்ன பேசப் போறானு பாக்குறீங்களா! சொல்கிறேன். எல்லார் மாறியும் நானும் குழந்தை குட்டினு இருந்தேன். நான் 4 தடவை கர்ப்பம் ஆனேன். முதல் பெண் குழந்தை 12 வயது, அப்பறம் ஆண் குழந்தை, இரண்டு பேரும் போதும், அப்புடின்னு இருக்காம 3–ஆம் தடவை கர்ப்பம் தரிச்சப்போ, அது கருகலைந்து போச்சு. அப்போதான் எங்க பக்கம் இருக்கிற கிராமசுகாதார செவிலியர் வந்து, போதும் இதுக்கு அப்புறம் குழந்தை பிறந்தா உனக்கும் கஷ்டம் குழந்தைக்கும் கஷ்டம்னு அறிவுரை சொன்னாங்க. அந்த சமயம் இரத்தம் குறைவா இருந்ததால் எனக்கு கர்ப்பத்தடை Copper T போட்டுவிட்டாங்க. அப்போ அவங்க அதோட Side effects எல்லாம் சொன்னாங்க ஒருவேளை ஒரு மாசம், 50 நாள்னு தூரம் தள்ளி போனது. அப்படின்னா என்ன வந்து பாருங்க அப்புடின்னு சொன்னாங்க, பாவி நான் தான் கவனிக்கல. நான் என் கணவர் ஊர் ஊராபோய் வேலை பாக்கிறவங்க, அதனால சாப்பாடு தூக்கம் மாதிரி இதை இரத்தம் இல்லாதனால தூரம் தள்ளி போகுதுனு நினைச்சேன். ஆன ஒருதடவையாவது நான் எந்த அரசாங்க ஆஸ்பத்திரிலேயாவது Check பண்ணிருக்கலாம்.

நாலாவது கர்ப்பம் ஆனது எனக்கு தெரியல. இதுசமயம் தான் நான் என் பெரியம்மாக்கு உடம்பு சரியில்லை என்று பாக்க வந்தேன். அப்போதான் ஒரு மேட்டுல வண்டி ஏறி இறங்கிணப்ப நிறைய இரத்த போக்கும், மேலும் அடி வயறுவலி இருந்தது. அதாவது இரண்டு தனியார் ஆஸ்பத்திரிக்கு சென்று, அங்கிருந்து சரிபண்ண முடியல. 8 மாத குழந்தை வயத்துலேயே இறந்து போச்சுன்னு சொல்லி திருப்புர் GH அனுப்பினாங்க. அப்புறம் நடந்தது தான் எல்லாருக்கும் தெரியும். நான் ஏன் இதை இப்ப சொல்ல வந்தேன் நான் என் தரப்பில் தப்பு இருக்கு.

1.Copper–T விழுந்த்து தெரியாம இருந்தது.
2.தூரம் தள்ளி போன போது Nurse அக்காவ பாத்து சொல்லாம போயிட்ட.
3. இரண்டு குழந்தை பிறந்தும் எனக்குள்ள குழந்தை இருக்குனு உணராம போயிட்டேன். நான் நிரந்தர குடும்ப கட்டுப்பாட்டு முறையை பின்பற்றி இருந்தால் இவ்வுலகில் நானும் வாழ்ந்திருப்பேன்.

## 34. காலனின் காலடியில்

எனது பெயர் திருமதி.குமாரி, வயது 26, எனது கணவர் பெயர் திரு. செல்வம், எனக்கு திருமணமாகி 6 வருடங்கள் ஆகின்றன. என்னுடைய திருமணம் காதல் திருமணம், எனக்கு ஒரு ஆண் குழந்தை உள்ளது, வயது 4, என்னுடைய முதல் பிரசவம் ஊட்டியில் உள்ள GH–ல் 9.6.2020 அன்று ஆனது, சுகப்பிரசவம்தான். நான் மறுபடியும் இரண்டாவது முறை கர்ப்பமாக இருப்பதை அறிந்தேன். அதன்பின், எங்கள் ஊரில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நகர் ஏரியா கிராம சுகாதார செவிலியரிடம் 18.9.2023 அன்று பதிவு செய்துகொண்டேன். எனக்கு காதல் திருமணம் என்பதால் நானும் என் கணவர் மற்றும் குழந்தை மட்டுமே உள்ளோம். உடன் வந்து பார்ப்பதற்கு யாரும் கிடையாது. ஆகையால், அரசு ஆரம்ப சுகாதார நிலையம் ஒவ்வொரு முறையும் தனியாகத்தான் செக்அப்பிற்கு செல்வேன்.

அ.ஆ.சு.நிக்கு சென்றபோது எனக்கு எடை, இரத்தஅழுத்தம் மற்றும் இரத்தப் பரிசோதனைகள் செய்தார்கள். முதல் தவனை தடுப்புசி Td போட்டுவிட்டார்கள்.

எனக்கு இரத்தத்தின் அளவு 9.0gms குறைவாக இருப்பதாக என்னிடம் கூறினார்கள். ஆகையால், என்னை சத்தியமங்கலம் அரசு மருத்துவமனைக்கு போகச்சொல்லி கூறினார்கள். நானும் 29.9.2023 அன்று சத்திக்கு தனியாகச்சென்றேன். அங்கு இரத்தப்பாரிசோதனையில் எனக்கு இரத்தத்தின் அளவு8.7gms இருந்தது. ஆகையால் என்னை சத்தி GH–ல் தங்கியிருந்து இரத்தத்தின் அளவை சரிசெய்துகொள்ளுமாறு அறிவுறுத்தினார்கள். ஆனால் "நான் தனியாக வந்துள்ளேன் எனக்கு உடன் இருந்து பார்ப்பதற்கு யாரும் இல்லை, ஆகையால் என்னால் தங்கியிருந்து பார்க்க முடியாது" என்று கூறிவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன்.

7.10.2023 அன்று அ.ஆ.சு.நி.க்கு செக்அப்பிற்கு சென்றேன், அப்பொழுது எனக்கு சிறுநீர் கழிக்கும்பொழுது எரிச்சலாக இருப்பதாக மருத்துவரிடம் கூறினேன். அப்பொழுது சிறுநீர் பரிசோதனை செய்தார்கள், பரிசோதனையின் முடிவில் சிறுநீரில் புரதம் இருப்பதாக கூறினார்கள். அதனால் மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சை செய்துகொள்ளுமாறு என்னிடம் கூறினார்கள். ஆனால் நான் அதற்கு மறுத்துவிட்டேன்.

அதன்பின் எனக்கு அவர்கள் மாத்திரையை 3 வேளையும் எடுத்துக்கொள்ளச் சொன்னார்கள். அதிக அளவு நீராகாரங்களை எடுத்துக்கொள்ளுமாறு அறிவுரை கூறினார்கள்.

10.10.2023 அன்று என்னை GH–க்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் இரத்தத்தின் அளவை சரிசெய்வதற்கு அனுப்பினார்கள். இரத்தத்தின் அளவை சரி செய்யவில்லையெனில் குழந்தையின் வளர்ச்சி பாதிக்கப்படும் எனவும், எனக்கு உடல்நிலை பாதிக்கப்படும் எனவும் தெளிவாக எடுத்துக்கூறி அனுப்பினார்கள்.

GHல் எனக்கு 1 Unit $B^+$ ve இரத்தம் 11.10.23 அன்று ஏற்றினார்கள். அதன்பின்பு வீட்டிற்கு வந்துவிட்டேன்.

அ.ஆ.சு.நி. சென்றபோது எனது எடை 58kg ம், BP–90/60ம், Hb–11.1gms இருந்தது. மருத்துவர் எனக்கு அனாமலி ஸ்கேன் மற்றும் எக்கோ பார்த்துவிட்டு வருமாறு அறிவுறுத்தினார்கள். அடுத்த நாளே 29.11.2023 அனாமலி ஸ்கேன் பார்த்துவிட்டு அரசு மருத்துவனைக்கு சென்றேன், குழந்தையின் வளர்ச்சி நன்றாக இருப்பதாக மருத்துவர் கூறினார்.

எனக்கு 1.12.2023 அன்று காய்ச்சலாக இருந்ததால் அரசு மருத்துவமனைக்கு சென்றேன் அப்பொழுது என்னை பரிசோதித்துவிட்டு மருத்துவர் காய்ச்சல் மற்றும் சளிமாத்திரையை கொடுத்தார்கள். காய்ச்சல் சரியாகவில்லையெனில் சத்திக்கு செல்லுமாறு அறிவுறுத்தினார்கள். எனக்கு காய்ச்சல் சரியாகி விட்டதால் நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை.

நான் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ரெகுலர் செக்கப்பிற்கு சென்றேன். அப்பொழுது மருத்துவர் எனக்கு இரத்த ஊசி செலுத்திக்கொள்ள வேண்டும் என்று கூறினார். 4 dose இரத்த ஊசிபோட்டுக் கொள்ளுமாறும் ஒவ்வொரு ஊசியும். ஒருநாள் விட்டு ஒருநாள் வந்து போட்டுக்கொள்ளுமாறும் அறிவுரை கூறினார்கள்.

முதல் இரத்த ஊசி 27.12.23 அன்று செலுத்துவதற்கு முன்பு எனக்கு எதுவும் அலர்ஜி ஆகிறாத என்று செக்பண்ணி பார்த்துவிட்டு போட்டு விட்டார்கள். இரண்டாவது மற்றும் மூன்றாவது ஊசி செலுத்திக்கொள்ள நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை. அதன்பின் எனது கிராம சுகாதார செவிலியர் வந்து என்னிடம் கண்டிப்பாக இரத்த ஊசி செலுத்திக்கொள்ள மருத்துவமனைக்கு வரவேண்டும் என்று என்னிடம் கூறினார்.

இரண்டாவது மற்றும் மூன்றாவது இரத்த ஊசிகளை செலுத்திவிட்டார்கள். அதன்பின், இடையில் 1 ½ மாதகாலம் நான் எனது அம்மா வீட்டிற்கு சென்றுவிட்டேன். அங்கு சென்றபின் எனக்கு சளிதொந்தரவு இருந்ததால் அங்கு உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 30.1.2024 அன்று சென்று பார்த்தேன். அங்கு சளிக்கு மாத்திரை கொடுத்தார்கள் மற்றும் மற்ற சத்துமாத்திரைகளை எப்பொழுதும்போல் எடுத்துக்கொள்ளுமாறும் கூறினார்கள். எனது ஊருக்கு வந்த பின்பு 13.2.24 அன்று அரசு மருத்துவமனைக்கு செக்அப்பிற்கு சென்றேன், அப்பொழுது எனது எடை 60 Kg, BP–90/60 ம், Hb–10.3gms ம், சர்க்கரையின் அளவு 102ம் இருந்தது. எனது எக்கோ பரிசோதனை ரிப்போர்ட் நார்மலாக இருப்பதாக மருத்துவர் என்னிடம் தெரிவித்தார். இரத்தத்தின் அளவை அதிகரிப்பதற்கு மேலும் 2 இரத்த ஊசிகளை செலுத்திக்கொள்ளுமாறு மருத்துவர் கூறினார்.

முதல் டாப்அப் இரும்புச்சத்து ஊசி 14.2.2024 அன்று செலுத்தினார்கள். இரண்டாவது டாப்அப் இரும்புச்சத்து ஊசி செலுத்திக்கொள்ள நான் செல்லவில்லை. ஆகையால் GHல் உள்ள மகப்பேறு மருத்துவரை பார்த்துவிட்டு, அவர் கூறும்படி இரத்த ஊசி செலுத்திக் கொள்ளுமாறு அ.ஆ.சு.நிலையத்தில் உள்ள மருத்துவர் என்னிடம் கூறினார். நான் 8.3.2024 அன்று GHக்கு சென்றேன், அங்கு எனக்கு இரத்த பரிசோதனை செய்தபோது Hb–11.9gms இருந்தது. அதனால் மருத்துவமனையில் உள்ள மகப்பேறு மருத்துவர் இரும்புச்சத்து நிறைந்த உணவுகளை மட்டும் எடுத்துக்கொள்ளுமாறு கூறிவிட்டார்கள். 22.3.2024 அன்று

GHக்கு சென்றேன், அங்குள்ள மகப்பேறு மருத்துவர் வாரம் ஒருமுறை செக்அப் வருமாறு அறிவுறுத்தினார்கள், கர்ப்பகால அபாய அறிகுறிகள் பற்றியும் எடுத்துக்கூறினார்கள்.

ஆனால் நான் வாரம் ஒருமுறை செக்அப்பிற்கு செல்லவில்லை. எனது கிராம சுகாதார செவிலியர் என்னிடம் செக்அப்பிற்கு வருமாறு அழைத்தார். ஆனால் செல்லவில்லை, 20.4.2024 அன்று நன்கு பிரசவ வலி வந்தவுடன் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்றேன்.

நான் மருத்துவமனைக்கு 2.20 pm மதியம் சென்றேன். எனக்கு துணையாக யாருமில்லாத காரணத்தால் எனது பக்கத்துவிட்டு பெண் ஒருவர் துணையாக வந்தார். இதற்கு முன்பு செக்அப்பிற்கு அ.ஆ.சு.நி–க்கு வந்தபோதே மருத்துவர் என்னை பிரசவத்திற்கு GHக்கு செல்லுமாறு அறிவுறுத்தினார், நான் செல்ல மறுத்துவிட்டேன். அதன்பின் குழந்தை பிறக்கும் தருவாயில் வந்ததால் எனக்கு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலேயே எனக்கு ஆண் குழந்தை பிறந்தது.

குழந்தை பிறந்த அரை மணி நேரத்தில் எனக்கு அதிக உதிரப்போக்கு ஏற்ப்பட்டது. 108 ஆம்புலன்ஸ் மூலமாக உயர் சிகிச்சைக்கு அனுப்பி வைத்தார்கள். ஆனால் செல்லும் வழியிலேயே எனது உயிர் பிரிந்தது.

எனது பிரசவத்தை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வைத்துக்கொள்ள கூறியிருந்தும் என்னுடைய அலட்சியப்போக்கால் இந்நிலை எனக்கு ஏற்ப்பட்டது.

## 35. யோசிக்க வைத்தவை

வணக்கம். என்னுடைய பெயர் திருமதி.சுமதி. வயது 29. என்னுடைய கணவர் பெயர் திரு. குமார். நாங்கள் திருப்பூர் மாவட்டம், நெட்டூர் என்ற கிராமத்தில் வசித்து வந்தோம்.எங்களுக்கு திருமணமாகி 8 மாதங்கள் ஆன நிலையில் நான் கர்ப்பம் தரித்தேன். என்னுடைய கடைசி மாத விலக்கான நாள் 18.02.2024. எனக்கு நீண்ட நாட்களாக தைராய்டு பிரச்சனை உள்ளதால் எல்ட்ராக்ஸின் மாத்திரை எடுத்து வந்தேன். 9 வாரங்களில் என்னுடைய கர்ப்பத்தை துணை சுகாதார நிலையத்தில் பதிவு செய்தேன். இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக் கொண்டேன். நான் தாய்மையடைந்ததை நினைத்து என் மனது குதூகளித்தது.

கிராமசுகாதார செவிலியரின் அறிவுரைப்படி, ஆரம்ப சுகாதார நிலையத்தில் எனது கர்ப்ப கால பரிசோதனைகளை மேற்கொண்டேன். மருத்துவர் ஸ்கேன் செய்து பார்த்து 8 வார கரு என்னுடைய வயிற்றில் வளர்ந்துள்ளது என்று கூறும் போது நானும் என் கணவரும் அளவிலா மகிழ்ச்சி அடைந்தோம். பிறவி குறைபாடு கண்டறியும் ஸ்கேன் 19 வது வாரத்தில் செய்து பார்த்ததில் எவ்வித குறைபாடும் இல்லை என்று தெரிந்த பின்பு தான் என் மனம் நிம்மதி அடைந்தது.

அஞ்சுகநகர் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில்,20 வது வாரத்தில் 06.07.2023 அன்று இரத்த பரிசோதனை மேற்கொள்ளும்போது இரத்தத்தின் அளவு குறைவாக உள்ளது என்றும் இரத்த ஊசி போட வேண்டும் என்று மருத்துவர் கூறினார். குழந்தையின் நலனை கருத்தில் கொண்டு 6 தவணைகளாக இரத்த ஊசி போட்டுக்கொண்டேன். சுமார் 6 மாத காலங்கள் என்னுடைய கர்ப்ப கால பரிசோதனைகளை அஞ்சுக நகர் நகர்ப்புற ஆரம்பசுகாதார நிலையத்தில் மேற்கொண்டேன்.

ஆரம்ப சுகாதார நிலையத்தில் மீண்டும் எனது கர்ப்ப கால பரிசோதனைகளை மேற்கொள்ள துவங்கினேன். 06.10.2023 அன்று இரத்த பரிசோதனை மேற்கொள்ளும்போது இரத்தத்தின் அளவு 10.7 வரை அதிகரித்திருந்தது. ஸ்கேன் செய்து பார்த்ததில் குழந்தை வளர்ச்சி 36 வார காலவளர்ச்சி அடைந்துள்ளது என்றும் குழந்தையின் தலை திரும்பி உள்ளது மற்றும் உதயமாகும் பாகத்தில் புட்டப் பகுதி ,உள்ளது என்றும் மருத்துவர் கூறினார். இரண்டு வாரங்கள் கழித்து திரும்பவும் ஸ்கேன் செய்து பார்ப்போம். அதிலும் உதயமாகும் பாகத்தில் புட்டப் பகுதி உள்ளது என்று உறுதி செய்தால் மேற்பரிந்துரை செய்வோம் என்று மருத்துவர் கூறும் போது எனக்குள் பயம் அதிகரித்தது. என்னுடைய குழந்தை எவ்வித சிக்கலும் இன்றி பிறக்க வேண்டும் என்ற எண்ணத்திலேயே 2 வாரங்களை கழித்தேன் .

ஆவுடையான்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில், 14.11.2023 அன்று மருத்துவர் ஸ்கேன் செய்து பார்த்து உதயமாகும் பாகத்தில் புட்டப் பகுதி உள்ளது என்று திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு செல்லும்படி பரிந்துரைத்தனர். நான் அங்கு செல்லாமல் மீண்டும் ஆவுடையான்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்க்கே சென்றேன். அங்கிருந்து என்னை அரசு மருத்துவமனைக்கு மேற்பரிந்துரை செய்தனர். அரசு மருத்துவமனையில் இரத்தம் மற்றும் இசிஜி

பரிசோதனைகள் செய்துவிட்டு மயக்கவியல் மருத்துவரைப் பார்ப்பதற்கு மறுநாள் வருமாறு கூறி அனுப்பினார்கள். ஆனால் நான் 22.11.23 அன்று அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கும் அவர்கள் 25.11.2023 வரை காத்திருக்கும் படியும் 26.11.23 அன்று வரும்படியும் அறிவுறுத்தினார்கள்.

என்னுடைய எதிர்பார்க்கப்படும் பிரசவ நாள் 25.11.2023. ஆனால், அவர்கள் என்னை 26.11.23 அன்று வரும்படி கூறினார்கள். மறுநாள் பிரசவ வலி ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன். அவசர நிலையில் செய்யப்படும் அறுவை சிகிச்சை மூலம் எனக்கு அழகான ஆண் குழந்தை பிறந்தது.

கருவுற்றதில் இருந்து குழந்தையை பெற்றெடுக்கும் வரை ஒவ்வொரு நாளும் என்னுடைய குழந்தையை எப்படியெல்லாம் வளர்க்க வேண்டும், என்ன பெயர் வைக்கலாம் என்னென்ன குழந்தைக்கு தேவை, என்று பார்த்து பார்த்து கட்டிய கனவு கோட்டை எல்லாம் குழந்தையை பார்த்த சில மணி நேரத்திற்குள்ளே சிதைந்து விட்டது. என்னுடைய முக்கிய உயிர் ஆதாரங்களில் மாற்றங்கள் ஏற்பட தொடங்கியது. உயிர் காக்கும் மருந்துகள் அனைத்தும் வழங்கி 2 மணி நேரம் தீவிர கண்காணிப்பில் வைத்தும் என்னுடைய முக்கிய உயிர் ஆதாரங்களில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. அதனால், மறுநாள் 27.07.24 அன்று என்னை அருகில் உள்ள அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரைத்தனர். அப்போது நான் சுய நினைவுடன் தான் இருந்தேன்.

எனக்கு இரத்த அழுத்தம் குறைவாக இருப்பதாகவும், அதற்கான மருந்துகள் அளிக்கப்படுவதாகவும் அறிந்தேன். நேரம் செல்ல செல்ல எனக்கு மூச்சு திணறல் ஏற்பட்டது. மருத்துவர்கள் எனக்கு செயற்கை சுவாசம் அளித்தார்கள். இந்நிலையில், 29.11.2023 அன்று மதியம் சுமார் இரண்டு மணியளவில் எனது மூக்கிலிருந்து இரத்தம் கசியத் தொடங்கியது. அதனால் எனக்கு இரத்த அணுக்களை சிரை வழியாக செலுத்தினார்கள். இத்தகைய சிகிச்சைகளை செய்த போதிலும் மதியம் சுமார் 3.45 மணியளவில் எனது இதயம் செயல்பாட்டை நிறுத்திக்கொண்டது.

உயிர் காக்கும் செயல் முறைகள் செய்யப்பட்டும் எனது இதயத் துடிப்பை மீட்டுக் கொண்டு வர முடியவில்லை. பின்னர் 29.07.2023 மாலை 4.15 மணியளவில் என்னுடைய குழந்தையை விட்டும், என் கணவர் நான் இல்லாமல் எப்படி இருப்பார்? என்றும் என் பெற்றோர்கள் மற்றும் என்னுடைய உறவினர்கள் என்னுடைய குழந்தையை நல்ல படியாக வளர்ப்பார்களா? தாயில்லாமல் எப்படி என்னுடைய குழந்தை வளர போகின்றது? என்கின்ற ஏக்கத்தோடு என்னுடைய உயிர் மாலை 4.15 மணியளவில் இவ்வுலகை விட்டு பிரிந்தது .

என் உடலை விட்டு என் உயிர் பிரிந்தாலும் இன்றளவும் நான் என் குழந்தையையும், குடும்பத்தையும் சுற்றியே இருக்கிறேன். "உணவின் அருமை பசியில் தான் தெரியும்" என்பதைப்போல இறப்பிற்கு பின்னரே நான் என் குடும்பத்திற்கு எந்த அளவிற்கு தேவை படுகிறேன் என்பதை உணர்கிறேன். என் கர்ப்ப கால நிகழ்வுகளை பின்னோக்கி பார்க்கையில் சில விசயங்கள் எனக்கு புரிகின்றன.

இதில் என்னுடைய தவறு என்று பார்க்கும்பொழுது, ஆரம்ப சுகாதார நிலையத்தில் பரிந்துரை செய்தபோதே நான் அரசு மருத்துவமனைக்கு சென்று, இங்கு தான் என் பிரசவம் என்பதை தீர்மானித்து, நிதானமாக செயல்பட்டிருக்க வேண்டும். ஆனால் நானோ, கர்ப்ப கால இறுதி வரை ஆலோசனைகளை உதாசீனப்படுத்தி எனது விருப்பத்தின்படியே ஆரம்ப சுகாதார நிலையங்களிலேயே என் நேரத்தை செலவிட்டு விட்டேன். அதனால் தான் கடைசி நிமிடத்தில் பரிந்துரையின் பேரில் நான் மேல் சிகிச்சைக்கு அனுப்பும் படி ஆகி விட்டது .

## 36. கனவே!! நனவே!!

என் பெயர் திருமதி. உமா 35 வயது, நான் திரு. மகேஸ்வரன் என்பவரை திருமணம் செய்து கொண்டு மெதூர் கிராமத்தில் வசித்து வந்தேன். நான் மூன்றாவது முறையாக கர்ப்பம் தரித்திருக்கிறேன் முதல் இரண்டு முறை கருக்கலைப்பு ஏற்பட்டது. முதல் முறை கருக்குழாயில் கரு நின்றதால் கருக்கலைப்பு செய்தனர். இரண்டாவது முறை கரு வளர்ச்சி அடையாமல் இருந்ததால் கருக்கலைப்பு செய்யப்பட்டது. இது எனது மூன்றாவது கர்ப்பம்.எனக்கு இரண்டு முறையும் செயற்கை முறையில் கருத்தரிப்பு தனியார் மருத்துவமனையில் செய்யப்பட்டதால் இந்த குழந்தையும் செயற்கை முறை கருத்தரிப்பு தனியார் மருத்துவமனையில் செய்யப்பட்டு கர்ப்பம் அங்கேயே உறுதி செய்யப்பட்டது.

அதன் பிறகு நான் இந்த கர்ப்பத்தினை மெதுர் துணை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் 10.04.23 அன்றுபதிவு செய்தேன். என்னுடைய கடைசி மாதவிடாய் நாள் 2.2.23என்பதால் எதிர்பார்க்கப்படும் பிரசவ தேதி9 .11 .23என்று கணக்கிட்டு கிராம சுகாதார செவிலியர் தெரிவித்தார்.

நான் மெதூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை ஒருமுறை பார்வையிட்டுள்ளேன். துணை சுகாதார நிலையத்திற்கு மூன்று முறை பரிசோதனைக்கு சென்றுள்ளேன். நான் தனியார் மருத்துவமனையில் செயற்கை முறையில் கருத்தரித்தல் சிகிச்சை செய்யும் போதே எனக்கு உயர் ரத்த அழுத்தம், தைராய்டு பிரச்சனை மற்றும் வயது முதிர்ந்த கர்ப்பம் என்று மருத்துவர் தெரிவித்தார்.

எனவே மருத்துவர் பரிந்துரைத்த அனைத்து மாத்திரைகளையும் தவறாமல் எடுத்துக் கொண்டேன். எனவே நான் அதிகப்படியாக தனியார் மருத்துவமனையில் பரிசோதனை மேற்கொண்டேன். என்னுடைய பத்தாவது வார கர்ப்பத்தில் மெதுர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் எனக்கு முதல் கர்ப்ப கால பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது. மேலும் 30 நாட்களுக்கு போலிக் அமில மாத்திரைகள் வழங்கப்பட்டது.

12வது வாரம் முடிவில் துணை சுகாதார நிலையத்தில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு குடற்புழு நீக்க மாத்திரை ஒன்றும் இரும்பு சத்து மற்றும் போலிக் அமில மாத்திரை மற்றும் கால்சியம் சத்து மாத்திரை வழங்கினார்கள்.

எனக்கு இரண்டு முறை கருக்கலைப்பு நடந்ததால் மூன்றாவது முறை என்னுடைய குழந்தை நன்றாக வளர வேண்டும் என்று அனைத்து மாத்திரைகளையும் மருத்துவர் சொன்ன அறிவுரையின் படி உட்கொண்டேன். தனியார் மருத்துவமனையில் ஸ்கேன் செய்ததில் குழந்தையின் வளர்ச்சி சரியாக உள்ளதாக மருத்துவர் தெரிவித்தார். மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்.

எனக்கு 19.06.24 அன்று வாந்தி பிரச்சனை அதிகமாக இருந்ததால் தனியார் மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றேன். சிகிச்சை முடிந்து 21.06.24 அன்று மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு அழைத்துச் சென்றார்கள். ஆனால் மறுபடியும் எனக்கு தொடர்ந்து வாந்தி

பிரச்சனை இருந்ததால் 27.06.23 அன்று மறுபடியும் மற்றுமொரு தனியார் மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு இரத்தப் பரிசோதனை செய்யப்பட்டது. மருத்துவமனையில் நரம்பு வழியாக குளுக்கோஸ் மற்றும் ஆண்டிபயாட்டிக் மருந்துகள் கொடுத்து சிகிச்சை வழங்கினர். வயிறு மற்றும் கல்லீரல் மருத்துவரின் ஆலோசனையும் வழங்கினர். அதில் கல்லீரல் மிகவும் பழுதடைந்துள்ளதாக கூறினார்கள். அப்போது எனக்கு இரத்தம் செலுத்தினர். 29.06.24 அன்று இரவு 9:45 மணிக்கு எனக்கு மிகவும் உடல் நிலை மோசமாக இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

எனவே அன்று இரவே என்னை தனியார் மருத்துவமனையில் இருந்து அரசு மருத்துவமனை எக்மோருக்கு அனுப்பினார்கள். எக்மோர் மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு இரத்தப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. மருத்துவமனையில் அனுமதிக்கும் போது எனக்கு சுயநினைவு இல்லாமலும் மூச்சு திணறல் பிரச்சனையும் மிகவும் படபடப்பாகவும் இரத்த சோகையும் இருந்தது.

எனக்கு செயற்கை சுவாசம் அளிக்கப்பட்டு இரத்தமும் ஏற்றப்பட்டது. இந்த சிகிச்சை அளிக்கப்படும் போதே பத்து மணி நேரத்துக்கு மேலாக எனக்கு சிறுநீர் வரவில்லை. அதனால் என்னை அன்று இரவே 1:10 மணி அளவில் ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனைக்கு மாற்றினார்கள். அங்கு சிறுநீரகவியல் மருத்துவரின் ஆலோசனை பெறப்பட்டது. மற்றும் வயிற்றில் துளை போடப்பட்டு டயாலிசிஸ் செய்தனர். இருப்பினும் எனக்கு சிறுநீர் வரவில்லை.

இருப்பினும் 1.7.23 அன்று இரவு 8:40 மணிக்கு எனக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டு என் இன்னுயிர் பிரிந்து இறைவனடி சேர்ந்தேன்.எனக்கு இந்த முறையாவது குழந்தை பிறக்கும் என்ற கனவுடனும் மிகுந்த ஆசையுடனும் இருந்தேன். ஆனால் எதிர்பாராத மரணம் எனக்கு வரும் என்று நினைக்கவில்லை. என்னுடைய நிலைமை யாருக்கும் வரக்கூடாது இறைவா... ஏன் இந்த கோபம் என்மீது ... எனினும் என் கணவர் மற்றும் குடும்பத்தை பாதுகாப்பாய் என்ற நம்பிக்கையில் இம்மண்ணுலகில் இருந்து விண்ணுலகிற்கு விடைபெறுகிறேன்.

நான் இழந்தது ...

என் உயிர் மட்டுமல்ல

என் எதிர்காலம், என் கணவரின் எதிர்காலம்

என் குடும்பத்தின் சந்தோஷம்

நான் இறந்தும் வேதனை அடைகிறேன்.

*ஒரு பெண் குழந்தை பெற்றால் தான் முழுமையடைகிறாள். இந்த வார்த்தை என் வாழ்வில் பொய்யாகி விட்டது.ஆயிரம் கனவுகளுடன் உங்கள் நினைவில் மட்டும் நான்....

தரமான முறையில் மக்களுக்கு வழங்கப்படும் சுகாதார சேவைகளை ஏற்போம்! பங்களிப்போம்! பயனடைவோம்! பயனடைவோம்!

## 37. **பிரசவம் – மறுபிறவி!!**

என்னுடைய பெயர் திருமதி.தமிழ்செல்வி, வயது 32, என்னுடைய கணவர் பெயர் அழகிரி, தெற்குதெரு, கொட்டைமேடு பகுதியை சார்ந்தவர்.

எனக்கு திருமணமாகி ஒரு வருடம் ஆகிறது. என்னுடைய கடைசி மாத விலக்கான தேதி 10.04.2023. நானும் மற்ற பெண்களை போல் தாய்மை என்னும் அத்தியாயத்திற்கு செல்கிறோம் என்று மகிழ்ச்சி அடைந்தேன். உடனே என்னுடைய பகுதியின் கிராம சுகாதார செவிலியரிடம் கூறிஎன்னுடையகர்ப்பத்தை 7வது வாரத்தில் பதிவு செய்தேன்.

என்னுடைய கிராம சுகாதார செவிலியர் என்னுடைய உயரம், எடை, இரத்த அழுத்தம் ஆகியவற்றை அளந்து பதிவு செய்து பின்னர் என்னிடம் 30 போலிக் அமில மாத்திரை கொடுத்து தினமும் ஒரு மாத்திரை சாப்பிடும்போது கூறி அனுப்பிவைத்தார். மேலும், 17.01.2024–க்கு ஒருவாரம் முன்னே (அ) பின்னே குழந்தை பிறக்கலாம் என்றும் கூறினார். அடுத்த நாள் என்னை ஆரம்ப சுகாதார நிலையம் வருமாறு கூறினார். அங்கும் என்னுடைய BP (90/60) எடை 45 Kg Hb 10.5g. இரத்த பரிசோதனை, சிறுநீர் பரிசோதனை இரத்தச் சர்க்கரைஅளவு, மஞ்சள்காமாலை, பால்வினை நோய் மற்றும் HIV தொற்று பரிசோதனை செய்து எல்லாம் நார்மல் ஆக உள்ளது என்று கூறினார். எனக்கு இரணஜன்னி ஊசியும் போடப்பட்டது.

இரத்த பரிசோதனை செய்ததில் Negative பிரிவு இரத்த வகையை சார்ந்தவள் என்று கண்டுபிடிக்கப்பட்டது,

என்னுடைய வயது 32 மற்றும் A–Ve இரத்தவகையை பார்த்து என்னை சிக்கலுள்ள கர்பிணித்தாய் என்று என்மீது சிறப்பு கவனம் செலுத்தினார்கள். மேலும், செவிலியர் என்னிடம் உன்னுடைய உறவினர்கள் யாரேனும் A–ve பிரிவை சார்ந்தவர்கள் இருந்ததால் அவர்களின் முகவரி மற்றும் கைபேசி எண்ணை வாங்கி கொடுக்குமாறும் அந்த தகவலை கண்காணிப்பு அட்டையில் குறிக்க கொடுக்குமாறும் கூறினார்.

9–வது வாரத்தில் எனக்கு சிறு உதிரப்போக்கு ஏற்பட்டதால் நான் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்றேன். அங்கு என்னை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தார்கள். அப்போது என்னுடைய BP (110/70) நாடித்துடிப்பு 90/mt.இருந்தது. அப்புறம், நான் வீட்டிற்கு வந்துவிட்டேன் என்னுடைய

13வது வாரத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்தில் எனக்கு B.P80/50. weight 45Kg, Hb10.2gms சிறுநீரில் புரதம், சர்க்கரை மற்றும் ஸ்கேன் பரிசோதனை செய்யப்பட்டது. எல்லாம் நன்றாக இருப்பதாக கூறினார்கள்.

என்னுடைய குழந்தையின் இதய துடிப்பு அந்த ஒலியை நான் காதில் கேட்டபோது நான் அடைந்த சந்தோஷத்திற்கு அளவே கிடையாது.

19வது வாரத்தில் எடை 49 கிலோ, 90/60, ஆக இருந்தது. அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஸ்கேன் பரிசோதனை செய்யப்பட்டு குழந்தை நன்றாக உள்ளது என்ற தகவல் எனக்கு அளிக்கப்பட்டது.

24, 28, மற்றும் 29 – வது வாரத்தில் எனக்கு B.P, எடை, Hb, இரத்த சர்க்கரை அளவு பரிசோதனை GCT 96mg ஆகவும் , அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் B.P100/70. weight 49Kg, Hb9.9gms , 28வது வாரத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் B.P90/60. weight 50Kg, Hb9.1gms, 29 வது வாரத்தில் துணை சுகாதார நிலையத்தில் B.P90/60. weight 50Kg, Hb9.1gms, ஆக இருந்தது. இரும்புசத்து ஊசி 4 போடப்பட்டது.

31 வது வாரத்தில் திரும்பவும் HB பரிசோதனை செய்து 9.9 இருந்ததால் 2 top up ஊசி போடப்பட்டது. 38 வது வாரம் 09.01.2024 அன்று என்னுடைய regular check upக்கு அரசு ஆரம்ப சுகாதார நிலையம் சென்றபோது எனக்கு பிரசவ ஆரம்ப நிலை ஆரம்பித்துவிட்டதால் என்னை பகல் 12 மணிக்கு ஆரம்ப சுகாதார நிலையத்தில் அனுமதித்தார்கள். அப்போது என்னுடைய BP 110/70. நாடித்துடிப்பு. கர்ப்பபைவாய் 1–2cm விரிவானது. எனக்கு மிதமான கருப்பை சுருக்கம் ஏற்பட்டது. என்னுடைய Hb 11.1gms, இரவு 11.30 மணிக்கு எனக்கு அதிபிரசவ வலிஏற்பட்டது. பின்னர், 10.01.2024 இரவு 3.30 மணிக்கு எனக்கு அழகான பெண் குழந்தை 3.5kg சுகப்பிரசவத்தில் பிறந்தது. அதிக உதிரப்போக்கு ஏற்பட்டது. அப்புறம் காலை 7.47 மணிக்கு எனக்கு திடீரென மூச்சுத்திணறல் ஏற்பட்டது.

என்னை மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்து அனுப்பி வைத்தார்கள், செல்லும் வழியிலேயே இறந்து விட்டேன். என் இறப்பின் மூலம் நான் சொல்லும் செய்தி என்னவென்றால் நான் வயது அதிகமான முதல் கர்ப்பம் மற்றும் Rh–ve வகை இரத்தம் கொண்ட சிக்கலுள்ள கர்ப்பிணியாகிய நான் என்னுடைய பிரசவம் மருத்துவகல்லூரி மருத்துவமனையில் நடைபெற்று இருக்க வேண்டும். அதை வட்டார மருத்துவ நிலையத்தில் பிரசவம் பார்த்து இருக்ககூடாது.

குழந்தை 3.5kg எடையுடன் பிறந்ததால் குழந்தையை கவனித்தவர்கள் என்னுடைய முக்கிய ஆதாரங்கள் அளவிடவில்லை.

இந்த வருடம் பொங்கலை என்னுடைய குழந்தை மற்றும் குடும்பத்துடன் சந்தோஷமாக கொண்டாட இருந்த நிலையில் நான் என் குழந்தையை விட்டு சென்றுவிட்டேன்.

நான் மருத்துவர்களின் ஆலோசனைபடி சரியான இடத்தை பிரசவத்திற்காக தேர்வு செய்யாததால் நான் இன்று என்னுடைய குழந்தையுடன் இல்லை.

## 38. நெருங்க மறுத்த காற்று

என்னுடைய பெயர் மேகலை, எனக்கு 24 வயசு ஆகுது. ஒரு வருஷத்துக்கு முன்னாடிதான் எனக்கு கல்யாணம் ஆச்சு. 2023 ஜூன் 6-ம் தேதி எனக்கு நாள் தள்ளிப்போச்சுன்னு சொல்லி நர்சக்கா சொன்னப்போ அரசு ஆரம்ப சுகாதார நிலையம் வரசொன்னாங்க. அங்க என்னோட முதல் கர்ப்பத்தை உறுதி பண்ணி, கர்ப்பப்பதிவும் பண்ணினேன். 8 வாரம் கர்ப்பமா இருக்கிறேன்னு தெரிஞ்சது. அதற்குப்பிறகு சரியான நேரத்தில் முறையா அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் ராவ் தனியார் மருத்துவமனையிலும் கர்ப்பகால பரிசோதனை செய்துகொண்டேன்.

கர்ப்பகால ரணஜன்னி தடுப்பூசி இரண்டு தவணைகளும், அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் போட்டுக்கொண்டேன். மொத்தம் 7 முறை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் கர்ப்பகால பரிசோதனை செய்துகொண்டேன். கர்ப்பகாலத்தில், இரண்டு முறை ஸ்கேன் செஞ்சோம். எல்லாமே நார்மலா இருக்கு, குழந்தையும் நல்லா இருக்குன்னு, டாக்டர் சொன்னாங்க.

2023 டிசம்பர் 31 ஆம் தேதி எனக்கு பிரசவ வலிவந்துருச்சு. எனக்கு பனிக்குடம் உடைஞ்சு 4 மணிநேரம் கழிச்சுதான் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு போனேன். டிசம்பர் 31 அதிகாலை 2.45 மணிக்கு ஆஸ்பத்திரிக்கு போனோம். டாக்டர் பரிசோதனை பண்ணிட்டு அதிகாலை 4:45 மணிக்கு 108 ஆம்புலன்ஸ் மூலமாக என்னை சேலம் மோகன் குமார மங்கலம் (பெரியாஸ்பத்திரிக்கு) மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை பண்ணினாங்க. 108 ஆம்புலன்ஸில் எனக்கு துணையா ஆஸ்பத்திரில இருந்து ஸ்டாப் நர்ஸ் வந்தாங்க.

காலைல 6:20 மணிக்கு சேலம் பெரியாஸ்பத்திரி வந்து சேர்ந்தோம். அப்போ டாக்டருங்க பரிசோதனை பண்ணிட்டு எல்லாமே நார்மலாதான் இருக்கு. ஆனால், குழந்தையோட தலை பொருந்தல அதனால ஆபரேஷன்தான் பண்ணனும்னு சொல்லிட்டாங்க. உடனடியாக என்னை ஆப்ரேஷன் தியேட்டருக்கு கூட்டிட்டு போனாங்க. அரை மணிநேரத்துல அதாவது 6.50 மணிக்கு 2.68 கிலோ கிராம் எடையுள்ள பெண் குழந்தை பிறந்தது. முதல் நாள் நானும் என்னுடைய குழந்தையும் நல்லா ஆரோக்கியமா இருந்தோம்.

அடுத்த நாள் அதாவது ஜனவரி 1 2024 அன்னைக்கு எனக்கு 2 முறைகாய்ச்சலும் 3 முறைவயிற்றுப் போக்கும், ஏற்பட்டது. எனக்கு டாக்டருங்க காய்ச்சல் மருந்தும் நரம்பு வழியாக குளுக்கோசும் போட்டாங்க. அப்புறம் எனக்கு கொஞ்சம் கொஞ்சமா BP குறைய ஆரம்பிச்சது. அதுக்கு எனக்குசிகிச்சை கொடுத்தாங்க. அப்புறம் எனக்கு மூச்சு விடுறதுல ரொம்ப சிரமம் ஏற்பட்டதால, செயற்கை சுவாசம் கொடுத்தாங்க. அதுக்கப்புறம் நிறைய ஸ்பெஷல் டாக்டர்ங்க வந்து பரிசோதனை பண்ணி எனக்கு நிறைய சிகிச்சை கொடுத்தாங்க.

அப்பதான் எனக்கு ரத்தப்பரிசோதனைல லெப்டோஸ்பைரோசிஸ் மற்றும் கேண்டிடா அப்படிங்கிற நோய் தொற்றும், சிசு தாரையில க்ளப்ஸியெல்லான்ற நோய்தொற்றும் இருக்கிறது தெரியவந்தது.

மார்பக CT எடுத்தப்போ நிமோனியாவும் இருந்ததுன்னு கண்டுபிடிச்சாங்க.

அடுத்த நாள்2.1.2024 அன்று என்னுடைய நிலைமை கொஞ்சம் கொஞ்சமா மோசமடைஞ்சிட்டே வந்தது. கடைசியில, 2.1.24 அன்று இரவு 9 மணிக்கு மாரடைப்பு ஏற்பட்டு என் உயிர்போயிடுச்சு.

## 39. பாரம் சுமக்கும் மனசு

மோகனா 25 வயது கணவர் பெயர் முருகன், திருமணம் ஆகி 3 மாதங்கள் ஆன நிலையில் அரசு மருத்துவமனைக்குச் சென்று சிறுநீர் பரிசோதனையின் மூலம் கர்ப்பமாக இருப்பதை உறுதி செய்துகொண்டார்.

திடீர்ரென வீட்டில் இரத்த வாந்தி எடுத்ததால் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு கொடுக்கப்பட்ட சிகிச்சையில் கர்ப்பிணியின் உடல்நிலை சீராகாததாலும், கர்ப்பிணிக்கு செயற்கைசுவாசம் தேவைப்பட்டதாலும், அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு 11.11.2023 அன்று மாலை 5.17 மணிக்கு பரித்துரைக்கப்பட்டார்.

அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு கர்ப்பிணி அனுமதிக்கப்பட்டபோது, அவரின் உடல்நிலை BP-60/9, Purse 160, Resp 56lmt, Spo2 707-on RA. 82% with 8lit O2 Scan - முத்துப்பிள்ளை கர்ப்பம். என்பதும் அறியப்பட்டது. அங்கு பொது மருத்துவர் மற்றும் மயக்க மருத்துவர் கருத்து கேட்கப்பட்டு

கர்ப்பிணிக்கு தீவிர சுவாச சிகிச்சை பிரிவில் கவனிப்பு தேவைப்பட்டதால் மதுரை மருத்துகல்லூரிக்கு மீண்டும் பரிந்துரைக்கப்பட்டன,

மதுரை மருத்துவகல்லூரி மருத்துவமனையில் 11.11.23 அன்று மாலை 7.10 மணியளவில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு அவரின் நிலை உறவினர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. மயக்கமருத்துவ குழுவின் மூலம் செயற்கை சுவாசம் அளிக்கப்பட்டது.

கதிரியக்க நிபுணர் மூலம் வயிறு ஸ்கேன் எடுக்கப்பட்டதில் முத்துப்பிள்ளை கர்ப்பம் என்பதும் தெரிவிக்கப்பட்டது.

கர்ப்பிணி இரவு 10.30 மணிக்கு தீவிர இருதய சிகிச்சைப் பிரிவிக்கு மாற்றப்பட்டார். அங்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது.

13/11/23 அன்று கர்ப்பிணிக்கு இரத்தபோக்கு ஏற்பட்டதால், முழுமயக்கம் கொடுக்கப்பட்டு, உறிஞ்சி வெளியேற்றம் (suction evacuations) மூலம் முத்துப்பிள்ளை வெளியேற்றப்பட்டது.

மீண்டும் கர்ப்பிணி தீவிர சுவாச சிகிச்சை பிரிவிற்கு மாற்றப்பட்டார். அங்கு செய்கை சுவாசம் மூலம் சுவாசம் கொடுக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டது.

15.11.23 அன்று காலை 5 மணியளவில் திடீரென மாரடைப்பு ஏற்பட்டு சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டேன்.

## 40. இரத்தத்துடன் ஒரு யுத்தம்

28 வயது இளம் மங்கை நான் இரண்டாம் முறை இனிதே கர்ப்ப மானேன் கர்ப்பகால நிகழ்வுகள் எதுவுமே தெரியாத சிறு பிள்ளையாய் நானும் வளர்ந்தேன் நானும் இருந்தேன் என் கருவோடு சேர்ந்து நானும் சிறு பிள்ளையாய் வளம் வந்தேன் கடைசி மாதவிலக்கான தேதி கூட தெரியாத சிறு பிள்ளையாய் நான் இருந்தேன் மழைக்காக கூட மருத்துவமனை பக்கம் ஒதுங்காத நான் ஒரு அழகான பெண் குழந்தையை ஈன்றெடுத்தேன்.

பிரசவத்திற்கு பின் அங்கன்வாடி ஆசிரியரின் உதவியோடு மருத்துவக் கல்லூரி மருத்துவரின் அறிவுரையின் பேரில் மருத்துவக் கல்லூரிக்கு அனுப்பி வைக்கப்பட்டேன். குறைந்த ரத்த அளவிற்காக குருதியேற்றப்பட்டது. அந்த புதிய ரத்தத்தோடு நான்கு நாட்கள் ஒரு யுத்தமே நடந்தது சத்தம் இன்றி என் ஆவி கூடு பிரிய ஆயத்தமானது. ரத்தம் பற்றி மட்டுமல்ல பிரசவம் பற்றியும் மொத்தமா எனக்கு எந்த சித்த தெளிவும் இல்லை.

என்னை சித்த தெளிவின்றி படைத்தது பிரம்மனின் பிழையா! கர்ப்ப காலம் பற்றி என்னை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லாமல் இருந்தது, என் அம்மாவின் அபத்தமும் இல்லையா! சிரத்தை மேற்கொண்டு என்னை கண்டுபிடிக்காத செவிலியரின் பிழையா! என் பிள்ளையை சுமக்க பொருத்தமில்லா தாய் ஆனேனோ! ஒவ்வாமை மென்மையாய் தாக்காமல் என்னை வன்மையாய் தாக்கியதோ! செழுமை நிறைந்த எனக்கும் தோழமை நிறைந்த என் கணவனுக்கும் மிஞ்சியது வெறுமையும் தனிமையும் மட்டுமே.

## 41. காசநோய் எனும் காலன்

31 வயதில் திருமணமான முதிர் மங்கை நாம் வி ஆர் ஐ நிர்ணயம் ஆகாமலேயே உதயம் ஆனேனே! நான் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் அதற்காய் அறுவை சிகிச்சையும் செய்து கொண்டேன் இதயத்தின் கேடயமாய் இருபுறமும் இருந்த நுரையீரலுக்கு டிபி ஏனோ விஜயம் செய்தது இருமல் தானே என நான் உதாசீனமாக இருந்துவிட்டேன்.

திருப்பி பரிசோதனை செய்து கொள்ளாமல் ஒழுங்கீனமாய் இருந்தேன். டிபி பரிசோதனை தாமதமாய் செய்தேன், எத்தனையோ முறை நயமாய் பேசி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

ஒரு நாள் இரவில் திடீர் மூச்சுத் திணறல் ஏற்பட அருகில் உள்ள சீமாங் சென்டருக்கு சென்றேன் எந்த நவீன கருவிகளாலும் என் சுகவீனத்தை சரி செய்ய முடியவில்லை டிபி பற்றி சரியான ஞானம் இல்லாததால் இன்று வானம் நோக்கி எனது பயணம்.

## 42. பேராசை – பெரும் நஷ்டம்

குழந்தையை ஈன்றெடுக்கப் போகிறோம் என்ற கனவோடு கர்ப்ப நாட்களைக் மகிழ்ச்சியாகவும் உற்சாகமாகவும் நகர்த்தினேன். சிறுவயது முதலே நீரிழிவு நோய் இருப்பதால், அதற்கான மருந்துகளைத் தொடர்ந்து எடுத்து வந்தேன்.

எனக்கு ஏற்பட்டது நீங்கள் நினைப்பதைப் போல தவறான உணவியல் மற்றும் வாழ்வியல் மாற்றங்களால் உண்டாகும் டைப் – 2 நீரிழிவு நோய் கிடையாது. சிறுவயதிலேயே ஏற்படக்கூடிய டைப் – 1 ரக நீரிழிவு!

கர்ப்பம் அடைந்த பிறகு, தொடர்ந்து மருத்துவர்களின் கண்காணிப்போடு மாதங்கள் நகர்ந்தன! இரத்தச் சர்கரை அளவைக் கட்டுக்குள் வைக்க இன்சுலின் மருந்து செலுத்தி கூடுதல் கவனிப்புடன் இருந்தேன். சர்க்கரை அளவு கூடுவதும் குறைவதுமாக இருந்தது. சில நேரங்களில் மயக்கம் ஏற்படுவதும், மருத்துவமனைக்கு செல்வதுமென நாட்கள் ஓடின!

ஒரு நாள் நள்ளிரவு சுமார் இரண்டு மணிக்கு மயக்கமடைந்தேன். மூளையில் இலேசான பாதிப்புகள் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டது. தொடர்ந்து மருந்துவமனையில் கண்காணிக்கப்பட்டேன். இரத்தச் சர்க்கரை அளவு மற்றும் குருதி அழுத்தத்தைக் கட்டுக்குள் வைக்க மருந்துகள் உட்செலுத்தப்பட்டன!

திடீரென இதய செயலிழப்பு காரணாமாக என்னால் இனி மீள முடியாது என்பது உறுதி செய்யப்பட்டது. நீரிழிவு நோயால் ஏற்பட்ட தாக்கத்தால் சிறுநீரகத்தில் ஏற்பட்ட பாதிப்பு எனது மரணத்துக்கான காரணம் என்பது தெரிவிக்கப்பட்டது!

உங்கள் அனைவருக்குமான அறிவுரை என்னவென்றால்... கர்ப்ப காலத்துக்கு முன்பிருந்தே உங்கள் உடல் மீது அக்கறை கொள்ளுங்கள். உடலில் ஏதாவது சிக்கல் இருப்பின் உடனடியாக மருத்துவரின் ஆலோசனையோடு சிகிச்சை மேற்கொள்ளுங்கள். மருந்துகளை எடுத்துக்கொண்டால் மட்டும் போதாது.

நீங்கள் எடுக்கும் மருந்துகளால் பயன் இருக்கிறதா... எடுத்துக்காட்டுக்கு நீரிழிவு நோய்க்கு நீங்கள் எடுக்கும் மருந்துகளால் இரத்தச் சர்க்கரை அளவு இயல்பாக இருக்கிறதா, என்பதைத் தொடர்ந்து கவனித்து மருத்துவரின் ஆலோனையை எடுத்துக்கொள்ளுங்கள்.

சில நேரங்களில் நம்மையும் மீறி பல விஷயங்கள் நடந்து விடுகின்றன. ஆனால் நம்மால் கட்டுப்படுத்தக்கூடிய செயல்களை நாம் கட்டுப்படுத்தியே ஆக வேண்டும். சில உடல் சார்ந்த பிரச்சனைகள் இருக்கும் போது, மருத்துவரின் கூடுதல் கண்காணிப்புக்கு கீழ் நம்மை வைத்துக்கொண்டால் பல சிக்கல்களில் இருந்து நாம் தப்பித்துக்கொள்ளலாம்.

## 43. ஒரு தாயின் துக்கம்

27 வயதில், இரண்டு மாத கர்ப்ப காலத்தில் இறந்து போன, விமலா என்பவரின் தாயார், பேசுகிறேன்.என் மகளுக்கு மூன்று மாதங்களுக்கு முன்பு, லாரன்ஸ் என்பவருடன் திருமணம் நடந்தது. இரண்டு மாதங்களுக்கு பின்னர், என் மகள் வீட்டிலேயே கர்ப்ப பரிசோதனை செய்தார். அது கர்ப்பத்தை உறுதி செய்யவில்லை. ஏற்கனவே, மாதவிடாய் காலதாமதம் பிரச்சனை இருந்தது. அப்போது, நாங்கள் எந்த ஒரு சிகிச்சையையும், முறையாக எடுக்கவில்லை.

திடீரென விமலாவிற்கு வயிற்று வலி, ஏற்பட்டு அவளை மகாலட்சுமி நர்சிங் ஹோம் மருத்துவமனைக்கு, அழைத்துச் சென்றோம். அப்போது, அங்கு விமலாவிற்கு வயிற்றை ஸ்கேன் செய்து பார்த்தார்கள். இரண்டு பக்கமும் கட்டி உள்ளது, தெரிய வந்தது. மகாலட்சுமி மருத்துவமனையிலேயே நாங்கள் சிகிச்சை பெற்று வந்தோம்.

மறுபடியும் விமலாவிற்கு தாங்க முடியாத, அளவிற்கு வயிற்று வலி ஏற்பட்டது. மகாலட்சுமி மருத்துவமனைக்கு, அழைத்துச் சென்றோம். அங்கு அவளுக்கு, குளுக்கோஸ் மற்றும் வலிக்கான மருந்து அனைத்தையும் செலுத்தினார்கள். அங்கு, அவளை பரிசோதித்துப் பார்த்ததில், கர்ப்ப பரிசோதனை உறுதி செய்யப்பட்டது. நாங்கள், மிகவும் மகிழ்ச்சி அடைந்தோம். என் மகளும் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தால், பரிசோதனையின் போது ரத்த அளவு 7.8ஆக இருந்தது 8/9/2023, காலை 6 மணி அளவில், திடீரென மயக்கம், ஆக்சிஜன் அளவு குறைந்தது. அங்குள்ள மருத்துவர்கள் அருகில் உள்ள மருத்துவமனைக்கு, பரிந்துரை செய்தார்கள்.

நாங்கள், எங்களது வாகனத்திலேயே அவளை அழைத்து சென்றோம். கூட ஒரு செவிலியரை அழைத்து, செல்வதற்கு அனுமதி பெற்று, மருத்துவமனைக்கு செல்லும் வழியிலேயே நிறைய மாற்றங்கள் ஏற்பட்டது. வாந்தி, மயக்கம், வயிற்று வலி, தலை சுற்றல் இது போன்ற மாற்றங்கள் ஏற்பட்டது.

உடலில் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதால், அருகிலுள்ள, தனியார் மருத்துவமனைக்கு, அழைத்துச் சென்றோம். அங்குள்ள, மருத்துவர்கள் சிகிச்சைகள் பரிந்துரை செய்தார்கள். எவ்வளவு முயற்சி செய்தும், விமலாவை காப்பாற்ற முடியவில்லை, எனக் கூறிவிட்டார்கள்.

அங்குள்ள மருத்துவர்கள் எங்களிடம் கூறும்போது, மிகவும் வேதனைப்பட்டோம். கர்ப்ப காலத்தில், என் மகளுக்கு இப்படி ஒரு நிலைமை ஏற்பட்டு விட்டது, என்பதை நினைத்து மிகவும் வேதனையாக இருக்கிறது.

தயவு செய்து, நீங்கள் இதைப் போன்று அலட்சியமாக இல்லாமல், ஒரு நோய் உள்ளது என்று கண்டறிந்தால் அதற்கு தேவையான சிகிச்சை, உரிய நேரத்தில் போய், மருத்துவமனையில் பார்த்து அதற்கான சிகிச்சை, முறைகளை எடுத்துக் கொள்ளுங்கள். என் மகளுக்கு ஏற்பட்ட இந்த நிலை வேறு யாருக்கும் வராமல் இருக்க நான் இறைவனை வேண்டிக்கொள்ளுகிறேன்........

## 44. எல்லாம் முடிந்த பின்

நிரந்தர குடும்ப நல முறைகளை பற்றி அறிந்து கொள்ளாமல், நான்கு குழந்தைகளையும் பெற்று, மகப்பேறு காலத்தில் உயர் மருத்துவமனைக்கு செல்லும் வழியில் இறந்து போன சுந்தரி பேசுகிறேன். எனக்கு நான்கு குழந்தைகளுமே அரசு மருத்துவமனை மூலம் நார்மல் டெலிவரி ஆக பிறந்த குழந்தைகள். எனது இரண்டாவது டெலிவரி பின் எனக்கு குடும்ப கட்டுப்பாடு செய்வதற்கு பாண்டிச்சேரி ஜிப்மர் உயர் மருத்துவ மருத்துவமனைக்கு அனுமதிக்க பட்டேன்.

ஆப்ரேஷன் தியேட்டரில் டேபிள் மீது படுத்தபோது எனக்கு மூச்சு திணறல், மற்றும், வலிப்பு ஏற்பட்டது. இதனால் எனக்கு குடும்ப கட்டுப்பாடு ஆபரேஷன் தடை பெற்றது. 5 வருடம் கழித்து மூன்றாவது முறை கருத்தரித்த போது எனக்கு இரட்டை குழந்தைகள் என்று ஸ்கேனில் பார்த்து மருத்துவர் கூறினார். அக்குழந்தைகளும் நார்மல் டெலிவரி மூலம் பிறந்தது. காப்பர் டி போட்டு வீட்டுக்கு அனுப்பி வைத்தனர்.7–வது வருடம் எனக்கு copper t remove பண்ண தனியார் மருத்துவமனைக்கு சென்றேன்.

அப்போது bleedingஅதிகமாயிடுச்சு. 32 நாள் கழித்து வந்த போது நான் கருவுற்றிருந்தேன். என்னை உயர் மருத்துவமனைக்கு கருக்கலைப்பு மற்றும் குடும்ப கட்டுப்பாடு செய்ய கிராம செவிலியர் மூலம் உயர் மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலமாக என்னை அனுப்பி வைத்தனர். அங்கு எனக்கு கருக்கலைப்பு செய்வதில் மிகவும் சிரமம் இருந்தது. அதனால் என் கர்ப்பத்தை தொடர வேண்டி இருந்தது.

அனைத்து கர்ப்பக்கால பரிசோதனைகளையும் ஆரம்ப சுகாதார நிலையத்தில் செய்துக்கொண்டேன். சீராக இருந்தது. திடீரென 8 மாதத்தில் மூச்சுத் திணறல் ஏற்பட்டது. உடனே உயர் மருத்துவமனைக்கு அழைத்து சென்று Echo, ECG, எடுத்துஇருதய டாக்டர் மற்றும் சுவாச மருத்துவர் பார்க்க பாண்டிச்சேரி JIPMER hospital 108 ambulance அனுப்பி வைத்தனர்.

Blood test, Hb 9.2 grm, மூச்சு விடுதலில் சிரமமும், கால் வீங்கி இருந்தது. நான் நலம் பெற்று வீட்டுக்கு செல்லும்போது O2, inhaler, உடன் இருக்க சுவாசிக்க வேண்டும் என்று மருத்துவர் கூறினார். ஆனால் மருத்துவரின் அறிவுரையை ஏற்காது அலட்சியமாக இருந்துவிட்டேன்.

குடும்ப கட்டுப்பாடு, கருத்தடை சாதனம், பற்றி தெரிந்து கொண்டு, நாம் இருவர் நமக்கு இருவர் என்று அரசின் கொள்கைகளை பின்பற்றி இருந்தால் நான் என் குடும்பத்துடன் மகிழ்ச்சியாய் வாழ்ந்திருப்பேன்.

## 45. மண்ணிலிருந்து விண்ணிற்கு

குழந்தை பெறுவதில் ஆர்வமும், உடல் நிலையை பற்றி அறியாமையினாலும் 24 வயதில் இறந்து போன கமலம் பேசுகிறேன். நான் மூன்று முறை கருத்தரித்தேன். எனது முதல் குழந்தை மூன்று மாதத்தில் abortion ஆனது. எனது இரண்டாவது கர்ப்பமும் மூன்று மாதத்தில் கலைந்தது. அருகிலுள்ள Bodo GH Check up செய்து கொண்டேன். எனக்கு Heart disease உள்ளதாக,1 வருடம் முன்பே தனியார் மருத்துவமனையில் மருத்துவர் கூறினார். EHCO, மற்றும் இதய சம்பந்தமான, பரிசோதனைகளையும், செய்து மருந்துகளும் மாத்திரைகளும் கொடுத்து அனுப்பினர். எனது கிராம செவிலியரிடமும் என்னுடைய உடல்நிலையை பற்றி கூறினர்.

1 வருடம் கழித்து நான் மீண்டும் கருவுற்றேன். எனக்கு மூச்சுத் திணறல் இருந்தது. உடனே கிராம சுகாதார செவிலியர் இடம் நான் அலைபேசியில் பேசினேன். அவர் அருகிலுள்ள GH க்கு செல்லும்படி கூறினார். அங்கு UPT card test, Hb test, Urine test செய்தார்கள்.

அதில் எனக்கு ரத்தம் குறைவாக இருந்தது. அன்றே உயர் மருத்துவமனைக்கு என்னை அழைத்து சென்றனர். அங்கு நான் அட்மிட் செய்யப்பட்டேன். அங்கு பரிசோதனை செய்ததில் ரத்தம் குறைவாக இருந்தது, மற்றும் சிறுநீரில் உப்பு அதிகமாக இருந்தது. கால் வீங்கி இருந்தது, மூச்சு விடுதலிலும் சிரமம் இருந்தது. இதயம் சம்பந்தப்பட்ட மருத்துவரிடம் ஆலோசனையும் கேட்கப்பட்டது.

ரத்தம் குறைவாக இருந்ததால் எனக்கு ரத்தம் ஏற்றினார்கள். ரத்தத் தட்டுக்களும் ஏற்றப்பட்டது. மூச்சு விடுதலில் நான் பெரிதும் சிரமப்பட்டேன். மருத்துவமனையில் ventilator ward ல் admit செய்தனர். அன்று காலை என் உயிர் பிரிந்தது.

குழந்தை பெறுவதில் ஆர்வமும், உடல் நிலையை பற்றி அறியாமலும், என்னுடைய பேராசையால் என்னுயிர் என்னை விட்டு பிரிந்தது. என் போல் இதய நோய் உள்ள பெண்கள் குழந்தை பெறுவதற்கு முன் மருத்துவரின் ஆலோசனையை, கேட்டு உடல் பரிசோதனை செய்து கொண்டு குழந்தை பெற்றுக் கொள்ளுங்கள்.

## 46. விதியின் விளையாட்டு

என்னுடைய பெயர் விசித்ரா வயது 33 எனக்கு திருமணம் ஆகும் போது என்னுடைய வயது 22, திருமணத்துக்குப் பிறகு நானும் என் குடும்பம் ஸ்ரீபுரத்தில் வசித்து வந்தோம். என் இனிமையான குடும்ப வாழ்க்கைக்கு அர்த்தமாக ஒரு அழகிய ஆண் குழந்தையை மும்பையில் பெற்றெடுத்தேன்.

வாழ்க்கை அமைதியான ஓடமாக அழகாக ஓடிக்கொண்டிருந்தது மீண்டும் கர்ப்பம் ஆனேன். மனது ஆனந்தம் அடைந்தது ஆவலும் அதிகரித்தது. ஆனால் அந்த ஆனந்தம் நீடிக்கவில்லை ஏனோ என் கரு மூன்று மாதத்திலேயே தானாக கலைந்து விட்டது. இந்தக் கவலையிலிருந்து மீண்டு வந்த நான் மீண்டும் கரு உற்றேன். ஏன் என்று புரியவில்லை இந்தக் கருவும் கலைந்து விட்டது இப்படியாக என் வாழ்வில் 10 வருடங்கள் கழிந்தது. பிறகு கடவுளின் ஆசியால் நான் மீண்டும் கர்ப்பம் அடைந்தேன்.

எனக்கு மாதவிடாய் தள்ளிப் போனதால் தனியார் மருத்துவமனையில் பரிசோதனை செய்ததில் என்னுடைய நாலாவது கர்ப்பம் உறுதி செய்யப்பட்டது. துணை சுகாதார நிலையத்தில் என்னுடைய கர்ப்பம் பதிவு செய்யப்பட்டது.

இரண்டு கருவை இழந்த எனக்கு இந்த குழந்தையை பாடுபட்டாவது ஆரோக்கியமாகப் பெற்றெடுக்க வேண்டும் என்ற ஆதங்கம் மனதில் ஓடிக்கொண்டே இருந்தது. ஆரம்ப சுகாதார நிலையத்தில் என் இரண்டாவது மாத பரிசோதனைகளை செய்து கொண்டேன் மேலும் போலிக் அமில சத்து மாத்திரைகள் வழங்கினார்கள்.

தனியார் மருத்துவமனையில் என் மூன்றாவது மாத பரிசோதனைகளை மேற்கொண்டேன். அதில் வழக்கமான பரிசோதனைகளுடன் தைராய்டு பரிசோதனை மற்றும் ஸ்கேன் பரிசோதனை செய்தார்கள். குழந்தை பற்றி தெரிந்து கொள்ள ஆர்வமாக இருந்த எனக்கு குழந்தையின் வளர்ச்சி நன்றாக உள்ளதை அறிந்து சற்று நிம்மதி அடைந்தேன் ஆனாலும் தைராய்டு பிரச்சனைக்காக சிகிச்சையை ஆரம்பித்தார்கள்.

தனியார் மருத்துவமனையில் பரிசோதனையின் போது என் குழந்தையின் வளர்ச்சி நன்றாக உள்ளதை அறிந்து மனம் ஆறுதல் அடைந்தது. ரத்த பரிசோதனை மற்றும் சிறுநீர் பரிசோதனைகளும் நன்றாக இருந்தது. கடவுளே இதை இப்படியே தொடர வேண்டும் என்ற பிரார்த்தனையும் மனதில் வந்து கொண்டே இருந்தது. ஏழாவது மாதத்தில் மீண்டும் தனியார் மருத்துவமனையிலும், ஆரம்ப சுகாதார நிலையத்திலும் ஸ்கேன் மற்றும் இதர பரிசோதனைகளை மேற்கொண்டேன்.

குழந்தை வளர்ச்சி மற்றும் பிற பரிசோதனை முடிவுகள் அனைத்தும் நன்றாக இருந்தது. மேலும் எனக்கு இருதயத்திற்கான Echo பரிசோதனை செய்யப்பட்டது. இந்த பரிசோதனை முடிவும் எந்த சிக்கலும் இல்லாமல் நன்றாக இருந்ததால் மனம் நிம்மதி அடைந்ததுடன் என் குழந்தையை ஆரோக்கியமாக பெற்றெடுக்க போகிறேன் என்ற நம்பிக்கை உருவானது.

என் மனதில் என் குழந்தைக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை என்ற நம்பிக்கை பிறந்தது, எனக்கு ஆறுதலாகவும் இருந்தது.

என் நம்பிக்கையை தளர்த்தும் வகையில் என் விதியின் விளையாட்டு ஒன்பதாவது மாத ஆரம்பத்தில் தொடங்கியது. மே மாதம் ஏழாம் தேதி மதியம் 12:30 அளவில் பிறப்புறுப்பில் இருந்து பழுப்பு நிற ஒழுக்கு மற்றும் அடி வயிற்று வலி மற்றும் இடுப்பு வலி போன்ற பிரச்சனைகளுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன்.

இதயம் வேகமாக துடிக்க ஆரம்பித்தது கை, கால்கள் படபடத்தது. மருத்துவமனை பரிசோதனையில் கணுக்கால் வீக்கம் மற்றும் உயரத்தழுத்தம் கண்டறியப்பட்டது. குழந்தையின் இதயத் துடிப்பு நன்றாக இருந்ததால் நான் வரமாக பெற்ற என் பிள்ளையை எப்பாடுபட்டாவது பெற்றெடுக்க வேண்டும் என்ற ஆதங்கம் மனதில் ஓடிக்கொண்டே இருந்தது.

ஆரம்ப சுகாதார நிலையத்தில் உயர் ரத்த அழுத்தத்திற்கான சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டு 108 அவசர ஊதியம் மூலம் மெடிக்கல் காலேஜ் மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தார்கள். ஆனால் பிரச்சனை பெரிதாக இருப்பதால் தரமான சிகிச்சை தனியார் மருத்துவமனையில் கிடைக்கும் என்ற எண்ணத்தில் தனியார் மருத்துவமனைக்கு சென்று விட்டேன்.

அங்கு மருத்துவர்கள் பரிசோதனை மேற்கொண்டு குறைபிரசவம் ஏற்பட வாய்ப்பு உள்ளதால், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அங்கிருந்து மீண்டும் பரிந்துரை செய்தார்கள். என்ன நடக்குமோ என்ற பயமும் வேதனையும் கவலையும் என் இதயத்தை பலவீனம் ஆக்கியது. மனதோ கடவுளிடம் மன்றாடிக் கொண்டிருந்தது.

எனக்கு ரத்த பரிசோதனைகளும் மற்றும் சிறுநீர் பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டு, குழந்தைக்கான நுரையீரல் பலப்படுத்தும் மருந்தும் வழங்கப்பட்டது. பிரசவ வலி தானாக ஏற்பட்டதால் குறை பிரசவத்தில் 3 கிலோ அளவில் எனக்கு பெண் குழந்தை பிறந்தது. நான் கேட்ட வரமான என் குழந்தையை பெற்றெடுத்த நிம்மதி ஏற்பட்டது. தொடர்ந்து என்னை பிரசவ பிற்கால கவனிப்பிற்கான வார்டில் வைத்திருந்தார்கள் குழந்தையும் என்னையும் தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டு குழந்தையின் ரத்த சர்க்கரை அளவு கண்காணிக்கப்பட்டு வந்தது.

சுகப்பிரசவம் ஆகிவிட்டது, எனவே பெரிய கண்டத்தை தாண்டி விட்டோம் என்று நிம்மதி அடைந்த என் இதயத்தில் பேரிடி விழுந்தது.

ஏனென்றால் எனக்கு திடீரென்று மூச்சு திணறல் ஏற்பட்டது. என் சுயநினைவு இழந்தேன் வலியினை உணர முடியவில்லை, என்னை காப்பாற்றுங்கள் காப்பாற்றுங்கள் என்று என் மனம் துடித்துக் கொண்டிருந்தது.

மருத்துவ பரிசோதனையிலோ நாடி துடிப்பு ரத்த அழுத்தம் ரத்தத்தில் பிராண வாயு அளவு இவை எதுவுமே மருத்துவர்களால் உணர முடியவில்லை. அனைத்து அவசரகால மருந்துகளும் வழங்கப்பட்டது. செயற்கை சுவாச கருவியும்

பொருத்தப்பட்டது. இத்தனை முயற்சிகளுக்குப் பிறகு துடிக்க ஆரம்பித்த என் இதயம் மீண்டும் தன் செயல்பாட்டை நிறுத்தியது.

மருத்துவர்களின் பெரும் முயற்சிக்குப் பிறகு மீண்டும் என் இதயம் துடிக்க ஆரம்பித்தது அதுவும் நிலைக்கவில்லை. மாலை 8.20 மணி அளவில் மீண்டும் மாரடைப்பு ஏற்பட்டது. மருத்துவர்களின் விடா முயற்சியுடன் என் இதயத்தை துடிக்க வைக்க செயல்பட்டார்கள் என் விதியின் விளையாட்டு முடியும் தருவாயோ என்னவோ, மாலை 9.05 மணி அளவில் நான் இறந்து விட்டதாக அறிவித்தார்கள்.

என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. கடவுளே நான் கேட்ட வரத்தை கொடுத்த நீ என்னையே பதிலுக்கு உன்னிடம் எடுத்துக்கொண்டு என் கடனை தீர்த்துக் கொண்டாயோ!

## 47. மகளே...... என் மகளே

மாணிக்கம் தன் மகள் மீனாவை தன் மடியில் கிடத்தியிருந்தார். 16 வயது பெண் உயிர்ப்புடன் இருந்து தன் மகள் உயிரற்ற உடலாய் இருப்பதைக் கண்டு உணர்வற்று உறைந்து போயிருந்தார். உயிரற்ற உடல் கனமானதோ இல்லையோ.. மரணம் கனமானது. ஒரு சொட்டு கண்ணீர் வரவில்லை. துயரத்தின் எச்சம் கண்ணீர். துயரத்தின் உச்சம் மவுனமான மன இறுக்கம். இறுக்கம் போயிருந்தார் மாணிக்கம்.

மாணிக்கம் விவசாயத்தை வைத்து வாழ்பவர் மூன்று மகள்கள், மீனா நடுவில் பிறந்தவள். பக்கத்தில் உள்ள அரசுப்பள்ளியில் 9-ம் வகுப்பு வரை படித்தவள். பத்தாம் வகுப்பில் படிக்க வேண்டியவள் பிணமாய் படுத்துக்கிடக்கிறாள்.

மாணிக்கத்தின் தங்கை ராஜேஸ்வரி, மீனா வயதுக்கு வந்த நாள் முதலே தன் மகளுக்கு கல்யாணம் செய்து வைத்துவிடும்படி வற்புறுத்தி வந்துள்ளான்.

ராஜேஸ்வரி புற்றுநோய் பாதித்தவள் அதனால் தான் உயிரோடு இருப்பதற்குள், மகளின் திருமணத்தை நடத்திவிட வேண்டுமென ஒற்றைக்காலில் நின்று வெற்றியும் பெற்றுவிட்டாள். மீனா தான் படித்தே தீருவேன் என்று நடத்திய போராட்டம் பொடிப்பொடியாக போனது.

மீனாவின் பள்ளி ஆசிரியர் தங்கராஜன் கூட அவள் தந்தையிடம் வந்து அவளுக்காக பலமுறை பேசியதும் பலனளிக்கவில்லை. 18 வயதுக்கு கீழ் பெண் குழந்தைக்கு திருமணம் செய்வது சட்டப்படி குற்றம் என்று கூட எச்சரித்தார்.

மாணிக்கமும், ராஜேஸ்வரியும் மகன் வேலை செய்யும் இடமாகிய சேலத்தில் சத்தமில்லாமல் திருமணத்தை அரங்கேற்றினர் பின் சேலத்திலிருந்து 20 கிலோமீட்டர் தூரத்தில் செட்டிப்பட்டி கிராமத்தில் மீனா வாழ்க்கை தொடர்ந்தது. மூன்றே மாதத்தில், மீனா கர்ப்பம் என்ற செய்தி குடும்பத்தை குதூகலக்க வைத்தது.

கணவன் ரமேஷ் மீனாவை அருகிலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அழைத்துச் சென்று பதிவு செய்தான். மருத்துவர்கள் பரிசோதித்து சத்து மாத்திரைகள் கொடுத்து, உணவுக்கான அறிவுரைகளையும் வழங்கினர். தடுப்பூசி போட்டுக் கொள்வதற்கு ஊரையே கூட்டும் அளவிற்கு குழந்தை மாதிரி ஆர்ப்பாட்டம் செய்துவிட்டாள். ஒரு குழந்தையை தன் வயிற்றில் சுமக்கும் மீனா, வயதுக்கேற்ற குழந்தைத்தனத்துடனும், வாலிப்புடனும், வலிமையுடனுமே இருந்தாள்.

மாணிக்கமும் அவர் மனைவியும் ஓரிரு முறைகள் வந்து பார்த்துவிட்டு சென்றனர். ராஜேஸ்வரியும், ரமேசும் அவளை நன்றாக பாசத்துடன் வைத்திருப்பதில் பூரிப்படைந்தார்கள். மாணிக்கம் தன் மகளை பிரசவத்திற்கு தன்

வீட்டிற்கு அழைத்து செல்ல முயற்சித்தும் 9–ம் மாதமே ராஜேஸ்வரி அனுப்பி வைத்தாள். வளைகாப்பும் நடத்தினார்கள். அருகில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் கவனிப்பு தொடர ஆரம்பித்தது. மருத்துவர்கள் அதிர்ச்சி தகவலாய் இரத்தமே இல்லை. பனிக்குடத்தில் நீர் குறைவாக இருக்குது. குழந்தையும் சரியா எடை கூடவில்லை. என அடுத்தடுத்து அடுக்கினர்.

மாணிக்கத்திற்கு மெல்ல புரிய ஆரம்பித்தது. தனது மகளின் குழந்தைத்தனத்தினால் மாத்திரை, மருந்து, சத்தான உணவு என எதையும் ஒழுங்காக மேற்கொள்ளவில்லை என்பது. சில நாட்களிலேயே பிரசவ வலியும் சேர்ந்து கொண்டது. அரசு மருத்துவமனைக்கு மீனா பிரசவத்திற்காக அனுப்பப்பட்டாள். மாணிக்கம் அந்த மருத்துவமனையில் அவள் அனுமதிக்கப்படும் போது, அவளது கால்கள் வீங்கியிருப்பதைக் கண்டார். மகள் எப்படியாவது நல்லமுறையில், பிரசவித்து வீடு திரும்ப வேண்டுமென்ற வேட்கை மனதில் இடைவிடாது ஒலித்துக்கொண்டே இருந்தது.

மருத்துவர்களும் செவிலியர்களும், தீவிரமாய் கவனித்தார்கள், கண்காணித்தார்கள் அந்த நிமிடமும் வந்தது. மகள் இன்னொரு மகளை பெற்றெடுத்தாள் என்ற மகிழ்ச்சி செய்தியை மாணிக்கம் கொண்டாடினார். மனதுக்குள் மகளைப் பார்க்க வேண்டுமென்ற உந்துதல், இரண்டு மணி நேரமாகியும் மீனா பிரசவ அறையிலிருந்து வெளிவரவில்லை மருத்துவர்களும், செவிலியர்களும் மாறி மாறி ஓடிக்கொண்டேயிருந்தனர். மீனாவுக்கு வலிப்பு வந்துவிட்டதாக தெரிவித்தனர். துவண்டு போனார் மாணிக்கம். மீண்டும் ஒரு நிமிடம் வந்தது. அது மீனாவின் மரண செய்தியை தாங்கி வந்தது.

மீனாவை மடியில் தாங்கியிருந்த மாணிக்கத்தின் அருகில் வந்தமர்ந்தார் அவளின் ஆசிரியர் தங்கராஜன். அவருடைய பார்வையே சொன்னது எதையும் காதுல வாங்காம விட்டுட்டியே மாணிக்கம் "என்று" மாணிக்கம் மெதுவாய் வாய்திறந்து எங்கள் அறியாமை அவளை கொன்றுவிட்டது.

அவளுடைய குழந்தைத்தனம் அவளை கூறுபோட்டுவிட்டது அவளை சொல்லி தப்பில்லை. அவள் குழந்தை தானே, அரசாங்கம் சரியாதான் சொல்லும் 18 வயசுக்கு கீழே பெண்ணுக்கு கல்யாண வாழ்க்கைக்கான உடல் முதிர்ச்சியும், மன முதிர்ச்சியும் இருக்காதுனு. நாங்கதான் சொந்தம் விட்டு போயிடக் கூடாதுனு தப்பா முடிவெடுத்துட்டோம்.

மேலே மேலே படிக்கனும்னு நினைச்சவ வாழ்க்கையை எங்க அறியாமையினால் முடிச்சு வைச்சுட்டோம் என்று கனத்த வார்த்தைகளை உதிர்த்தார் மாணிக்கத்தின் கண்களில் ஒரு சொட்டு கண்ணீர் எட்டிப்பாத்தது இப்போது.

## 48. வெறுமையும் தனிமையும்

எனது பெயர் நீரஜா, வயது 22, எனது கணவர் பெயர் ரோகித், நான் கர்ப்பமாக இருப்பதாக உணர்ந்தேன். இது எனது முதல் கர்ப்பம் என்பதால் எங்கள் ஊரைச் சேர்ந்த கிராம சுகாதார செவிலியரிடம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் எனது கர்ப்பத்தை பதிவு செய்தேன்.

எனது கடைசி தூரமான தேதி 18.06.2023. நான் 08.08.2023 அன்று அரசு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு முதன் முறையாக சென்றேன். அப்பொழுது எனக்கு இரத்த பரிசோதனைகள் மற்றும் இரத்த அழுத்தம், எடை, உயரம், சிறுநீர் பரிசோதனைகள் அனைத்தும் செய்தார்கள். எனக்கு சத்து மாத்திரைகள் கொடுத்தார்கள்.

தைராய்டு டெஸ்ட் பரிசோதனை செய்த பிறகு அனைத்தும் சரியாக உள்ளது என்றும் இரத்த அழுத்தம் 90/60,hb10.2 gm இருக்கிறது என்று கூறினார்கள். பிறகு குழந்தையின் வளர்ச்சி, நன்றாக இருப்பதாக கூறினார்கள்.

எனக்கு பரிசோதனை செய்ததில் எனக்கு ஹிமோகுளோனோபதி என்ற நோய் இருப்பதாக கூறினார்கள். அதனால் எனது கணவருக்கும் பரிசோதனை செய்யவேண்டும் என்று கூறினார்கள். அவர்கள் கூறியதுபோல், என் கணவருக்கும் பரிசோதனை செய்து அவருக்கும் சிக்கிள் செல் டிரெய்ட் இருப்பதாக கூறினார்கள். என்னையும் என் கணவரையும், பெரிய ஆஸ்பத்திரிக்கு கூட்டிச்சென்றார்கள்.

அங்கு எங்கள் இருவருக்கும் தொந்தரவு இருப்பதால் ஆம்னியோசென்தசிஸ் என்ற பரிசோதனையை செய்து வயிற்றில் இருக்கும் குழந்தைக்கும் ஹிமோகுளோபினோபதி நோய் இருக்குமோ என்று பார்க்குமாறு அறிவுரை கூறினார்கள். நாங்கள் இருவரும் பரிசோதனை செய்ய மறுத்துவிட்டோம். அதனால் பிரைவேட் கிளினிக்கு சென்று எஸ்கேன் பார்த்து, குழந்தையின் வளர்ச்சி பற்றி தெரிந்துகொண்டோம்.

நஞ்சுக்கொடி இறக்கமாக இருப்பதாக கூறினார்கள். வலது மற்றும் இடது கர்ப்பப்பைக்கு செல்லும் இரத்தக் குழாயில் ஏதோ தொந்தரவு இருப்பதாகவும், அதற்கு ஆஸ்பிரின் மாத்திரை கொடுத்தார்கள். பிறகு மாதந்தோறும் தவறாமல், அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்று, டாக்டரிடம் பரிசோதனை செய்து கொண்டேன்.

அவர்கள் ஆஸ்பிரின் மாத்திரை தினமும் ஒரு வேளை எடுத்துக்கொள்ளுமாறும், எந்த கடினமான வேலையும் செய்யாமல் முற்றிலும் ரெஸ்டில் இருக்குமாறும், நஞ்சுக்கொடி இறக்கம் இருப்பதால் இரத்தப்போக்கு ஏற்பட வாய்ப்பு உள்ளதாக தெரிவித்தனர்.

எனக்கு திடீரென்று வயிறு வலி வந்ததால், அருகில் உள்ள ஆஸ்பத்திரிக்கு சென்றேன். நஞ்சு முழுவதுமாக இறக்கமாக இருந்ததால், என்னை பெரிய ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைத்தார்கள். இரண்டு நாள் தங்கி இருந்து சிகிச்சை பெற்று வீட்டிற்கு திரும்பினேன். 2 வாரங்கள் கழித்து பரிசோதனைக்கு வருமாறு கூறினார்கள். எனக்கு 31.12.23 அன்று காலை 6.30 மணிக்கு அதிகமான வயிற்றுவலி, சிறிதளவு உதிரப்போக்கு இருந்ததால், பெரிய ஆஸ்பத்திரிக்கு சென்றேன்.

எனக்கு இரத்தப்பரிசோதனை செய்தார்கள். அதன்பின் அங்கிருந்து என்னை மாலை 4 மணிக்கு அரசு மருத்துவக் கல்லூரிக்கு 108 ஆம்புலன்ஸ் மூலமாக அங்கு அனுப்பிவைத்தனர். அனுமதிக்கப்பட்டு, எனக்கு இரத்தப்பரிசோதனை, ஸ்கேன் எடுத்தார்கள். கர்ப்பப்பையில் பனிக்குடநீர் குறைவாக இருப்பதாக கூறினார்கள்.

2 நாள் கழித்து உதிரப்போக்கு ஏற்பட்டதால், மனது சிறிது கலக்கமாக இருந்தது குழந்தைக்கு ஏதாவது ஆபத்து ஏற்படுமோ என்று பயந்தேன். எனக்கு உடனடியாக இரத்தம் செலுத்தி, 02.01.2024 அன்று காலை 10 மணிக்கு, அறுவை சிகிச்சை செய்து, அழகான பெண் குழந்தை உயிருடன் பிறந்தது. அதன் எடை 910 கிராம். மட்டுமே இருந்தது. எனக்கு உடம்பில் சில தொந்தரவுகள் இருந்ததால் என்னை அவசர சிகிச்சை பிரிவிற்கு மாற்றி அனைத்து இரத்தப் பரிசோதனைகளும் செய்து, உயர்சிகிச்சை அளித்தார்கள். இரத்தம் ஏற்றினார்கள், சிறுநீரின் அளவு குறைந்துகொண்டே சென்றது. வயிறு வீங்கியதுபோல் இருந்தது. மூச்சுவிட சிரமமாக இருந்தது. எனக்கு செயற்கை சுவாசம் செலுத்தினார்கள், சிறுநீரகப் பிரச்சினையினால், டையாலிஸிஸ் செய்தார்கள்.

ஆனால் 02.01.2024 அன்று இரவு 10 மணியளவில் இரத்த அழுத்தம் குறைவாக இருந்தது. ஊசி மருந்து கொடுத்தும் அதிகமாகவில்லை. 11 மணியளவில் எனக்கு மாரடைப்பு ஏற்பட்டு நான் இம்மண்ணுலகை விட்டு விண்ணுலகம் சென்றுவிட்டேன்.

ஆகையினால் தாய்மார்களே, நான் மருத்துவர்கள் ஆரம்பத்திலே கூறிய அறிவுரைப்படி செயல்பட்டிருந்தால், இந்நேரம் நான் உயிரோடு இருந்திருப்பேன். என் கணவர் என்னை இழந்து தனிமையில் இருந்திருக்க மாட்டார் என் கதையை உங்களிடமும் கூறத் தேவையில்லை.

### 49. காமாலை காலன்

சுவாதி 23 வயது உள்ள பெண் கருவுற்றிருந்தாள். கிராம செவிலியர் மூலம் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று மருத்துவரின் ஆலோசனையின் பேரில் அனைத்து கர்ப்ப கால பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டது.

அனைத்து பரிசோதனைகளும் நார்மலாக இருந்தது பிறகு அப்பெண்ணிற்கு தேவையான அனைத்து மாத்திரைகளும் வழங்கப்பட்டு சரியாக போடும்படி அறிவுறுத்தி அனுப்பி வைக்கப்பட்டது கூலி வேலை பார்ப்பவள் கட்டிட வேலை செய்யும் கூலிப்பெண் அப்பெண் அதிக நேரம் உணவை கடைகளில் வாங்கி சாப்பிடுவதை வாடிக்கையாகக் கொண்டிருந்தாள்.

இரண்டாவது மருத்துவ பரிசோதனையின் போது ரத்த அழுத்த அளவு சற்று அதிகமாக இருந்தது ரத்த அழுத்த அளவு 140/ 90mmHg, ஹீமோகுளோபின் 8g/dl ஆக இருந்தது மருத்துவர் அதற்கான சிகிச்சை அளித்து மருந்து மாத்திரைகளை சரியாக போடும்படி அறிவுறுத்தி அனுப்பி வைத்தார். மூன்றாவது பரிசோதனைக்கு வந்தபோது எட்டாவது மாதத்தில் பெண்ணின் கண்கள் மிகவும் மஞ்சளாக இருந்தது.

பரிசோதித்ததில் அப்பெண்ணிற்கு மஞ்சள் காமாலை இருப்பதை உறுதிப்படுத்தி பெரிய மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர் அங்கு ரத்த பரிசோதனையில் அப்பெண்ணிற்கு hepatitis A வைரஸ் தொற்று உள்ளது என்று கண்டறியப்பட்டது. அப்பெண்ணை விசாரிக்கும் போது அதிகமாக சுகாதாரமற்ற கடைகளில் உணவை வாங்கி சாப்பிட்டதே கல்லீரல் பாதிப்புக்கு காரணம் என்று கண்டறியப்பட்டது.

திடீரென்று பெண்ணுக்கு கல்லீரல் செயலிழப்பு ஏற்பட்டு மூச்சுத் திணறல் ஏற்பட்டதால் தீவிர சிகிச்சை பிரிவுக்கு அழைத்துச் செல்லப்பட்டாள் அங்கு சிகிச்சை பலனின்றி உயிர் இழந்தாள்.

இறப்புக்கு காரணம்

சுகாதாரமற்ற கடை உணவு அடிக்கடி எடுத்துக் கொண்டது அதனால் hepatitis A கிருமி தொற்று ஏற்பட்டு கல்லீரல் செயலிழப்பு ஆனதால் கூடவே இதய செயலிழப்பும் ஏற்பட்டு மூச்சு திணறல் ஏற்பட்டு உயிர் இழக்க நேர்ந்தது.

## 50. மௌன கேள்வி

என் தோழி வாணி வசதியான குடும்பத்தில் பிறந்தவள். 45 வயதாகிறது. அவளோடு பிறந்த தங்கைகள் இரண்டு பேர். இருவரும் இவளுக்கு இளையவர்களே. ஒரு தம்பியும் கூட இருக்கிறான். அப்பா, அம்மா இருவருமே அரசாங்க வேலையில் உயர் பதவியில் இருப்பவர்கள். தங்கைகள், தம்பி அனைவரும் திருமணமானவர்கள்.

வாணியின் கணவன் கணேஷ் ஐ.டி துறையில் வேலை செய்பவன். வாணிக்கு திருமணத்தின்போது 25 வயது.

நல்ல வரனை விட்டுவிட மனமில்லாமல் வாணியின் தந்தை சட்டென திருமணத்தை முடித்துவிட்டார். வாணிக்கோ மேல் படிப்பு படிக்க வேண்டுமென்ற ஆசை. தனக்கு திருமணம் நடப்பது தான் தன் தங்கைகளுக்கு வழிவிடும் வழி என நினைத்து ஒத்துக்கொண்டாள் அவளும்.

அவளுக்கும் கணேஷனை பிடித்துப்போனது கூடுதலாய் திருமணத்திற்கு சம்மதிக்க வைத்தது அவளை. கணேஷ் அவர்களின் குடும்பத்தின் கடைசி பையன். அவனது அக்காளிற்கும், அண்ணனுக்கும் திருமணமாகி குழந்தைகளோடு சென்னையில் செட்டிலாகி விட்டார்கள். குடும்ப பொறுப்பினை தன் மகள் சுமக்க வேண்டியதில்லை என்பதையும் கணக்கில் எடுத்துக்கொண்டு வாணிக்கு கணேஷனை தேர்நதெடுத்தார் வாணியின் தந்தை. திருமணமான ஒரு வருடத்திலேயே கர்ப்பமானாள், வாணி.

குடும்பமே கொண்டாடியது. ஆனால், அந்த மகிழ்ச்சி நீண்டநாட்கள் நிலைக்கவில்லை. நான்காவது மாதத்திலேயே கரு கலைந்து போனது. கதறி அழுதாள் வாணி. கணேஷும், குடும்பமும் கலங்கியது.

மருத்துவர்கள் அனைத்து பரிசோதனைகளையும் செய்து, 'உங்களுக்கு குழந்தை மீண்டும் முழுமையாய் பிறக்க வாய்ப்புள்ளது' என வாணியையும் கணேசையும் ஆறுதல் படுத்தினர்.

மூன்று வருட இடைவெளிக்கு பிறகு மீண்டும் கருத்தரிப்பதற்கான முயற்சிகள் மேற்கொண்டனர் தம்பதியர். மேலும் ஒரு வருடம் கடந்தும் பலனேதுமில்லை. 30 வயதை கடந்துவிட்டாள் வாணி. அதற்குள் இரண்டு தங்கைகளுக்கு திருமணம் முடிந்து அவர்களுக்கும் குழந்தை பிறந்துவிட்டது.

வாணியின் மனதில் இவை பொறாமையை ஏற்படுத்தாவிட்டாலும், கவலையையும், பதட்டத்தையும் ஏற்படுத்த செய்தன. கணேஷும், வாணியும் பல மருத்துவமனைகளின் படிகளை ஏறி இறங்கினர்.

பலன் ஏதும் கிடைப்பது போல் தெரியவில்லை. அப்படி, இப்படி என 35 வயதை தொட்டுவிட்டாள் வாணி. செயற்கை கருத்தரிப்பு முறையை மேற்கொள்ள மருத்துவர்கள் அறிவுறுத்தினர். மூன்று முறை செயற்கை கருத்தரிப்பு நிகழ்த்தப்பட்டது.

ஏவ்வொரு முறையும் நம்பிக்கையுடன் ஆரம்பித்து கடைசியில் நொறுங்கி போய் நின்றதுதான் மிச்சம். இப்போது 41 வயதை தாண்டிவிட்டாள் வாணி. தொடர்ந்து முயற்ச்சித்து செயற்கை முறையில் கரு தரித்தாள். தனியார் மருத்துவமனையிலேயே தொடர்ந்து அனைத்து பரிசோதனை மற்றும் சிகிச்சை எடுத்துக்கொண்டாள்.

கர்ப்பக்காலத்தில் இரத்தக் கொதிப்பும், சர்க்கரை நோயும் அவளை பாடாய் படுத்தியது. அனைத்தையும் தாங்கிக் கொண்டு குழந்தை ஒன்று வேண்டும்மென்ற பிடிவாதத்தில் அனைத்து சிசிச்சையும் மேற்கொண்டாள். ஆனால் அவளின் 6வது மாதத்தில் எதிர்பாராத விதமாக உதிரப்போக்கு ஏற்பட்டு தனியார் மருத்துவ மனையில் உரிய நேரத்தில் சிகிச்சை அளித்தும் பலனின்றி உயிரிழந்தாள்.

என் நிலை போன்றே என் தோழியின் நிலையும் ஆனது. தோழிகளே விழித்திருங்கள் செயற்கை கருவுறுதலில் கவனத்துடன் செயல்படுங்கள்.

### 1. நெருங்க வீடாதீர்

வயது 23
பருவ மங்கை நான்
முதல் குழந்தைக்கு
வயதோ இரண்டரை!
இரண்டாம் கர்ப்பம்
மாதத்தில் கலைய 2
மூன்றாம் முறை நான்
கருத்தரித்தேன்
எனது ஊர் HSC– ல்
என் கர்ப்பத்தை
பதிவு செய்தேன்
GOVT PHC – யிலும்
PVT நர்சிங் ஹோமிலும் பரிசோதனைகள் பல
செய்து கொண்டேன் !
வாரத்தில் 16
நள்ளிரவு மணிக்கு 12
கடும் வயிற்றுவலி
என்ற காலன்
என் வீட்டு கதவைத் தட்ட
அஜீரணக் கோளாறுஎன
அஜாக்கிரதையாக
இருந்துவிட்டு
இரண்டு மணி நேரம் காலதாமதமாய்
அருகில் இருந்த
ஆரம்ப சுகாதார
நிலையத்தை அடைய
கருக்குழாயில்
குழந்தை கருத்தரித்து வெடித்திருக்கலாமோ
என்ற ஐயத்தில்
மருத்துவக் கல்லூரி
மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டேன்!
வலி பொறுக்காது
போகும் வழியிலேயே
என் உயிர் பிரிந்ததே?!
இந்த அழகிய பூமியில்
நான் மட்டும் சுவாசிக்க
காற்று இல்லையா?
இறைவா !?
கருக்குழாயில் என்
குழந்தை வளர்ந்தது என் கருவின் குற்றமா?

நான் வயிற்று வலியால்
துடிதுடித்த போது
என்னை உடனே
மருத்துவமனைக்கு
அழைத்து செல்லாதது
என்னை கரம்
பிடித்த என்  காதல்–
கணவனின் குற்றமா?
இல்லை சுறுசுறுப்பாக
செயல்படாத
என் சுற்றத்தின்
குற்றமா?யார் குற்றம்?
நான்கு மாதத்தில்
கடுமையான வயிற்று வலி ஏற்பட்டால்
அது கருக்குழாய்
வெடிப்பாக இருக்கலாம்
என்ற விழிப்புணர்வு
என்னை போன்ற
கருவுற்ற தாய்க்கும்
எங்களை காக்கும்
மருத்துவ
பணியாளர்களுக்கும்
இந்த செய்தி
சென்று சேரட்டும்!!
மருத்துவத் துறையில்
மாற்றங்கள்
சில வரட்டும்!

**2. கருவறை கல்லறையா?**

முதுநிலை பட்டதாரியான
எனக்கு 32 வயதில் திருமணம்!
எட்டு வாரத்திலேயே
பதிவு செய்தேன்
என் முதல் கர்ப்பத்தை
பரிசோதனைகள்
பலவற்றையும்
தனியார்
மருத்துவமனையில்
செய்து கொண்டேன்
பத்து வாரத்தில்
PHC யிலும்
12 16 20 24 வாரத்தில்
தனியார் மருத்துவமனையிலும்
BP /எடை/ HB/சிறுநீர் புரதம் ஆகிய
பரிசோதனைகளை செய்து கொண்டேன்
அனைத்தும் சீராய் இருந்தன
24 வாரத்தில்
என் எடை கூடியது பிபி அதிகமானது
உயர் ரத்த
ரத்த அழுத்தத்திற்கு
Labetalol மாத்திரை
எனக்கு கொடுக்கப்பட்டது
அடுத்த 2 நாட்களில்
எனக்கு வளைகாப்பு வைபவம்
பிபி யையும்
மறந்தேன்
பிபி மாத்திரையையும்
மறந்தேனே நான்
மறுவாரம்
இரவு 11 மணி அளவில்
நெஞ்சு எரிச்சல்
மூச்சுத் திணறல் ஏற்பட்டு
அருகில் உள்ள
அரசு ஆரம்ப சுகாதார
நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டேன்
உயர் ரத்த அழுத்தம்
காரணமாக

நுரையீரலில்
நீர் கோர்த்து
வீக்கமாக இருப்பதால்
உயிர் காக்கும்
உயர் சிகிச்சைக்காக
மருத்துவக் கல்லூரி
மருத்துவமனைக்கு அனுப்பி
வைக்கப்பட்டேன்
அதிதீவிர சிகிச்சை
அதிநவீன கருவிகள்
இருந்தும்
என் நிலைமை
எல்லை மீறிப் போனதால்
அழுகிய நிலையில்
என் அழகியகுழந்தை வெளியேற
சில  மணித்துளிகளிலேயே
அசைவற்ற
சடலமாய் நானும்
5கிலோ கூடிய எடையை
கூர்ந்து கவனித்து
இருந்தால் என் ஆவி
கூடு பிரிந்திருக்காதே
PHC _ யில் Magsulf
கொடுத்திருந்தால்
Maggots– க்கு நான்
இரையாகி இருக்கமாட்டேனோ?
முதல் வாரம்
வளைக்காப்பு என்ற பெயரில் எனக்கு
மலர்மாலை
மறு வாரமோ எனக்கும்
என் பிள்ளைக்கும்
மலர் வளையம்
வளைகாப்பில்
விதவிதமாய்
எண்ணை பட்சணங்கள்
BP– யையும் மறந்தேன்
BP– மாத்திரையும்
மறந்தேனே நான்!?
என் கருவறையையே
என் பிள்ளைக்கு
கல்லறையாக மாற்றிய பாவி ஆனேனே நான்.

**3. ஆசை – நிராசையே**

சிலிக்கான் வேலியில்
வியர்வை சிந்தி
என் தம்பி தங்கைகளை
கரையேற்றிய பின்
தாமதமாய்
ஒரு  திருமணம்
எனது 30 வயதினிலே
40 நாட்களிலே
முதல் கரு
கலைந்து போக
45 நாட்களில்
இரண்டாம் சிசுவும் சிதைந்து போக
மூன்றாம் முறை
கருத்தரித்தேன்– நான் களிபுற்றேன்
என் கிராமத்தில் உள்ள
ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு
மாதம் தவறாமல் பரிசோதனைக்குச்
சென்றேன்
குறைந்த ரத்த அளவும்
குறைவான எடையும்
இருந்ததால்
மருத்துவக் கல்லூரி
மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக
சில முறைசென்றேன்
பிரசவ வலி
ஏற்பட்டபோது
அரசு ஆரம்ப சுகாதார
நிலையத்திலேயே
அழகான
பெண் குழந்தையை
ஈன்றெடுத்தேன்
என் உதிரப்போக்கு
சில மணித்துளிகளில்
அதிகமாக
மேல் சிகிச்சைக்காக
மருத்துவக் கல்லூரி
மருத்துவமனைக்கு

அனுப்பி வைத்தனர்
மருத்துவக் கல்லூரி
வாயிலில்
உள் நுழைகையிலேயே
என் உயிர் பிரிந்தது
என் இதயம் நின்றதை
கேட்கும்போதே உங்கள்
இதயம் கனக்கிறது அல்லவா
நான் ஒரு
சிக்கலான கர்ப்பிணி
என்ற ஞாபகம்
உங்களுக்கில்லையா??
என்னை
சீக்கிரமே CEmONC
அனுப்ப வேண்டும்
என்ற சிந்தனை
உங்களுக்கு
வரவில்லையா??
இன்று...என் பயணம்
மயானத்தை நோக்கி
என் குடும்பத்திற்கு
இனி யார் சொல்வார்
சமாதானம்??
மலையளவு விஞ்ஞானம்
வளர்ந்த இந்த 21_ஆம்
நூற்றாண்டிலும்
எனக்கு நடந்த

PPH மரணம்
அஞ்ஞானம்(அநியாயம்)
அல்லவா?
என் குட்டியின்
ஜனனத்தை பார்த்த என் கண்களால்
அவள் நடனத்தை பார்க்கமுடியவில்லையே
மருத்துவ உலகிற்கு
இன்னும் தேவை கவனம்
என்கிறதோ
என் தகனம்?

### 4. திரும்ப முடியாத பயணம்

24 வயது

இளமங்கை நான்

பிப்ரவரி 25ஆம் நாள்

எங்கள் ஊர்

ஆரம்ப சுகாதார

நிலையத்தில்

அழகான பெண்

குழந்தையை

ஈன்றெடுத்தேன்

என் ரத்த அளவு

குறைவாக இருந்ததால்

ரத்த ஊசி போட

வேண்டும் என்றார்கள்

மூன்று முறை

போட்டுக் கொண்டேன்

அடுத்த நாள்

காய்ச்சல் வந்ததது

இதயம்

வேகமாய் துடித்தது

இரத்த அழுத்தம்

குறைந்து போனது

ஆக்சிஜனோடும்

ஆரம்ப சுகாதாரநிலைய

டாக்டர்/நர்ஸோடும்

ஆம்புலன்ஸில் பயணப்பட்டேன்

மருத்துவக் கல்லூரியை நோக்கி

அவசர சிகிச்சை பிரிவில்

அனுமதிக்கப்பட்டு

தீவிர சிகிச்சை பிரிவுக்கு

மாற்றப்பட்டு

உயிர் காக்கும்

உன்னத சிகிச்சையும்

செயற்கை சுவாசமும்

கொடுக்கப்பட்டது

நின்று போன

என் இதயம் மீண்டும்

உயிர்பிக்கப்பட்டது

வலுவிழந்த

என் இதயம்

மீண்டும் துடிக்க மறந்தது

என் உயிர் பிரிந்தது

வலிமை இழந்த

என் உடல்

எங்கள் தேசிய

நெடுஞ்சாலையில்

முதல் நாள்

அவசர ஊர்தி யிலும் மறுநாள்

அமரர் ஊர்தியிலும் பயணபட்டதே

பல மணி நேர

என் போராட்டம்

சில மணித்துளிகளில்

மாறிவிட்டதே

நானும் தினமணி

செய்தியாய்

ஆகிவிட்டேனே

நான் நேசித்த

என் கண்மணி

மண்ணுலகிலே

நானோ

விண்ணுலகிலே

இனி என் கண்மணியை

இமைப்போல் காப்பது யாரோ ?

மருத்துவ உலகம்

இதுபோன்ற

இழப்புகளை

தவிர்க்கட்டும்

**5. தடம் மாறிய தாலாட்டு**

இருபத்தெட்டு வயது

இளம் மங்கை நான்

2ஆம் முறை

இனிதே கர்ப்பமானேன்

கர்ப்ப கால நிகழ்வுகள்

எதுவுமே தெரியாத சிறு பிள்ளையாய்– less IQ

நான் இருந்தேனே

என் கருவோடு

சேர்ந்து நானும்

சிறு கிள்ளையாய்

வளர்ந்தேனே

மழைக்காக கூட

மருத்துவமனை பக்கம் ஒதுங்காத நான்

ஒரு அழகான பெண் குழந்தையை

என் இல்லத்திலேயே ஈன்றெடுத்தேன்?!

பிரசவத்திற்கு பின்

அங்கன்வாடி ஆசிரியரின் உதவியோடு

மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு

மருத்துவர்களால்

அனுப்பி வைக்கப்பட

குறைந்த

ரத்த அளவிற்காக குருதியேற்றப்பட

அந்த புதிய ரத்தத்தோடு

நான்கு நாட்கள்

ஒரு கடும் யுத்தம்

சத்தம் இன்றி

என் ஆவி கூடு பிரிந்ததே

ரத்தம் பற்றி மட்டுமல்ல

பிரசவம் பற்றியும் மொத்தமாய்

எனக்கு எந்த சித்த தெளிவுமில்லை

என்னை சித்த

தெளிவின்றி படைத்தது

பிரம்மனின் பிழையா?

கர்ப்ப காலத்தில்

என்னை மருத்துவமனைக்கு

அழைத்துச் செல்லாதது

என் தாயின் பிழையா?!

சிரத்தை மேற்கொண்டு

என்னை கண்டுபிடிக்காத

செவிலியரின் பிழையா

ஒவ்வாமை என்னை

மென்மையாய் தாக்காமல்

வன்மையாய் தாக்கியதோ??

செழுமை நிறைந்த

என் சேய்க்கும் தோழமை நிறைந்த

என் கணவனுக்கும் மிஞ்சியது என்னவோ

வெறுமையும் தனிமையும் மட்டுமே!!